# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**விளம்பர எண் :** 713

**அறிவிக்கை எண் :** 11 / 2025 **நாள் :** 15.07.2025

## ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – II (தொகுதி II மற்றும் IIA பணிகள்)

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - II (தொகுதி II மற்றும் IIA பணிகள்)-இல் உள்ள பதவிகளுக்கான நேரடி நியமனத்திற்கு விண்ணப்பங்கள் இணையவழி மூலம் மட்டும் வரவேற்கப்படுகின்றன.

**1. முக்கியமான அறிவுரைகள் :**

**1.1. தேர்வர்கள் தேர்வுக்கான தகுதியை உறுதி செய்தல்:**

அனைத்துத் தேர்வர்களும் தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in இல் உள்ள "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" மற்றும் இந்த அறிவிக்கையில் உள்ள அறிவுரைகளை கவனமாக படிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்கள் இத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவதற்கான அனைத்து தகுதி நிபந்தனைகளையும் அவர்கள் பூர்த்தி செய்ததை உறுதி செய்துகொள்ள வேண்டும். அவர்கள் தகுதி நிபந்தனைகளைத் திருப்திகரமாக பூர்த்தி செய்ததற்கு உட்பட்டு தேர்வின் அனைத்து நிலைகளிலும் அவர்களது அனுமதி முற்றிலும் தற்காலிகமானதாகும். முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, உடற்தகுதிச் சோதனை, நடைச் சோதனை, கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக தேர்வரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே, ஒரு தேர்வர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராக கருதப்பட மாட்டார். தேர்வரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ தேர்வாணைய அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன எனக் கண்டறியப்பட்டாலோ, எந்நிலையிலும், தெரிவு செய்யப்பட்ட பின்னர்கூட, விண்ணப்ப நிலையை உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.

**1.2. முக்கியமான நாட்கள் மற்றும் நேரம்:**

| | | |
|---|---|---|
| அறிவிக்கை நாள் | | 15.07.2025 |
| இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | | 13.08.2025 11.59 பி.ப |
| விண்ணப்பத் திருத்தச் சாளர காலம் | | 18.08.2025 12.01 மு.ப முதல் 20.08.2025 11.59 பி.ப வரை |
| முதல்நிலைத் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 28.09.2025 மு.ப | 09.30 மு.ப முதல் 12.30 பி.ப வரை |
| முதன்மைத் தேர்வு நடைபெறும் நாள் | முதல்நிலைத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும் போது வெளியிடப்படும் | |

**1.3. விண்ணப்பிப்பது எப்படி:**

**1.3.1. ஒருமுறைப் பதிவு மற்றும் இணைய வழி விண்ணப்பம்:**

தேர்வர்கள் www.tnpscexams.in எனும் தேர்வாணையத்தின் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். தேர்வர்கள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள ஒருமுறைப் பதிவு தளத்தில் (OTR) பதிவு செய்த பின்பு இத்தேர்விற்கான விண்ணப்பத்தினை நிரப்ப வேண்டும். தேர்வர்கள் ஏற்கனவே ஒருமுறைப்பதிவில் பதிவு செய்திருப்பின், அவர்கள் இத்தேர்விற்கான இணையவழி விண்ணப்பத்தை நேரடியாக பூர்த்தி செய்யத் தொடங்கலாம்.

**1.3.2. விண்ணப்பத் திருத்தச் சாளரம்:**

இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாளுக்குப் பின்னர், விண்ணப்பத் திருத்தச் சாளரம் 18.08.2025 முதல் 20.08.2025 வரை மூன்று நாட்களுக்கு செயல்பாட்டில் இருக்கும். இக்காலத்தில் தேர்வர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் உள்ள விவரங்களை திருத்தம் செய்ய இயலும். விண்ணப்பத் திருத்தச் சாளரக் காலம் முடிந்த பின்னர் இணையவழி விண்ணப்பத்தில் எந்தவொரு மாற்றத்தையும் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது.

**1.3.3 வனவர் பதவிக்கான விருப்பத் தெரிவு:**

தேர்வர்கள் இவ்வறிவிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தமிழ்நாடு வனச்சார்நிலை பணி மற்றும் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் ஆகியவற்றில் உள்ள வனவர் பதவிகளுக்கான தெரிவுக்கு பரிசீலிக்கப்பட வேண்டுமெனில், அவர்களது விருப்பத்தினை இணையவழி விண்ணப்பத்தில் பதிவு செய்ய வேண்டும். ஏனெனில் இப்பதவிகளுக்கான தெரிவுமுறையில் நடைச் சோதனையும் (Endurance Test) உள்ளடக்கியது.

1.3.4. எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதற்கான விரிவான அறிவுரைகள் மற்றும் தேர்வு மையங்கள் குறித்த விவரங்கள் இந்த அறிவிக்கையின் பிற்சேர்க்கை I -இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1.3.5. இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, தேர்வரால் எழுப்பப்படும் உரிமை கோரல்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**1.4. தடைசெய்யப்பட்ட பொருட்கள்:**

1.4.1. அலைபேசி (Mobile Phone), அகவி (Pager) அல்லது ஏதேனும் மின்னணு கருவி அல்லது நிரலாக்கம் செய்யப்பட்ட சாதனங்கள் (Programmable Devices) அல்லது விரலி (Pendrive), திறன் கைக்கடிகாரம் (Smart Watches) போன்ற சேமிப்பு மின் ஊடகம் (Storage Media), குறிப்பு நினைவகங்களை (Memory Notes) உள்ளடக்கிய கைக்கடிகாரம் மற்றும் குறிப்பு நினைவகங்களை (Memory Notes) உள்ளடக்கிய மோதிரம், இன்னும் பிற அல்லது புகைப்படக்கருவி அல்லது ஊடலை கருவிகள் (Bluetooth Devices) அல்லது தகவல் தொடர்பு சில்லுகள் (Communication Chips) அல்லது வேறு ஏதேனும் சாதனங்கள் அல்லது தகவல் தொடர்பு சாதனமாக பயன்படுத்தத்தக்க துணைக் கருவிகள் செயல்பாட்டிலோ அல்லது அணைக்கப்பட்ட நிலையிலோ தேர்வர்கள் தேர்வுக்கூடத்திற்குள் கொண்டுவர அனுமதியில்லை. P&G தரவுப் புத்தகம், கணிதம் மற்றும் வரையும் கருவிகள், மடக்கை அட்டவணைகள், படியெடுக்கப்பட்ட வரைபடங்கள், புத்தகங்கள், நகரி (Slide Rules), குறிப்புகள், கையேடுகள், தாள்கள் (Loose Sheets and Rough Sheets), கைப்பைகள் போன்ற மின்னணு கருவிகள் அல்லாதவற்றையும் தேர்வர்கள் தேர்வுக்கூடத்திற்குள் கொண்டுவர அனுமதியில்லை.

1.4.2. அவ்வாறான தடை செய்யப்பட்ட பொருட்கள் அல்லது கருவிகள் வைத்திருப்போர்கள் கண்டறியப்பட்டால், தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். மேலும், தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர். தேவை எனக் கருதப்படின் அவ்விடத்திலேயே சோதனைக்கு (உடற்சோதனை உட்பட) உட்படுத்தப்படுவர்.

1.4.3. தேர்வர்கள் அவர்களின் சொந்த நலன் கருதி கைப்பேசி உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்களைத் தேர்வு கூடத்திற்கு எடுத்துவரவேண்டாம் என அறிவுறுத்தப்படுவதுடன் அப்பொருட்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**2. எச்சரிக்கை:**

2.1. தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் தேர்வரின் தர வரிசைப்படியே மேற்கொள்ளப்படுகின்றன. பொய்யான வாக்குறுதிகளை சொல்லி, தவறான வழியில் வேலை வாங்கித் தருவதாக கூறும் இடைத்தரகர்களிடம் மிகவும் கவனமாக இருக்குமாறு தேர்வர்களைத் தேர்வாணையம் எச்சரிக்கிறது. இது போன்ற தவறான மற்றும் நேர்மையற்றவர்களால் தேர்வர்களுக்கு ஏற்படும் எவ்வித இழப்புக்கும் தேர்வாணையம் எந்தவிதத்திலும் பொறுப்பாகாது.

2.2. இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்துத் தகவல்களுக்கும் தேர்வரே முழுப் பொறுப்பாவார். தேர்வர்கள், தேர்விற்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்போது, ஏதேனும் தவறு ஏற்படின், அதற்கான இணைய சேவை மையங்களையோ / பொது சேவை மையங்களையோ குற்றம் சாட்டக் கூடாது. தேர்வர்கள் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர் நன்கு சரிபார்த்த பின்னரே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. பதவிகள் மற்றும் காலிப் பணியிடங்கள்:

3.1. தொகுதி-II பணிகள்

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | பணியின் பெயர் | துறை / அமைப்பின் பெயர் | காலிப் பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1. | உதவி ஆய்வாளர் | 1068 | தமிழ்நாடு தொழிலாளர் சார்நிலைப் பணி | தொழிலாளர் | 6 | நிலை 18 (ப.ஓ.தி) |
| 2. | இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (மாற்றுத் திறனாளி அல்லாதவர்) | 1017 | தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி | 1 | |
| 3. | இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (மாற்றுத்திறனாளி) | 2203 | | | 1 | |
| 4. | நன்னடத்தை அலுவலர் | 1011 | தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு சார்நிலைப் பணி | குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் | 2 | |
| 5. | நன்னடத்தை அலுவலர் | 1023 | தமிழ்நாடு சிறை சார்நிலைப் பணி | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் | 3 | |
| 6. | சார் பதிவாளர், நிலை-II | 1071 | தமிழ்நாடு பதிவு சார்நிலைப் பணி | பதிவு | 6 | |
| 7. | தனிப்பிரிவு உதவியாளர் | 2279 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | சென்னை மாநகர காவல் | 3 | |
| 8. | தனிப்பிரிவு உதவியாளர் | 3116 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | குற்றப் புலனாய்வு | 5 | |
| 9. | உதவிப் பிரிவு அலுவலர் | 2201 | தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 1 | நிலை 16 (ப.ஓ.தி) |
| 10. | வனவர் | 3362 | தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி | வனம் | 13 ** | நிலை 16 (தொ.வ.நி) |
| 11. | வனவர் | 3363 | தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் லிமிடெட் | | 9 | |
| | | | | **மொத்தம்** | **50** | |

** சிறந்த விளையாட்டு வீரர்கள் இட ஒதுக்கீட்டிற்கான காலிப்பணியிடங்கள்

**3.2. தொகுதி-IIA பணிகள்**

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | பணியின் பெயர் | துறை / அமைப்பின் பெயர் | காலிப் பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1. | முதுநிலை ஆய்வாளர் | 3745 | தமிழ்நாடு பால்வள சார்நிலைப் பணி | பால் உற்பத்தி மற்றும் பால்வள மேம்பாடு | 65* | நிலை 12 (ப.ஓ.தி) |
| 2. | உதவி ஆய்வாளர் | 1069 | தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சார்நிலைப் பணி | உள்ளாட்சி நிதித் தணிக்கை | 1 | |
| 3. | தணிக்கை ஆய்வாளர் | 1029 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | இந்து சமய அறநிலையங்கள் | 11 | |
| 4. | மேற்பார்வையாளர் / இளநிலைக் கண்காணிப்பாளர் | 1087 | தமிழ்நாடு வேளாண் சந்தைப்படுத்துதல் சார்நிலைப் பணி | வேளாண் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் வணிகம் | 1 | நிலை 11 (ப.ஓ.தி) |
| 5. | உதவியாளர் நிலை-III | 3286 | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | | 4 | நிலை 10 (தொ.வ.நி & தொ.ப.நி) @ |
| 6. | உதவியாளர் | | தமிழ்நாடு அமைச்சுப் பணி | வணிகவரிகள் | | நிலை 10 (ப.ஓ.தி) |
| | சென்னை தெற்கு கோட்டம் | 2208 | | | 3 | |
| | கடலூர் கோட்டம் | 2228 | | | 1 | |
| | மதுரை கோட்டம் | 2213 | | | 1 | |
| | திருவாரூர் கோட்டம் | 3744 | | | 3 | |
| | வேலூர் கோட்டம் | 2211 | | | 2 | |
| | வணிகவரிகள் ஆணையரகம் | 1025 | | | 3 | |
| 7. | முதுநிலை வருவாய் ஆய்வாளர் | | தமிழ்நாடு அமைச்சுப் பணி | வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை | | |
| | சென்னை | 1033 | | | 14 | |
| | கடலூர் | 1035 | | | 1 | |
| | ஈரோடு | 1038 | | | 4 | |
| | கள்ளக்குறிச்சி | 3221 | | | 3 | |
| | உதகமண்டலம் | 1045 | | | 4 | |
| | இராமநாதபுரம் | 1048 | | | 2 | |
| | தஞ்சாவூர் | 1051 | | | 3 | |
| | திருப்பத்தூர் | 3220 | | | 3 | |
| | திருவள்ளூர் | 1053 | | | 3 | |
| | வேலூர் | 1059 | | | 1 | |
| | வருவாய் நிர்வாக ஆணையரகம் | 1030 | | | 2 | |
| 8. | உதவியாளர் | 1026 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 12 | |
| 9. | உதவியாளர் | 2270 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவ பணிகள் | 43*# | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10. | உதவியாளர் | 1027 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | தொழில் மற்றும் வணிகம் | 18 | நிலை 10 (ப.ஓ.தி) |
| 11. | உதவியாளர் | 2206 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | காவல் | 41* | |
| 12. | உதவியாளர் | 2207 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | மருத்துவம் மற்றும் ஊரக நல சேவைகள் | 74* | |
| 13. | உதவியாளர் | 2216 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | போக்குவரத்து | 13 | |
| 14. | உதவியாளர் | 2218 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | பதிவு | 7 | |
| 15. | உதவியாளர் | 2273 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து | 28 | |
| 16. | உதவியாளர் | 2261 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் | 1 | |
| 17. | உதவியாளர் | 2264 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | தொழிலாளர் | 33 | |
| 18. | உதவியாளர் | 2268 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | நெடுஞ்சாலைகள் | 4 | |
| 19. | உதவியாளர் | 2259 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் | 6 | |
| 20. | உதவியாளர் | 2275 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் | 3# | |
| 21. | உதவியாளர் | 2281 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நிலவரி | 2 | |
| 22. | உதவியாளர் | 2272 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | தேசிய மாணவர் படை | 12# | |
| 23. | உதவியாளர் | 2274 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | பள்ளிக் கல்வி | 109* | |
| 24. | உதவியாளர் | 2282 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | எழுதுபொருள் மற்றும் அச்சகம் | 7 | |
| 25. | உதவியாளர் | 2205 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணி | 16 | |
| 26. | உதவியாளர் / கணக்கர் | 3118 | தமிழ்நாடு அமைச்சுப் பணி | பட்டு வளர்ச்சி | 2 | |
| 27. | செயல் அலுவலர், நிலை-III | 1654 | இந்துசமய அறநிலைய சார்நிலைப் பணி | இந்துசமய அறநிலையங்கள் | 11 | |
| 28. | உதவியாளர் | 3677 | தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் | | 6 | |
| 29. | உதவியாளர் | 1081 | தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 8 | நிலை 9 (ப.ஓ.தி) |
| 30. | உதவியாளர் | 1084 | தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகப் பணி | தமிழ்நாடு சட்டமன்ற பேரவை | 2 | |
| 31. | கீழ்நிலை செயலிட (முகப்பு) எழுத்தர் | 1086 | தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகப் பணி | தமிழ்நாடு சட்டமன்ற பேரவை | 2 | |
| | | | | **மொத்தம்** | **595** | |

**சுருக்கம் :**

ப.ஓ.தி : பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

தொ.வ.நி: தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

| |
|---|
| @ - தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் பணிக்கொடை நிதி விதிகளின் படி<br>* - சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு பொருந்தும் நேர்வுகளில், தேவையான காலிப்பணியிடங்கள் குறைக்கப்பட்டுள்ளன.<br># - குறைவுக் காலிப்பணியிடங்களை உள்ளடக்கியது |

3.3. இவ்வறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். மேலும் கலந்தாய்வு தொடங்கும் முன் மாறுதலுக்குட்பட்டது.

3.4 இவ்வறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள பதவிகளுடன் ஒத்த தகுதி நிபந்தனைகளுடன் கூடிய வேறு பெயர் கொண்ட பதவிகளைக் கூடுதலாகச் சேர்க்க தேர்வாணையத்திற்கு உரிமை உள்ளது.

**4. தகுதி நிபந்தனைகள்:**

**4.1. வயது வரம்பு: (01.07.2025 அன்று)**

வகுப்பு வாரியாக அனுமதிக்கப்பட்ட உச்ச வயது வரம்பு மற்றும் வயது வரம்புச் சலுகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**4.1.1. பிற வகுப்பினர் [ஆ.தி, ஆ.தி(அ), ப.ப, மி.பி.வ / சீ.ம, பி.வ (இ.அ), பி.வ (இ) சாராத தேர்வர்கள்]**

**4.1.1.1. தொகுதி-II பணிகள்**

<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">பதவியின் பெயர்</th><th rowspan="2">பதவிக் குறியீடு</th><th rowspan="2">குறைந்தபட்ச வயது (நிறைவடைந் திருக்க வேண்டும்)</th><th rowspan="2">உச்ச வயது (நிறைவடைந் திருக்க கூடாது)</th><th colspan="3">வயது வரம்புச் சலுகை</th></tr>
<tr><th>நிர்ணயிக்கப் பட்ட குறைபாடு டைய மாற்றுத் திறனாளிகள்</th><th>முன்னாள் இராணுவத் தினர்</th><th>ஆதர வற்ற விதவை</th></tr>
<tr><td>1.</td><td>நன்னடத்தை அலுவலர்</td><td>1023</td><td>22</td><td>32</td><td>NA</td><td>50</td><td rowspan="2">உச்ச வயது வரம்பு இல்லை</td></tr>
<tr><td>2.</td><td>நன்னடத்தை அலுவலர்</td><td>1011</td><td>26</td><td>42</td><td>NA</td><td>50</td></tr>
<tr><td>3.</td><td>வனவர்</td><td>3362</td><td rowspan="2">21</td><td rowspan="7">32</td><td rowspan="2">NA</td><td rowspan="2">37*</td><td rowspan="2">37</td></tr>
<tr><td>4.</td><td>வனவர்</td><td>3363</td></tr>
<tr><td>5.</td><td>சார் பதிவாளர், நிலை-II</td><td>1071</td><td>20</td><td rowspan="5">42</td><td rowspan="5">50</td><td rowspan="5">உச்ச வயது வரம்பு இல்லை</td></tr>
<tr><td>6.</td><td>உதவி ஆய்வாளர்</td><td>1068</td><td rowspan="4">18</td></tr>
<tr><td>7.</td><td>இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் (மாற்றுத் திறனாளி அல்லாதோர்)</td><td>1017</td></tr>
<tr><td>8.</td><td>இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் (மாற்றுத் திறனாளி)</td><td>2203</td></tr>
<tr><td>9.</td><td>உதவி பிரிவு அலுவலர்</td><td>2201</td></tr>
</table>

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10. | தனிப்பிரிவு உதவியாளர் | 2279 | 18 | 32 | NA | 50 | உச்ச வயது வரம்பு இல்லை |
| 11. | தனிப்பிரிவு உதவியாளர் | 3116 | | | | | |

NA - பொருந்தாது, ஏனெனில் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி இல்லை.

*வனவர் பதவிகளுக்கு (பதவிக்குறியீடு: 3362 மற்றும் 3363), தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படைகளைச் சார்ந்த இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நபர்களில், அவர்களது இராணுவப் பணிக்காலத்தை கழித்தபின்பு 37 ஆண்டுகளை நிறைவு செய்யாதவர்கள், தகுதியானவர்களாக கருதப்படுவர்.

**4.1.1.2. தொகுதி IIA பணிகள்**

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | குறைந்தபட்ச வயது (நிறைவடைந்திருக்க வேண்டும்) | உச்ச வயது (நிறைவடைந்திருக்க கூடாது ) | வயது வரம்புச் சலுகை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் | முன்னாள் இராணுவத்தினர் | ஆதரவற்ற விதவை |
| 1. | அனைத்து பதவிகளுக்கும் (செயல் அலுவலர், நிலை III தவிர ) | | 18 | 32 | 42 | 50 | உச்ச வயது வரம்பு இல்லை |
| 2. | செயல் அலுவலர், நிலை III | 1654 | 25 | 37 | 47 | | |

**4.1.2. பி.வ (இ.அ), பி.வ (இ), மி.பி.வ / சீ.ம, ஆ.தி, ஆ.தி(அ) மற்றும் ப.ப:**

**4.1.2.1. தொகுதி II பணிகள்**

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | குறைந்தபட்ச வயது (நிறைவடைந்திருக்க வேண்டும்) | உச்ச வயது (நிறைவடைந்திருக்க கூடாது ) | வயது வரம்புச் சலுகை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் | முன்னாள் இராணுவத்தினர் | ஆதரவற்ற விதவை |
| 1. | நன்னடத்தை அலுவலர் | 1023 | 22 | உச்சவயது வரம்பு இல்லை | NA | உச்சவயது வரம்பு இல்லை | |
| 2. | நன்னடத்தை அலுவலர் | 1011 | 26 | | | | |
| 3. | வனவர் | 3362 மற்றும் 3363 | 21 | 37 | NA | 37* | 37 |
| 4. | சார் பதிவாளர், நிலை-II | 1071 | 20 | உச்ச வயது வரம்பு இல்லை | | | |
| 5. | அனைத்து பதவிகளுக்கும் [வனவர் (3362 மற்றும் 3363), நன்னடத்தை அலுவலர் (1023 மற்றும் 1011), சார் பதிவாளர், நிலை-II ஆகிய பதவிகளைத் தவிர] | | 18 | | | | |

NA - பொருந்தாது, ஏனெனில் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி இல்லை.

*வனவர் பதவிகளுக்கு (பதவிக்குறியீடு: 3362 மற்றும் 3363), தரைப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படைகளைச் சார்ந்த இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நபர்களில், அவர்களது இராணுவப் பணிக்காலத்தை கழித்தபின்பு 37 ஆண்டுகளை நிறைவு செய்யாதவர்கள், தகுதிவாய்ந்தவர்களாக கருதப்படுவர்.

#### 4.1.2.2. தொகுதி IIA பணிகள்

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | குறைந்தபட்ச வயது (நிறைவடைந் திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது ( நிறைவடைந் திருக்க கூடாது ) | வயது வரம்புச் சலுகை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிர்ணயிக்கப் பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் | முன்னாள் இராணுவத் தினர் | ஆதர வற்ற விதவை |
| 1. | அனைத்து பதவிகளுக்கும் (செயல் அலுவலர், நிலை III தவிர ) | | 18 | உச்ச வயது வரம்பு இல்லை | | | |
| 2. | செயல் அலுவலர், நிலை III | 1654 | 25 | | | | |

**சுருக்கம்:**

பி.வ (இ.அ) - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதோர்)
பி.வ (இ) - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்)
மி.பி.வ / சீ.ம - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர்
ஆ.தி - ஆதி திராவிடர்
ஆ.தி(அ) - ஆதி திராவிடர் (அருந்ததியர்)
ப.ப - பட்டியல் பழங்குடியினர்
NA - பொருந்தாது, ஏனெனில் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி இல்லை.

4.1.3. உச்ச வயது வரம்பு தொடர்பாக "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" இன் பத்தி 5A-இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் வனவர் (பதவிக் குறியீடு: 3362 மற்றும் 3363) ஆகிய பதவிகளுக்கு பொருந்தாது.

4.1.4. உச்ச வயது வரம்பு இல்லை என்பது 01.07.2025 அன்றோ அல்லது தெரிவு செய்யப்படும் நாளன்றோ அல்லது நியமனம் செய்யப்படும் நாளன்றோ தேர்வர் 60 வயதை நிறைவு செய்திருக்கக் கூடாது.

4.1.5. தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 3 (j) (vii) இன் படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வயதுச் சலுகை, ஏற்கனவே ஏதேனும் ஒரு வகுப்பு அல்லது பணி அல்லது பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட முன்னாள் இராணுவ வீரர்களுக்கு பொருந்தாது.

#### 4.1.6. ஆதாரச் சான்றுகள் :

4.1.6.1. தேர்வர்களின் பிறந்தநாள், தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் அல்லது தமிழ்நாடு மேல்நிலைக்கல்வி வாரியத்தால் வழங்கப்படும் முறையே பத்தாம் வகுப்பு (SSLC) அல்லது பன்னிரெண்டாம் வகுப்பு (HSC) மதிப்பெண் பட்டியலுடன் சரிபார்க்கப்படும். பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலில் தேர்வரின் பிறந்ததேதி குறிப்பிடப்படாமல் இருப்பின், தேர்வர் அவர்களது பிறப்புச் சான்றிதழ் / மாற்றுச் சான்றிதழ் / பட்டப் படிப்பு / முதுநிலை பட்டப் படிப்பு மதிப்பெண் பட்டியல் போன்ற ஆவணங்களை தங்களது பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலுக்கு மாற்றாக பதிவேற்றம் செய்ய வேண்டும். வேறு எவ்வித ஆதாரமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. உரிய சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.1.6.2. வயது வரம்புச் சலுகை கோரும் தேர்வர்கள், அத்தகைய உரிமைக் கோரல்களுக்கான ஆதாரச் சான்றுகளை பதிவேற்றம் செய்ய வேண்டும். அத்தகைய ஆவணங்களை பதிவேற்றம் செய்ய தவறினால் அவர்களது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**4.2. கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகுதி :**

**4.2.1. தொகுதி II பணிகள்**

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1. | உதவி ஆய்வாளர் | 1068 | பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம்<br><br>மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில், கீழ்க்கண்ட கூடுதல் கல்வித்தகுதி பெற்றுள்ள தேர்வர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்<br>(i) சமூகப்பணி பாடத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர்<br>அல்லது<br>(ii) சென்னை சமூகப்பணி பள்ளியில் சமூகப்பணி பாடத்தில் பட்டயம் பெற்றவர்<br>அல்லது<br>(iii) சாகர் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு உளவியலில் முதுகலை பட்டம் பெற்றவர்<br>அல்லது<br>(iv) மும்பை தொழிலாளர் நலப்பணியாளர்களுக்கான நிறுவனம் அல்லது பீகார் சேவியர் தொழிலாளர் தொடர்பு நிறுவனத்தில் 2 வருட கால பட்டய படிப்பை முடித்தவர்<br>அல்லது<br>(v) கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி சமூகப்பணி பள்ளியில் தொழிலாளர் நிபுணத்துவத்திற்கான பட்டயப்படிப்பு முடித்தவர் அல்லது பூனே இந்திய சமூக ஒழுங்கு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் படி, சென்னை லையோலா கல்லூரியில் சமூக அறிவியல் துறையால் நடத்தப்படும் சமூகப்பணி பாடத்தில் முதுநிலை பட்டயப்படிப்பு முடித்தவர்<br>அல்லது<br>(vi) பரோடா பல்கலைக்கழகத்தின் சமூகப்பணியில் (MSW) முதுகலை பட்டம் பெற்றவர்<br>அல்லது<br>(vii) தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனத்தால் வழங்கப்படும் தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயம் பெற்றவர்<br>அல்லது<br>(viii) சென்னை உற்பத்தி திறன் குழு நிறுவனத்தால் வழங்கப்படும் பணியாளர் மேலாண்மை, தொழில்துறை உறவுகள் மற்றும் தொழிலாளர் நலனில் முதுகலை பட்டயம் பெற்றவர்<br>அல்லது<br>(ix) மதுரை சமூகப் பணி நிறுவனத்தால் நடத்தப்படும், பணியாளர் மேலாண்மை, மற்றும் தொழில்துறை உறவுகளில் முதுகலைப் பட்டயம் பெற்றவர்<br>அல்லது<br>(x) சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் வேலைக் கல்வி (Work Education) பாடத்தில் முதுகலை பட்டம் பெற்றவர்<br>அல்லது<br>(xi) இராணுவத்தில் குறுகிய கால சேவை புரிந்து விடுவிக்கப்பட்ட அலுவலர்கள், வழக்கமான முறையில் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அல்லது அவசர காலத்தில் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அல்லது பிற முன்னாள் இராணுவத்தினர் |

| | | | |
|---|---|---|---|
| 2. | இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (மாற்றுத் திறனாளி அல்லாதோர்) | 1017 | பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம் |
| 3. | இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (மாற்றுத் திறனாளி) | 2203 | |
| 4. | நன்னடத்தை அலுவலர் | 1011 | (i) பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம்<br>(ii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில், சமூகவியல் அல்லது உளவியல் பட்டம் பெற்ற தேர்வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்<br>(iii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில், சமூகநலப்பணியில் நடைமுறை அனுபவம் அல்லது சமூகம் (ம) அறத்தூய்மை மற்றும் பிற்காப்புப் பணியில் (after care work) அனுபவத்துடன் கூடிய சமூகப் பணியில் பட்டயம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| 5. | நன்னடத்தை அலுவலர் | 1023 | (i) பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம்<br>(ii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில், கீழ்க்கண்ட கல்வித் தகுதி உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்<br>a) சமூகவியல் அல்லது குற்றவியலில் முதுநிலை பட்டம் அல்லது சமூகவியல் அல்லது உளவியலில் பட்டம்<br>அல்லது<br>b) சமூகவியல் அல்லது உளவியல் தவிர்த்து ஏதேனும் பாடத்தை கொண்ட ஒரு பட்டத்துடன் கூடுதலாக சமூகவியல் அல்லது உளவியலில் பட்டயம்<br>அல்லது<br>c) சமூகநலப் பணியில் குறைந்தபட்சம் ஓராண்டு பணி புரிந்த அனுபவம்<br>அல்லது<br>d) சென்னை சமூகப்பணி பள்ளியில் சமூகப்பணி பாடத்தில் பட்டயம் |
| 6. | சார் பதிவாளர், நிலை II | 1071 | (i) பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம்<br>(ii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில், மேற்குறிப்பிட்ட கல்வித்தகுதியுடன் சட்டக்கல்வியில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| 7. | தனிப்பிரிவு உதவியாளர் | 2279 | (i) பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம்<br>(ii) அரசு தொழில்நுட்பத் தேர்வில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்தில் குறைந்தபட்சம் இளநிலையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்<br>குறிப்பு: இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுபவர், அரசு தொழில்நுட்பத் தேர்வில் தட்டச்சு முதுநிலைத் தேர்வில் ஏற்கனவே தேர்ச்சி பெறாமல் இருந்தால் தமது தகுதிகாண் பருவத்திற்குள் தேர்ச்சி பெறுதல் வேண்டும் |
| 8. | தனிப்பிரிவு உதவியாளர் | 3116 | |
| 9. | உதவிப் பிரிவு அலுவலர் | 2201 | (i) முதுநிலை பட்டம்;<br>அல்லது<br>(ii) இளநிலையில் பட்டம் மற்றும் பொது சட்டத்தில் இளநிலை பட்டம் (B.G.L) ;<br>அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | | | (iii) இளநிலை பட்டக்கல்வியில் ஏதேனும் ஒரு பகுதியில் முதல் வகுப்பில் தேர்ச்சி<br><br>இருப்பினும், ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியினர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர் அல்லாதவர்), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்) ஆகிய பிரிவுகளைச் சார்ந்த தேர்வர்கள் இளநிலைப்பட்டம் பெற்றிருந்தால் போதுமானது |
| 10. | வனவர் | 3362 | கீழ்வரும் ஏதேனும் ஒரு பாடத்தில் பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட அறிவியல் அல்லது பொறியியலில் இளநிலை பட்டம்<br>1. வேளாண்மை 2. கால்நடை வளர்ப்பு 3. தாவரவியல் 4. வேதியியல் 5. கணினி பயன்பாடு / கணினி அறிவியல் 6. பொறியியல் (வேளாண்மை பொறியியல் உட்பட அனைத்து பொறியியல் பாடங்கள்) 7. சுற்றுச்சூழல் அறிவியல் 8. வனவியல் 9. நிலவியல் 10. தோட்டக்கலை 11. கடல்சார் உயிரியல் 12. கணிதவியல் 13. இயற்பியல் 14. புள்ளியியல் 15. கால்நடை அறிவியல் 16. வனவிலங்கு உயிரியல் 17. விலங்கியல்<br>(ii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில், இராணுவ சேவையிலிருந்து (தரைப் படை) விடுவிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் |
| 11. | வனவர் | 3363 | |

4.2.2. தொகுதி IIA பணிகள்

| வ. எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1. | உதவி ஆய்வாளர் | 1069 | பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம் |
| 2. | மேற்பார்வையாளர் / இளநிலைக் கண்காணிப்பாளர் | 1087 | (i) பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம்<br>(ii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில் அரசு தொழில்நுட்பத் தேர்வில் கணக்கியல் முதுநிலையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 3. | பல்வேறு மாவட்டங்களில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் | 1030, 1033, 1035, 1038, 1045, 1048, 1051, 1053, 1059, 3220, 3221 | பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம் |
| 4. | உதவியாளர் | 1025, 1026, 1027, 1081, 1084, 2205, 2206, 2207, 2208, 2211, 2213, 2216, 2218, 2228, 2259, 2261, 2264, 2268, 2270, 2272, 2273, 2274, 2275, 2281, 2282, 3677, 3744 | |
| 5. | உதவியாளர் / கணக்கர் | 3118 | பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம் |
| 6. | முதுநிலை ஆய்வாளர் | 3745 | |
| 7. | கீழ்நிலை செயலிட (முகப்பு) எழுத்தர் | 1086 | |
| 8. | உதவியாளர், நிலை III | 3286 | |
| 9. | தணிக்கை ஆய்வாளர் | 1029 | |

| | | | |
|---|---|---|---|
| 10. | செயல் அலுவலர், நிலை III | 1654 | (i) பல்கலைக்கழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டம்<br><br>(ii) மற்றவைகள் சமமாக இருக்கும் பட்சத்தில் இந்து சமய அறநிலையத் துறையில் 5 வருடங்களுக்கு குறைவில்லாமல் பணியாற்றியவர்களுக்கு (அரசு ஊழியராக அல்லாதவர்) முன்னுரிமை வழங்கப்படும்<br><br>(iii) இந்திய கலாச்சார மற்றும் மத நிறுவனங்கள் மேலாண்மையில் இளநிலை பட்டம் மற்றும் கல்வெட்டு மற்றும் தொல்லியலில் தமிழ்நாடு கல்வெட்டு நிறுவனத்திலிருந்து பட்டயம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் |

4.2.3. தேர்வர்கள் பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித்தகுதியினை அறிவிக்கை வெளியிடப்படும் நாளன்று பெற்றிருக்க வேண்டும்.

4.2.4. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பட்டப் படிப்பு கல்வித்தகுதியை 10-ஆம் வகுப்பு + 12-ஆம் வகுப்பு / பட்டயப்படிப்பு அல்லது இணைக்கல்வித் தகுதி + இளநிலையில் பட்டம் என்ற வரிசையில் பெற்றிருக்க வேண்டும்.

**4.2.5. ஆதாரச் சான்றுகள்:**

4.2.5.1. பத்தாம்வகுப்பு / மேல்நிலைக்கல்வி / பட்டயம் / பட்டம் / முதுகலைப்பட்டம் / ஒருங்கிணைந்த முதுகலைப் பட்டம் / அப்படிப்புகளுக்கான தற்காலிக பட்டச்சான்றிதழ் / ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் ஆகியவை கல்வித்தகுதிக்கு ஆதாரமானவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

4.2.5.2. பட்டப்படிப்பு / முதுகலைப்பட்டப்படிப்பு சான்றிதழ்கள் அறிவிக்கை தேதிக்குப் பின்னர் வழங்கப்பட்டிருப்பின், தேர்வர்கள் தங்களது கல்வித்தகுதியை அறிவிக்கைதேதி அன்று அல்லது அறிவிக்கைத்தேதிக்கு முன்னர் பெற்றதற்கு ஆதாரமான ஆவணங்களை அதாவது தற்காலிக பட்டச்சான்றிதழ் / ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல்/ இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை V ல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் உள்ளவாறு நிறுவனம் / பல்கலைக்கழகத்திலிருந்து சான்று பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.5.3. ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியைவிட அதிகமான கல்வித்தகுதியைப் பெற்றிருப்பதாக உரிமைகோரும் தேர்வர், அதற்கு ஆதாரமாக அறிவிக்கை நாள் அன்றோ அதற்கு முன்னரோ பெறப்பட்ட சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.5.4. கல்வித்தகுதி / தொழில்நுட்பத் தகுதி ஆகியவற்றிற்காக நிர்ணயிக்கப்பட்ட படிப்புக்கான காலஅளவு, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேர்வுகளில், விண்ணப்பத்தில் உள்ள உரிமை கோரலுக்கும் பதிவேற்றப்பட்ட ஆவணங்களுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடு இருப்பின், தேர்வரின் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2.5.5. பட்டப்படிப்புச் சான்றிதழ் தொலைந்து விட்டாலோ அல்லது குறிப்பிட்ட காரணங்களுக்காக உடனடியாக சான்றிதழ் கிடைக்கப் பெறாமலிருந்தாலோ, பட்டப்படிப்புச் சான்றிதழ் பதிவேட்டின் சுருக்கக்குறிப்பு கல்வித்தகுதிக்கு சான்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

4.2.5.6. இணைக்கல்வித் தகுதியைக் கோரும் தேர்வர்கள் அதற்குரிய அரசாணையின் நகலினை பிற ஆவணங்களை பதிவேற்றம் செய்யும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும், தவறினால் அவர்களின் விண்ணப்பம் உரிய நடைமுறைக்குப் பின்பு நிராகரிக்கப்படும். இணைக்கல்வித் தகுதி தொடர்பான அரசாணைகள் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் இணையதளத்தில் (www.tnsche.tn.gov.in) உள்ளன. மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்ட இணைக்கல்வித் தகுதி தொடர்பான அரசாணைகள் இந்தத் தெரிவிற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**4.3. மருத்துவ மற்றும் உடற்தகுதிகள்:**

**4.3.1. வனவர் பதவியை தவிர ஏனைய பதவிகளுக்குரிய உடற்தகுதிகள்:**

4.3.1.1. பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் தேர்வர்கள் உடல் தகுதிச் சான்றிதழை பணி நியமனத்தின் போது நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**4.3.2. வனவர் பதவிக்கான உடற்தகுதிகள்:**

4.3.2.1. தேர்வர்கள் கீழ்கண்ட குறைந்தபட்ச உடற்தகுதிகளை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.

| பாலினம் | உயரம் (செ.மீ) | | மார்புச் சுற்றளவு (செ.மீ) | |
|---|---|---|---|---|
| | **பட்டியல் பழங்குடியினர் தவிர** | **பட்டியல் பழங்குடியினர்** | **இயல்பு நிலையில்** (மூச்சு வெளிவிட்ட நிலையில்) | **விரிவு** (மூச்சு உள் வாங்கிய நிலையில்) |
| ஆண் | 163 | 152 | 79 | 05 |
| பெண் மற்றும் திருநங்கை | 150 | 145 | 74 | 05 |

4.3.2.2. மேற்குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச உடற்தகுதிகளைப் பெற்றிருக்கும் தேர்வர்கள் மட்டுமே இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆவர். தேர்வர்கள் உடற்தகுதிச் சான்றிதழை பிற்சேர்க்கை V-ல் உள்ள படிவத்தில் அரசு மருத்துவ நிறுவனங்களில் பணியாற்ற அரசால் நியமிக்கப்பட்ட உதவி மருத்துவர் நிலைக்கு மேல் உள்ள மருத்துவ அலுவலரிடம் பெற்று தேர்வாணையம் கோரும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.3.2.3. மூத்த சிவில் அறுவை சிகிச்சை நிபுணர், சிவில் அறுவை சிகிச்சை நிபுணர், மூத்த உதவி அறுவை சிகிச்சை நிபுணர், நிலைய மருத்துவ அதிகாரி, உதவிப் பேராசிரியர், மூத்த உதவிப் பேராசிரியர், மருத்துவப் பேராசிரியர் மற்றும் குழந்தை மருத்துவப் பேராசிரியர் ஆகியோர் உடற்தகுதிச் சான்றிதழை வழங்குவதற்கான தகுதிவாய்ந்த அலுவலர்கள் ஆவர்.

**4.3.3. அனைத்து பதவிகளுக்குமான பார்வைத்திறன் தரம்:**

4.3.3.1. பின்வரும் பதவிகளுக்கு தேர்வர்களின் பார்வைத்திறன் தரம் கீழே குறிப்பிட்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | நிர்ணயிக்கப்பட்ட பார்வை தரம் |
|---|---|---|---|
| 1. | நன்னடத்தை அலுவலர் | 1011 | தரம்-I |
| 2. | நன்னடத்தை அலுவலர் | 1023 | |
| 3. | வனவர் | 3362 | |
| 4. | வனவர் | 3363 | |
| 5. | உதவி ஆய்வாளர் | 1068 | தரம்-II அல்லது அதற்கு மேம்பட்ட தரம், நிறக்குருடு அல்லது மாலைக்கண் குறைபாடு தகுதியில்லை |
| 6. | தொகுதி II மற்றும் IIA இல் உள்ள அனைத்து பிற பதவிகளுக்கும் (நன்னடத்தை அலுவலர், வனவர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகிய பதவிகளை தவிர) | -- | தரம்-III அல்லது அதற்கு மேம்பட்ட தரம் |

4.3.3.2. தொகுதி II பணிகளுக்கான கணினி வழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்கள் அரசு மருத்துவமனையில் பணியாற்றும் கண் மருத்துவ நிபுணரிடம் கண்பார்வை தகுதிச் சான்றிதழை அறிவிக்கையின் பிற்சேர்க்கை V இல் உள்ள படிவத்தில் பெற்று தேர்வாணையம் கோரும் போது பிற ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.3.3.3. கண் பார்வை குறைபாடுடைய தேர்வர்கள், அரசு மருத்துவமனையில் பணியாற்றும் தகுதிவாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Eye Specialist) கண் பார்வை தகுதிச் சான்றிதழைப் பெற்று பணி நியமனத்தின்போது நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**4.4. தமிழ் மொழியில் தகுதி:**

4.4.1. தேர்வர்கள் தேர்வு அறிவிக்கை வெளியாகும் நாளன்று போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும். பின்வரும் தகுதியைப் பெற்றிருக்கும் ஒருவர் தமிழில் போதிய தகுதி உடையவராகக் கருதப்படுவார். பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதியில் / உயர்நிலைப்பள்ளிப் படிப்பில் / பட்டப் படிப்பில், தமிழை ஒருமொழிப் பாடமாக படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது உயர்நிலைப்பள்ளிப் படிப்பை /

பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையானக் கல்வித் தகுதியில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

4.4.2. தேர்வர்கள் தங்களது பத்தாம் வகுப்பு / பன்னிரெண்டாம் வகுப்பு / இளநிலை பட்டம் / முதுகலை பட்ட மதிப்பெண் சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித்தேர்வில் (முழுத் தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றதற்கான சான்றையோ தேர்வாணையம் கோரும் போது கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.4.3 போதிய தமிழறிவுப் பெற்றதற்கான ஆதாரச் சான்றுகளை சமர்ப்பிக்கத் தவறும் தேர்வர், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் இரண்டாம்நிலை மொழித் (தமிழில்) தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுபவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

**4.5. தேர்வுக்கு விண்ணப்பித்தலில் உள்ள கட்டுப்பாடுகள்:**

4.5.1. ஆ.தி., ஆ.தி (அ), ப.ப., மி.பி.வ., / சீ.ம., பி.வ. (இஅ) மற்றும் பி.வ. (இ) தவிர "ஏனையோர்" இந்திய அரசுப் பணியில் அல்லது மாநில அரசு / யூனியன் பிரதேசப் பணியில் முதலில் சேர்ந்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட காலம் முறையான பணியில் பணிபுரிந்தவர்கள் இப்பதவிகளுக்குரிய வயது வரம்பிற்குள் இருந்தாலும், இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

4.5.2. இந்து சமய அறநிலையத் துறையில் தணிக்கை ஆய்வாளர் (பதவிக் குறியீடு: 1029) மற்றும் செயல் அலுவலர், நிலை III (பதவிக் குறியீடு: 1654) ஆகிய பதவிகளுக்கு இந்து மதத்தை சார்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதிவாய்ந்தவர் ஆவார். இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் தேர்வர்கள் சாதிச் சான்றிதழ் / தொடர்புடைய வருவாய் அலுவலர்களால் வழங்கப்பட்ட சான்றிதழை தங்களது மதம் தொடர்பான இணையவழி விண்ணப்பத்தின் உரிமை கோரல்களுக்கு ஆதாரமாக தேர்வாணையம் கோரும் போது, பதிவேற்றம் செய்ய / சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு பதிவேற்றம்/சமர்ப்பிக்க தவறினால், மதம் தொடர்பான உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.5.3. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் கீழ்க்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்:

| வ.எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | துறை / அமைப்பின் பெயர் |
|---|---|---|---|
| 1. | நன்னடத்தை அலுவலர் | 1011 | குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் |
| 2. | நன்னடத்தை அலுவலர் | 1023 | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் |
| 3. | தனிப்பிரிவு உதவியாளர் | 2279 | சென்னை மாநகர காவல் |
| 4. | தனிப்பிரிவு உதவியாளர் | 3116 | குற்றப் புலனாய்வு |
| 5. | வனவர் | 3362 | வனம் |
| 6. | வனவர் | 3363 | தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் |

**4.5.4. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான பொருத்தமென அடையாளப்படுத்தப்பட்ட பதவிகள்:**

4.5.4.1. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான 4% இட ஒதுக்கீட்டிற்கு ஏற்றதாக பின்வரும் பதவிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது:-

**தொகுதி II பணிகள்**

| பதவியின் பெயர் | பதவிக் குறியீடு | நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகைகள் |
|---|---|---|
| இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (மாற்றுத்திறனாளி அல்லாதோர்) | 1017 | LV,HH, LD (OA,OL, OAL), LC, DF, AC, SLD, MD |
| இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் (மாற்றுத்திறனாளி) | 2203 | |

| | | |
|---|---|---|
| உதவி ஆய்வாளர் | 1068 | LV, HI, HH, LD, LD(others), LC, DF, AC, MD |
| சார் பதிவாளர், நிலை II | 1071 | LV, LD(OA, OL), HH, AC, LC, DF |
| உதவி பிரிவு அலுவலர் | 2201 | LV,HH, LD (OA,OL,BL,OAL,BLOA), LC,DF, AC |

**தொகுதி IIA பணிகள்**

| **பதவியின் பெயர்** | **பதவிக் குறியீடு** | **நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகைகள்** |
|---|---|---|
| தொகுதி IIA பணிகளில் உள்ள அனைத்து பதவிகள் (செயல் அலுவலர் நிலை III பதவியை தவிர) | - | அனைத்து நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளுடைய மாற்றுத் திறனாளிகளும் பொருத்தமானவர்கள் |
| செயல் அலுவலர் நிலை III | 1654 | HH(உதவி சாதனத்துடன்), AC |

**சுருக்கம்:**

| | | | |
|---|---|---|---|
| LV | – Low Vision | MD | – Multiple Disabilities |
| HH | – Hard of Hearing | HI | – Hearing Impaired |
| LD | – Locomotor Disability | MuD | – Muscular Dystrophy |
| CP | – Cerebral Palsy | OA | – One Arm |
| LC | – Leprosy Cured | OL | – One Leg |
| DF | – Dwarfism | OAL | – One Arm One Leg |
| AC | – Acid Attack Victims | BL | – Both Leg |
| SLD | – Specific Learning Disability | BLOA | – Both Leg One Arm |

LD (Others) - Scoliosis and / or Kyphoscoliosis, Kyphosis, Spinal Cord Injuries and Spine Kyphoscoliosis

4.5.4.2 மேற்குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுகளுடைய மாற்றுத்திறனாளி வகையினைச் சேர்ந்த தேர்வர்கள் மட்டுமே இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள். எனவே தேர்வர்கள் விண்ணப்பிக்கும் முன்னர் இதனை சரியாக படித்து இத்தேர்வுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**5. தேர்வுத் திட்டம்**

5.1. ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு II (தொகுதி II மற்றும் IIA பணிகள்) இரண்டு நிலைகளைக் கொண்டது (வனவர் பதவிகளைத் தவிர) (i) பொது முதல்நிலைத் தேர்வு (ii) தொகுதி II மற்றும் IIA பணிகளுக்கு தனி முதன்மைத் தேர்வு. வனவர் பதவிகளுக்கு மட்டும் தேர்வு மூன்று தொடர் நிலைகளை கொண்டது. (i) பொது முதல்நிலைத் தேர்வு (ii) முதன்மைத் தேர்வு மற்றும் (iii) நடைச் சோதனை.

**(i) பொது முதல்நிலைத் தேர்வு** என்பது முதன்மைத் தேர்விற்கான தேர்வர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்வு ஆகும்.

**(ii) தொகுதி II பணிகளுக்கான முதன்மைத் தேர்வு** என்பது தொகுதி II பணிகளில் உள்ள பதவிகளுக்கான தேர்வர்களைத் தெரிவு செய்யும் தேர்வாகும்.

**(iii) தொகுதி IIA பணிகளுக்கான முதன்மைத் தேர்வு** என்பது தொகுதி IIA பணிகளில் உள்ள பதவிகளுக்கான தேர்வர்களைத் தெரிவு செய்யும் தேர்வாகும்.

5.2. முதல்நிலைத் தேர்வு என்பது முதன்மைத் தேர்வுக்காக தகுதியான தேர்வர்களை தெரிவு செய்வதற்கான தேர்வு ஆகும். முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கத் தகுதியானவர்களாக அறிவிக்கப்படும் தேர்வர்களின் முதல்நிலைத் தேர்வில் பெறப்படும் மதிப்பெண்கள், இறுதித் தரவரிசையை நிர்ணயிப்பதற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**5.3. தரவரிசை நடைமுறை:**

5.3.1. முதன்மைத் தேர்வில் தாள்-II-ல் தேர்வர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதிப் பட்டியல் அல்லது தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்படும். முதன்மைத் தேர்வில் தாள்-II-ல் தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் இறுதி தரவரிசையை தீர்மானிக்கும்.

5.3.2. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்வர்கள் சம மதிப்பெண்களைப் பெற்றால், அதிக கல்வித் தகுதி பெற்ற தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.3.3. எழுத்துத் தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களும் கல்வித் தகுதியும் ஒரே மாதிரியாக இருப்பின், வயதில் மூத்த தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.3.4. வயதும் ஒரே மாதிரியாக இருப்பின், விண்ணப்ப எண்ணிலிருந்து தீர்மானிக்கப்பட்டபடி, ஆணையத்திற்கு முன்னதாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தேர்வர் தகுதிப் பட்டியலில் முதலிடத்தில் வைக்கப்படுவார்.

5.4. இவ்வறிவிக்கையில் பத்தி 6-இல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் அடிப்படையில் முதன்மைத் தேர்விற்கு தகுதியான தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தால் வெளியிடப்படும்.

5.5. தொகுதி II பணிகளுக்கான முதன்மைத் தேர்வுக்கு 1:10 என்ற விகிதப்படி தேர்வர்கள் அனுமதிக்கப்படுவர். இது இடஒதுக்கீட்டு விதியை கருத்தில் கொண்டு முடிவு செய்யப்படும். எனினும், பணியிட ஒதுக்கீட்டுக்குரிய ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் 1:10 விகிதப்படி முதன்மைத் தேர்வுக்கு தெரிவு செய்யப்படுவதற்குரிய இறுதி தேர்வர் பெற்ற அதே மதிப்பெண்களைப் பெற்ற அனைத்து தேர்வர்களும் முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். இதனால் முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய தேர்வர்களின் எண்ணிக்கையானது நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தை விட அதிகமாகலாம்.

5.6. தொகுதி IIA பணிகளுக்கான முதன்மைத் தேர்வுக்கு 1:10 என்ற விகிதப்படி தேர்வர்கள் அனுமதிக்கப்படுவர். எனினும், பணியிட ஒதுக்கீட்டுக்குரிய ஒவ்வொரு வகுப்புப் பிரிவிலும் 1:10 விகிதப்படி முதன்மைத் தேர்வுக்கு தெரிவு செய்யப்படுவதற்குரிய இறுதி தேர்வர் பெற்ற அதே மதிப்பெண்களைப் பெற்ற அனைத்து தேர்வர்களும் முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். இதனால் முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட வேண்டிய தேர்வர்களின் எண்ணிக்கையானது நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தை விட அதிகமாகலாம்.

5.7. இவ்வறிவிக்கையில் பத்தி 6-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதி II பணிகளுக்கான முதன்மை தேர்வானது இரு தாள்களை கொண்டது. அவ்விரு தாள்களில், தாள் I தகுதி தேர்வாகும். தாள் II இல் பெற்ற மதிப்பெண்கள் மட்டுமே தர வரிசைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5.8. இவ்வறிவிக்கையில் பத்தி 6-இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகுதி IIA பணிகளுக்கான முதன்மை தேர்வானது இரு தாள்களை கொண்டது. அவ்விரு தாள்களில், தாள் I தகுதி தேர்வாகும். தாள் II இல் பெற்ற மதிப்பெண்கள் மட்டுமே தர வரிசைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5.9. முதன்மைத் தேர்வில் தாள் II இல் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையிலும் இடஒதுக்கீட்டிற்கான நியமன விதிகளின்படியும் இறுதித் தெரிவு செய்யப்படும்.

5.10. தேர்வர்களின் கல்வித்தகுதி / தொழிற்கல்வித்தகுதி / சிறப்புப் பிரிவுக்கான உரிமைக் கோரல் மற்றும் பிற ஆகியவற்றின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட சில பதவிகளுக்காக முதன்மைத்தேர்வுக்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்கள், முதன்மைத்தேர்வில் பெற்ற மதிப்பெண்களை கருத்திற்கொள்ளாமல் அக்குறிப்பிட்ட பதவிகளுக்கு மட்டுமே கருதப்படுவார்கள்.

5.11. தொகுதி II பணிகள்: தொகுதி II பணிகளுக்கான, முதன்மைத் தேர்வின் தாள் II இல் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். கணினிவழித் திரையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 1:3 மற்றும் 1:2 என்ற விகிதத்தில் தேர்வர்கள் பொதுப்பிரிவு மற்றும் அனைத்து ஒதுக்கீட்டுப் பிரிவுகளுக்கும் முறையே அனுமதிக்கப்படுவார்கள். வனவர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ள தேர்வர்கள் கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 1:10 என்ற விகிதத்தில் அனுமதிக்கப்படுவார்கள். கணினி வழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பு அடிப்படையில் வனவர் பதவிக்கு விருப்பம் தெரிவித்தவர்களில் தகுதியானவர்கள் உடற்தகுதி மற்றும் நடைச் சோதனைக்கு அனுமதிக்கப்படுவர் (வனவர் பதவிக்கு மட்டும்). மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு 1:3 மற்றும் 1:1.5 எனும் விகிதத்தில் பொதுப்பிரிவு மற்றும் அனைத்து ஒதுக்கீட்டு பிரிவுகளுக்கும் முறையே அனுமதிக்கப்படுவார்கள். தேர்வர்கள் கலந்தாய்விற்கு அவர்களின் தரவரிசையின் அடிப்படையில் அனுமதிக்கப்படுவார்கள்.

5.12. தொகுதி II பணிகளில் உள்ள ஒரு பதவிக்கு ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட தேர்வர்கள் தொகுதி IIA பணிகளில் உள்ள பதவிகளுக்கு கருதப்படமாட்டார்கள் மற்றும் தொகுதி IIA பணிகளுக்கான கலந்தாய்விலும் அனுமதிக்கப்படமாட்டர்கள்

**5.13. வனவர் பதவிக்கான நடைச் சோதனை**

5.13.1. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரால் நடத்தப்படும் உடற்தகுதி மற்றும் சோதனையில், ஆண் மற்றும் பெண் / திருநங்கைத் தேர்வர்கள் முறையே 25 கி.மீ மற்றும் 16 கி.மீ தூரத்தை நான்கு மணி நேரத்தில் நடந்து சென்று நிறைவு செய்ய வேண்டும். உடற் தகுதி மற்றும் நடைச் சோதனை ஆகியவை சென்னையில் மட்டுமே நடத்தப்படும். நடைச் சோதனையில் தேர்ச்சி பெற்ற தேர்வர்கள் அடுத்த கட்ட தெரிவுமுறைக்கு கருத்தில் கொள்ளப்படுவார்கள்.

5.13.2. திருநங்கைத் தேர்வர்கள் ஆண் பாலினத்தை தேர்வு செய்திருந்தால், அவர்கள் ஆண்களுக்குரிய உடற் தகுதி மற்றும் நடைச் சோதனை முறைகள் பொருந்தும். திருநங்கைத் தேர்வர்கள் பெண் பாலினத்தை தேர்வு செய்திருந்தால், அவர்கள் பெண்களுக்குரிய உடற் தகுதி மற்றும் நடைச் சோதனை முறைகள் பொருந்தும். திருநங்கைத் தேர்வர்கள் மூன்றாம் பாலினத்தை தேர்வு செய்திருந்தால், அவர்களுக்கு பெண்களுக்குரிய உடற் தகுதி மற்றும் நடைச் சோதனை முறைகள் பொருந்தும்.

5.14. தொகுதி IIA பணிகள்: தொகுதி IIA பணிகளுக்கான முதன்மைத் தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். அனைத்து பதவிகளுக்கும் கணினி வழித்திரையில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு 1:3 மற்றும் 1:2 விகிதத்தில் தேர்வர்கள் பொதுப்பிரிவு மற்றும் அனைத்து ஒதுக்கீட்டுப் பிரிவுகளுக்கும் முறையே அனுமதிக்கப்படுவார்கள். கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பு அடிப்படையில் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தேர்வர்கள் 1:3 மற்றும் 1:1.5 எனும் விகிதத்தில் பொதுப்பிரிவு மற்றும் அனைத்து ஒதுக்கீட்டு பிரிவுகளுக்கும் முறையே அனுமதிக்கப்படுவார்கள். தேர்வர்கள் கலந்தாய்விற்கு அவர்களின் தரவரிசையின் அடிப்படையில் அனுமதிக்கப்படுவார்கள்.

**5.15. வனவர் பதவிக்கு சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டின் தெரிவு முறை:**

5.15.1. சிறந்த விளையாட்டு வீரருக்கான இடஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படும் விளையாட்டு வீரர்கள், வனவர் பதவிக்கு எழுத்துத் தேர்வில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைப் பெற்றிருப்பதோடு, அறிவிக்கையின் பத்தி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிற நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனை தேர்வில் தகுதி பெற்று இருக்க வேண்டும்.

5.15.2. விளையாட்டு சாதனைகளின் அடிப்படையில் மட்டுமே அவர்களின் தரவரிசை தீர்மானிக்கப்படும். அறிவிப்புக்கு முந்தைய கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் அதிகபட்ச சாதனைகளுக்கு மட்டுமே மதிப்பெண்கள் வழங்கப்படும். சர்வதேச அளவிலான போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற நபருக்கு வெள்ளிப் பதக்கத்தை விட அதிக தரவரிசையும், வெள்ளிப் பதக்கம் பெற்ற நபருக்கு வெண்கலப் பதக்கத்தை விட அதிக தரவரிசையும் வழங்கப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் அதிகபட்ச சாதனைகள் ஒரே மதிப்பெண்களைப் பெற்றிருந்து, மேலே குறிப்பிட்டுள்ளபடி தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட முடியாவிட்டால், அந்த நபர்களிடையே ஐந்து ஆண்டு காலத்தில் அடுத்த அதிகபட்ச சாதனையை தரவரிசைப்படுத்துவதற்கு பரிசீலிக்கலாம்.

5.15.3. விளையாட்டுச் சான்றிதழ்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிபுணர் குழுவால் ஆய்வு செய்யப்படும். நிர்ணயிக்கப்பட்ட தகுதியினை பூர்த்தி செய்யாத தேர்வர்களின் விளையாட்டுச் சான்றிதழ்களை குழு நிராகரிக்கலாம். குழுவின் முடிவே இறுதியானது.

**5.15.4. அங்கீகரிக்கப்பட்ட போட்டிகள் / விளையாட்டு தொடர்களில் மதிப்பெண்கள் வழங்குதல்:**

| போட்டி / தொடர் நிலை | தகுதி மதிப்பெண் சதவீதம் | | | |
|---|---|---|---|---|
| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | பங்கேற்பு |
| சர்வதேச அளவிலான போட்டி | 100 / 100 | 100 / 100 | 100 / 100 | 90 / 100 |
| தேசிய அளவிலான போட்டி | 90 / 100 | 85 / 100 | 80 / 100 | 75 / 100 |
| மாநில அளவிலான போட்டி (பதக்கம் பெற்றவர்கள் அல்லது முதல் மூன்று இடங்களுக்கு தகுதி பெற்றவர்கள்) | 75 / 100 | 70 / 100 | 65 / 100 | |
| பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் (பதக்கம் பெற்றவர்கள் அல்லது முதல் மூன்று இடங்களுக்கு தகுதி பெற்றவர்கள்) | 60 / 100 | 55 / 100 | 50 / 100 | |
| தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் பள்ளி அணிகள் (பதக்கம் பெற்றவர்கள் அல்லது முதல் மூன்று இடங்களுக்கு தகுதி பெற்றவர்கள்) | 60 / 100 | 55 / 100 | 50 / 100 | |

**6. தேர்வுமுறைத் திட்டம்:**

**6.1. ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு II (தொகுதி II மற்றும் தொகுதி IIA பணிகள்) க்கான முதல்நிலைத் தேர்வு (ஒற்றைத் தாள்)**

<table>
<tr><th>பாடம்</th><th>தரம்</th><th>வினாக்களின் எண்ணிக்கை</th><th>அதிகபட்ச மதிப் பெண்கள்</th><th>நேரம்</th><th>குறைந்தபட்ச மதிப்பெண்கள் (அனைத்து பிரிவினருக்கும்)</th><th>தேர்வு முறை</th><th>தேர்வின் வகை</th></tr>
<tr><td>அ. மொழி (பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம்)</td><td>பத்தாம் வகுப்பு</td><td>100</td><td rowspan="4">300</td><td rowspan="4">3 மணி</td><td rowspan="4">90</td><td rowspan="4">OMR</td><td rowspan="4">கொள்குறி வகை</td></tr>
<tr><td>ஆ. பொது அறிவு</td><td>பட்டப் படிப்பு</td><td>75</td></tr>
<tr><td>இ. திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு</td><td>பத்தாம் வகுப்பு</td><td>25</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>200</td></tr>
<tr><td colspan="8">OMR - ஒளிக்குறி உணரி (Optical Mark Recognition)</td></tr>
</table>

**6.2. தொகுதி II பணிகளுக்கான முதன்மைத் தேர்வு**

<table>
<tr><th>தாள்</th><th>பாடம்</th><th>தரம்</th><th>அதிகபட்ச மதிப்பெண்கள்</th><th>நேரம்</th><th>குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் (அனைத்து பிரிவினருக்கும்)</th><th>தேர்வின் வகை</th></tr>
<tr><td>தாள் I</td><td>தமிழ் மொழித் தகுதித் தேர்வு</td><td>பத்தாம் வகுப்பு</td><td>100</td><td>3 மணி</td><td>40</td><td rowspan="2">விரிந்துரைக்கும் வகை</td></tr>
<tr><td>தாள் II</td><td>பொது அறிவு</td><td>பட்டப்படிப்பு</td><td>300</td><td>3 மணி</td><td>90</td></tr>
</table>

**6.3. தொகுதி IIA பணிகளுக்கான முதன்மை தேர்வு**

<table>
<tr><th>தாள்</th><th>பாடம்</th><th>தரம்</th><th>வினாக் களின் எண்ணிக் கை</th><th>அதிகபட்ச மதிப்பெண் கள்</th><th>நேரம்</th><th>குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள (அனைத்து பிரிவினருக்கும்)</th><th>தேர்வின் வகை</th><th>தேர்வு முறை</th></tr>
<tr><td>தாள் I</td><td>தமிழ் மொழித் தகுதித் தேர்வு</td><td>பத்தாம் வகுப்பு</td><td>-</td><td>100</td><td>3 மணி</td><td>40</td><td>விரிந்து ரைக்கும் வகை</td><td>-</td></tr>
<tr><td rowspan="3">தாள் II</td><td>அ. பொது அறிவு</td><td>பட்டப் படிப்பு</td><td>150</td><td rowspan="3">300</td><td rowspan="3">3 மணி</td><td rowspan="3">90</td><td rowspan="3">கொள்குறி வகை</td><td rowspan="3">CBT</td></tr>
<tr><td>ஆ. பொது நுண்ணறிவு மற்றும் பகுத்தறிவு</td><td>பத்தாம் வகுப்பு</td><td>50</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>200</td></tr>
<tr><td colspan="9">CBT - கணினி வழித்தேர்வு (Computer Based Test)</td></tr>
</table>

6.4. முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வில் பொது அறிவு கேள்விகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் அமைக்கப்படும்.

6.5. தேர்வர்கள் தொகுதி II மற்றும் தொகுதி IIA பணிகளுக்கான முதன்மை தேர்வின் தாள்-I-இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைப் பெற்றிருந்தால் மட்டுமே முதன்மை தேர்வின் தாள்-IIக்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும்.

6.6. தேர்வர்கள் முதன்மைத் தேர்வின் இரண்டு தாள்களிலும் கலந்து கொள்வது கட்டாயமாகும். முதன்மைத் தேர்வின் இரண்டு தாள்களில் ஏதேனும் ஒரு தாளில் தேர்வெழுதாத தேர்வர்கள், இத்தெரிவுக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைப் பெற்றிருந்தாலும் கூட தெரிவிற்கு கருத்தில் கொள்ளப் படமாட்டார்கள்.

6.7. மாற்றுத் திறனாளி தேர்வர்கள் தொகுதி II மற்றும் தொகுதி IIA ஆகியவற்றின் முதன்மைத் தேர்வில் தமிழ் மொழித் தகுதித் தேர்வு தாள்-I-னை எழுதுவதிலிருந்து விலக்குப் பெறலாம். அத்தகைய விலக்கு கோரும் மாற்றுத் திறனாளித் தேர்வர்கள் இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும்போது தேவையான விவரங்களை தவறாமல் அளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் பின்னர் பெறப்படும் எந்த ஒரு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அத்தகைய தேர்வர்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை II-இல் பத்தி 2.4-ல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட சான்றிதழை தேர்வாணையம் கோரும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

6.8. முதல் நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான பாடத்திட்டங்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை III-இல் உள்ளன. பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலகு வாரியான கேள்விகளின் பகிர்மானம் உத்தேசமானது. தேவைப்பட்டால், ஒவ்வொரு அலகிலும் உள்ள கேள்விகளின் எண்ணிக்கையை ஓரளவு அதிகரிக்கவோ குறைக்கவோ தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

6.9. தொகுதி II பணிகளுக்கான முதன்மை தேர்விற்கான தாள்-II (பொது அறிவு) -ன் வினாத்தாள் அமைப்பு முறை (Question Pattern) இவ்வறிவிக்கையில் பிற்சேர்க்கை III இல் உள்ளன.

6.10. தேர்வின் போது பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள், இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை-IV-இல் உள்ளன.

**7. பணி நியமன இட ஒதுக்கீடு:**

இத்தெரிவின் குறைவுப்பணியிடங்களை தவிர, ஒவ்வொரு பதவிக்கும் இட ஒதுக்கீடு நியமன விதிகள் தனித்தனியே பின்பற்றப்படும். பல்வேறு இனங்களைச் சார்ந்த தேர்வர்களுக்கான இட ஒதுக்கீடு விவரங்கள் இவ்வறிவிக்கையின் பிற்சேர்க்கை II-இல் கொடுக்கப்பட்டுள்ளன. பதவி வாரியான காலிப் பணியிடப் பகிர்மானப் பட்டியல் பின்னர் அறிவிக்கப்படும்.

**8. தேர்வர்களுக்கான தகவல் பரிமாற்றம்:**

8.1. தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டினைத் தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு ஏதுவாக www.tnpscexams.in என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். அனுமதிச்சீட்டு அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. தேர்வர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையினையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

8.2. எழுத்துத் தேர்வு முடிவுகள், சான்றிதழ் பதிவேற்றம் செய்வதற்கான நாள் மற்றும் நேரம், உடற்தகுதித் தேர்வு, நடைச் சோதனை, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு ஆகியவை தேர்வாணைய இணையதளத்தில் www.tnpsc.gov.in வெளியிடப்படும். தேர்வர்களுக்கு இதுகுறித்து தனியாக அஞ்சல் மூலமாக தகவல் அனுப்பப்படமாட்டாது. மேற்கூறிய தகவல் தேர்வர்கள் பதிவு செய்துள்ள அலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஆகியவற்றிற்கு குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். எனவே தேர்வர்கள் இது தொடர்பாக தேர்வாணைய இணையதளத்தை பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தவறான கைப்பேசி எண் / மின்னஞ்சல் முகவரி காரணமாகவோ அல்லது தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட காரணங்களாலோ தேர்வர்களை குறுஞ்செய்தி / மின்னஞ்சல் சென்றடையாவிட்டாலும், சென்றடைவதில் / பெறுவதில் சிக்கல், தாமதம் ஏற்பட்டாலும் தேர்வாணையம் அதற்கு பொறுப்பாகாது. குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் பெறாதது குறித்து தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டாது.

**9. தேர்வாணையத்துடனான தகவல் தொடர்பு:**

9.1. தெளிவுரை வேண்டும் தேர்வர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரிலோ அல்லது 1800 419 0958 எனும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலமாகவோ, அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

9.2. ஒருமுறைப் பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களை helpdesk@tnpscexams.in எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். இதர சந்தேகங்களை grievance.tnpsc@tn.gov.in எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அஞ்சல் வழியாக தெரிவிக்கப்படும் தகவல்கள் அனைத்தும், செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தேர்வாணையச் சாலை, வ.உ.சி. நகர், பூங்கா நகர், சென்னை-600 003, எனும் முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

9.3 தேர்வர்கள் பின்வரும் விவரங்களுடன் தேர்வாணையத்தை தொடர்பு கொள்ள வேண்டும். அவ்விவரங்கள் இல்லாமல் பெறப்படும் தொடர்புகள் கவனிக்கப்படமாட்டாது.

அ) தேர்வின் பெயர்
ஆ) அறிவிக்கை எண் மற்றும் ஆண்டு
இ) பதிவு எண்
ஈ) தேர்வரின் பெயர் (முழுமையாக)
உ) விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள முழுமையான முகவரி
ஊ) தற்போது செயல்பாட்டில் உள்ள சரியான மின்னஞ்சல் முகவரி

9.4. வயது வரம்பு அல்லது பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோரி வரும் கடிதங்கள், இணையவழியில் விண்ணப்பித்தல் மற்றும் ஆவணங்களைப் பதிவேற்றுவதற்கான கால அவகாசத்தை நீட்டித்தல், தேர்வு / நடைச் சோதனை/ மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்வு ஆகியவற்றின் தேதி மற்றும் நேரத்தை மாற்றுதல் போன்ற கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டாது. எழுத்துத்தேர்வில் தோல்வியடைந்ததற்கு அல்லது எழுத்துத் தேர்வின் முடிவில் தேர்ச்சி பெறாததற்கு காரணங்கள் கேட்டு அல்லது விடைத்தாள் / விடைப்புத்தகங்களை மறுமதிப்பீடு செய்யும்படி கேட்டு தேர்வர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டாது.

9.5. தெரிவுப் பணிகள் முற்றிலுமாக முடியும் முன்னர், முதல்நிலை தேர்வின் மதிப்பெண் அல்லது விடைத்தாள் / விடைப் புத்தக நகல் அளிக்குமாறு கோரும் தேர்வர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**10. வழக்குகள்:**

இத்தெரிவு தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு இத்தெரிவு தற்காலிகமானதாகும்.

செயலாளர்

## பிற்சேர்க்கை – I

### இணைய வழியில் விண்ணப்பிக்கும் முறை

1. **இணையதளம்**: தேர்வர்கள் www.tnpscexams.in என்ற தேர்வாணையத்தின் இணையதளம் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. **ஒருமுறைப் பதிவு:**

2.1. தேர்வர்கள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள ஒருமுறைப் பதிவு பிரிவில் பதிவு செய்வது இன்றியமையாதது. பின்பு தேர்விற்கான விண்ணப்பத்தினை நிரப்பத் தொடங்க வேண்டும். தேர்வர்கள் ஒருமுறைப்பதிவு மூலம் பதிவுக்கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி, பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்தாண்டுகள் வரை செல்லுபடியாகும்.

2.2. ஒருமுறைப்பதிவின்போது, தேர்வர்கள் மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட தங்களது புகைப்படத்தினை ஸ்கேன் செய்து, 20KB - 50KB அளவில் "Photograph.jpg" என்றும், கையொப்பத்தினை 10KB - 20KB அளவில் "Signature.jpg" என்றும் CD / DVD / pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் 200 DPI என்ற அளவில் ஒளிச்செறிவு இருக்குமாறு சேமித்து, பதிவேற்றம் செய்வதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும்.

2.3. ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது தேர்வரின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கென தனித்தனியே தன்விவரப்பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். தேர்வர் தேர்வு எழுதவிரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், தனித்தனியே இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.

2.4. ஒருமுறைப்பதிவு (OTR) செய்வதற்கு, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவை கட்டாயமாகும். மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு தேர்வரும் தனக்கான தனி மின்னஞ்சல் முகவரியையும், கடவுச் சொல்லையும் உருவாக்கி வைத்திருக்க வேண்டும். எந்த தேர்வரும் தனது மின்னஞ்சல் முகவரி, கடவுச் சொல் மற்றும் அலைப்பேசி எண்ணை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாது. தேர்வர் தமக்கான மின்னஞ்சல் முகவரி ஏதும் வைத்திருக்கவில்லையெனில், அவர் விண்ணப்பிப்பதற்கு முன்னரே, புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், மின்னஞ்சல் முகவரியைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒரு முறைப்பதிவு அல்லது இணையவழி (Online) விண்ணப்பங்கள் சார்ந்த கேள்விகள் / கோரிக்கைகள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மூலம் பெறப்பட்டால் மட்டுமே பதில் அளிக்கப்படும்.

2.5. தேர்வர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். பயோமெட்ரிக் உள்ளிட்ட ஆதார் எண்ணுடன் தொடர்புடைய தகவல்கள், தேர்வரை அடையாளம் காணும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும். தேர்வாணையம் அத்தகவல்களை சேமிக்கவோ, யாருடனும் பகிரவோ செய்யாது. தேர்வர் ஒருமுறைப்பதிவில் தங்களது ஆதார் எண்ணினை இணைப்பதற்கான ஒப்புதலை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தேர்வரின் உண்மைத்தன்மையினை உறுதி செய்வதற்காக மட்டும் Central Identities Data Repository-(CIDR) க்கு ஆதார் தொடர்புடைய விவரங்களை தேர்வாணையம் பகிர்ந்துக்கொள்ளும். வருங்காலத்தில் விண்ணப்பிக்க இருக்கும் தேர்வர் அனைவரும் புதிதாக ஒருமுறைப் பதிவு எண்ணை உருவாக்குவதற்கும் / புதுப்பிப்பதற்கும் / ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ஒருமுறைப்பதிவில் உள்நுழைவதற்கும், எந்த ஒரு தேர்வு அறிவிக்கைக்காக விண்ணப்பிப்பதற்கும் ஆதார் எண்ணினை இணைப்பது கட்டாயமானதாகும்.

**2.6. ஒருமுறைப்பதிவின் போது அளிக்கப்பட வேண்டிய தகவல்கள்**

2.6.1. தேர்வர் இணையவழியில் பதிவு செய்யும் பொழுது, பத்தாம் வகுப்பு (SSLC) பதிவு எண், சான்றிதழ் எண், தேர்ச்சி பெற்ற ஆண்டு, மாதம், பயிற்று மொழி மற்றும் சான்றிதழ் வழங்கிய குழுமம் ஆகிய தகவல்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும். மேற்படி விவரங்கள் தவறாக பதிவு செய்திருப்பது கண்டறியப்பட்டால், தேர்வுக்கான இணையவழி விண்ணப்பம் எந்தவொரு நிலையிலும் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

2.6.2. பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சிக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ்கள் வைத்திருக்கும் தேர்வர் தாங்கள் இறுதியாக தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

2.6.3. தேர்வர் பத்தாம் வகுப்பு (SSLC) தொடர்பான விவரங்கள் மட்டுமின்றி ஒருமுறை பதிவுக்குத் தேவையான மற்ற அனைத்து விவரங்களையும் எத்தகைய தவறுமின்றி கவனமுடன் அளிக்கவேண்டும். இவ்விவரங்கள், ஒவ்வொரு தேர்வுக்கும் இணையவழியில் விண்ணப்பிக்கும்போது தேர்வரால் அவ்வப்பொழுது அளிக்கப்படும் மற்ற அனைத்து விவரங்களுக்கும் அடிப்படையாக இருக்கும்.

2.7. **ஒருமுறைப் பதிவில் திருத்தம்**:

2.7.1. தேர்வர்கள், ஒருமுறைப் பதிவில் அளித்துள்ள விவரங்களை, ஆதாரச் சான்றுகளை பதிவேற்றம் செய்து தேவைப்படும் பொழுது திருத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

2.7.2. ஒருமுறைப் பதிவில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், அதனை தேர்வர், இணையவழியில் விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே சரி செய்து விட வேண்டும். தேர்வருடைய ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்கள் தானாகவே போட்டித் தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களில் நிரப்பப்படும் என்பதால், ஒருமுறைப் பதிவில் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறாக இருப்பின், அதன்விளைவாக அவர்களது இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படலாம். எனவே, தேர்வர்கள் தங்களது ஒருமுறைப் பதிவில் உள்ள விவரங்களை கவனமுடனும், சரியாகவும் நிரப்புமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.


2.7.3. ஒருமுறைப்பதிவு அல்லது இணையவழி விண்ணப்பங்களை நிரப்புவது குறித்த அறிவுரைகளை தேர்வர்கள் பின்பற்றாததால் வரும் எந்த விளைவுகளுக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

2.7.4. ஒருமுறைப் பதிவு குறித்த அறிவுரைகள் மற்றும் விளக்கங்கள் www.tnpscexams.in என்ற இணைய தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. **இணையவழி விண்ணப்பம்**:

3.1. எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர், தேர்வாணைய இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அப்பதவிக்குரிய அறிவிக்கையில் "APPLY" என்ற உள்ளீடு வழியே ஒருமுறைப் பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும். தேர்வர், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். தேர்வர் ஏற்கனவே ஏற்படுத்திய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை மறந்துவிட்டால், அவற்றை "FORGOT PASSWORD" மற்றும் "FORGOT USER ID" ஆகிய விருப்பத் தெரிவுகள் மூலம் மீண்டும் பெறலாம் / உருவாக்கலாம். தேர்வருக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை தேர்வாணையம் வழங்காது.

3.2. ஏற்கனவே பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் பெற்றிருக்கும் தேர்வர் அதனைப் பயன்படுத்தி உள்நுழையலாம். ஒரு முறைப்பதிவில் ஏற்கனவே பதிவு செய்துள்ள புகைப்படம் உள்ளிட்ட விவரங்களுடன், முந்தைய இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றப்பட்ட புகைப்படங்களும் திரையில் தெரியவரும். தேர்வர் மேலும் தொடரும் முன், ஒரு முறைப்பதிவில் தங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்களை சரிபார்த்து மீண்டும் உறுதி செய்து கொள்ள வேண்டும். தேர்வாணையத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிக்கும் போது, அதற்குரிய கூடுதலாக தேவைப்படும் விவரங்களையும் பதிய வேண்டும். தேர்வர் ஒரு முறைப்பதிவில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் ஏதேனும் தவறாக இருப்பின், OTR Edit என்ற விருப்பத் தெரிவின் மூலம், திருத்தங்கள் மேற்கொள்ளலாம். ஒரு முறைப்பதிவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் இணையவழி விண்ணப்பங்களில் மட்டுமே தோன்றும்.




3.3. தேர்வு அறிவிக்கை வெளியிடப்பட்ட அன்றோ, அதற்கு பிறகோ எடுக்கப்பட்ட புகைப்படத்தை இணையவழியில் ஒவ்வொரு முறை விண்ணப்பிக்கும்போதும் தேர்வர்கள் பதிவேற்றம் செய்ய வேண்டும். தேர்வர் தங்களது விண்ணபத்தில் கடவுச்சீட்டுக்குரிய அளவிலான (உயரம் 4.5 செ.மீ. [170 Pixels] மற்றும் அகலம் 3.5 செ.மீ. [130 Pixels]) வெள்ளைப் பின்னணியில், முகம் மற்றும் இரண்டு காதுகளும், கழுத்துப் பகுதியும் தெளிவாகத் தெரியுமாறு சரியான அளவு (Correct Size) மற்றும் சரியான படிவத்தில் (Correct Format), புகைப்பட ஸ்டூடியோவில் (Photo Studio) எடுக்கப்பட்ட வண்ணப் புகைப்படத்தினை மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படத்தின் கீழே தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி தெரியுமாறு அச்சிடப்பட்டிருக்க வேண்டும். புகைப்படத்தின் 4.5 செ.மீ. (170 Pixels) மொத்த உயரத்தில், தேர்வரின் படம் 3.0 செ.மீ. (115 Pixels) ஆகவும், தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி ஆகிய தகவல் 1.5 செ.மீ. (55 Pixels) ஆகவும் இருக்க வேண்டும். புகைப்படத்தைப் பதிவேற்றம் செய்வதற்கு டிஜிட்டல் வடிவில் CD / DVD / pen drive / hard drive போன்ற ஏதேனும் ஒன்றில் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

3.4. டிஜிட்டல் வடிவிலான புகைப்படம் இல்லையெனில், புகைப்படத்தின் கீழே தேர்வரின் பெயர் மற்றும் புகைப்படம் எடுக்கப்பட்ட தேதி அச்சிடப்பட்ட கடவுச்சீட்டுக்குரிய (Passport Size) புகைப்படத்தினை ஒரு வெள்ளைத்தாளில் ஒட்டி, அத்தாளினை 200 DPI ஒளிச்செறிவு என்ற அளவில் ஸ்கேன் செய்து புகைப்படத்தை மட்டும் CROP செய்து 20 KB - 50 KB என்ற அளவில் "Photograph.jpg" என சேமித்து, அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படம் ஒட்டப்பட்ட முழுத்தாளினையும் ஸ்கேன் / பதிவேற்றம் செய்யக்கூடாது. சுயமாக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் (Selfie), கைப்பேசியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், நகலெடுக்கப்பட்ட (Xerox) புகைப்படங்கள், குடும்ப விழாக்கள் மற்றும் சுற்றுலாத்தலங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், மரம், செடி, கொடி, கட்டடங்கள் போன்ற பின்னணியைக் கொண்டு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எவற்றையும் பதிவேற்றம் செய்யக்கூடாது. தேர்வரின் புகைப்படமின்றி வேறு இயற்கைக்காட்சிகள், விலங்குகள், கட்டடங்கள் போன்ற புகைப்படத்தினை பதிவேற்றம் செய்யக்கூடாது. இவ்வறிவுரைகளை மீறி, பொருத்தமற்ற புகைப்படங்களை பதிவேற்றம் செய்யும் தேர்வரின் இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.5. கையொப்பத்தினை பதிவேற்றம் செய்வதற்கு முன்பு, தேர்வர் ஒரு வெள்ளைத்தாளில் அகலம் 6.0 X உயரம் 2.0 செ.மீ. (230 Pixels X 75 Pixels) கொண்ட கட்டம் வரைந்து, அதில் நீலம் அல்லது கருப்பு நிற மை பேனாவைப் பயன்படுத்தி கையொப்பமிட வேண்டும். கையொப்பமிட்ட வெள்ளைத் தாளினை 200 DPI என்ற ஒளிச்செறிவில் ஸ்கேன் செய்து 10KB-20KB என்ற அளவில் "Signature.jpg" என சேமித்து அதனைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3.6. தேர்வரின் தெளிவான புகைப்படம் மற்றும் கையொப்பம் உரிய அளவு மற்றும் வடிவத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். புகைப்படம் மற்றும் கையொப்பம் பதிவேற்றம் செய்யப்படாமலோ / பதிவேற்றம் செய்யப்படும் புகைப்படம் மற்றும் கையொப்பம் தெளிவாக இல்லாமலோ இருப்பின், இணையவழி விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.7 **தேர்வு மையங்கள்:**

**அ. முதல் நிலைத் தேர்வு**

3.7.1. தேர்வர் இணையவழியில் விண்ணப்பிக்கும் போது, முதல் நிலை தேர்விற்கு இரண்டு மாவட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவார். தேர்ந்தெடுத்த இரு மாவட்டங்களுள்

ஏதேனும் ஒன்றில் உள்ள பல தேர்வு மையங்களுள் ஒன்றில் அவர் முதல்நிலைத் தேர்வெழுத அனுமதிக்கப்படுவார். நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளி தேர்வரைப் பொறுத்தவரையில், ஒரு மாவட்டத்தை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார். தேர்ந்தெடுக்கப்பட்ட அதே மாவட்டத்தில் உள்ள பல தேர்வு மையங்களுள் ஒரு தேர்வு மையத்தில் அவர் முதல்நிலைத் தேர்வெழுத அனுமதிக்கப்படுவார்.

3.7.2. தேர்வர்கள் அவர்களுக்கு (அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ளபடி) ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். தேர்வு மையங்களை மாற்றக் கோரும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3.7.3. தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ / குறைக்கவோ அல்லது தேர்வர்களை வேறு மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு. தேர்வர் தெரிவு செய்த தேர்வு மையங்களில் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையில், அருகில் உள்ள தேர்வு மையத்தில் ஒதுக்கீடு செய்யவும் தேர்வாணையத்திற்கு உரிமை உண்டு.

3.7.4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு மையங்களில் பொதுவான முதல் நிலைத் தேர்வு நடைபெறும்.

| மாவட்டம் | தேர்வு மையத்தின் பெயர் | மைய குறியீடு |
|---|---|---|
| **அரியலூர்** | அரியலூர் | 3001 |
| | உடையார் பாளையம் | 3004 |
| **செங்கல்பட்டு** | செங்கல்பட்டு | 3301 |
| | மதுராந்தகம் | 3303 |
| | தாம்பரம் | 3305 |
| **சென்னை** | ஆலந்தூர் | 0102 |
| | அம்பத்தூர் | 0103 |
| | எழும்பூர் | 0106 |
| | கிண்டி | 0107 |
| | மாதவரம் | 0108 |
| | மைலாப்பூர் | 0111 |
| | பெரம்பூர் | 0112 |
| | திருவொற்றியூர் | 0115 |
| | தண்டையார்பேட்டை | 0116 |
| | வேளச்சேரி | 0117 |
| **கோயம்புத்தூர்** | கோயம்புத்தூர் ( வடக்கு) | 0204 |
| | கோயம்புத்தூர் ( தெற்கு ) | 0205 |
| | மேட்டுப்பாளையம் | 0208 |
| | பொள்ளாச்சி | 0210 |
| | சூலூர் | 0211 |
| **கடலூர்** | கடலூர் | 0301 |
| | சிதம்பரம் | 0303 |
| | குறிஞ்சிப்பாடி | 0305 |
| | பண்ருட்டி | 0306 |
| | விருதாச்சலம் | 0310 |
| **தருமபுரி** | தருமபுரி | 0401 |
| | அரூர் | 0402 |
| | பாப்பிரெட்டிப்பட்டி | 0406 |
| **திண்டுக்கல்** | திண்டுக்கல் | 0501 |
| | கொடைக்கானல் | 0506 |
| | நிலக்கோட்டை | 0508 |
| | பழனி | 0510 |

| | | |
|---|---|---|
| ஈரோடு | ஈரோடு | 0601 |
| | பவானி | 0603 |
| | கோபிச்செட்டிபாளையம் | 0604 |
| | பெருந்துறை | 0608 |
| கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 3401 |
| | திருக்கோயிலூர் | 3405 |
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 0701 |
| | ஸ்ரீ பெரும்பதூர் | 0703 |
| | உத்திரமேரூர் | 0704 |
| கன்னியாகுமரி | நாகர்கோவில் | 0801 |
| | விளவங்கோடு | 0807 |
| கரூர் | கரூர் | 0901 |
| | குளித்தலை | 0905 |
| கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 3101 |
| | ஓசூர் | 3104 |
| | போச்சம்பள்ளி | 3105 |
| மதுரை | மதுரை (கிழக்கு) | 1003 |
| | மதுரை (வடக்கு) | 1004 |
| | மதுரை (தெற்கு) | 1005 |
| | மேலூர் | 1007 |
| | மதுரை (மேற்கு) | 1006 |
| | திருப்பரங்குன்றம் | 1010 |
| | உசிலம்பட்டி | 1011 |
| மயிலாடுதுறை | மயிலாடுதுறை | 3801 |
| | சீர்காழி | 3803 |
| நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 1101 |
| நாமக்கல் | நாமக்கல் | 1201 |
| | பரமத்திவேலூர் | 1205 |
| | ராசிபுரம் | 1206 |
| | திருச்செங்கோடு | 1208 |
| பெரம்பலூர் | பெரம்பலூர் | 1401 |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1501 |
| | அறந்தாங்கி | 1503 |
| இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1601 |
| | பரமக்குடி | 1606 |
| இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை | 3501 |
| | அரக்கோணம் | 3502 |
| சேலம் | சேலம் | 1701 |
| | ஆத்தூர் | 1702 |
| | மேட்டூர் | 1706 |
| | ஓமலூர் | 1707 |
| | சேலம் மேற்கு | 1710 |
| | சங்ககிரி | 1711 |
| | வாழப்பாடி | 1712 |
| சிவகங்கை | சிவகங்கை | 1801 |
| | தேவகோட்டை | 1802 |
| | காரைக்குடி | 1805 |

| | | |
|---|---|---|
| தென்காசி | தென்காசி | 3601 |
| | ஆலங்குலம் | 3602 |
| | சங்கரன்கோவில் | 3604 |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1901 |
| | கும்பகோணம் | 1903 |
| | ஒரத்தநாடு | 1904 |
| | பாபநாசம் | 1905 |
| | பட்டுக்கோட்டை | 1906 |
| நீலகிரி | உதகமண்டலம் | 1301 |
| | குன்னூர் | 1302 |
| | கூடலூர் | 1303 |
| தேனி | தேனி | 2001 |
| | பெரியகுளம் | 2004 |
| | உத்தமபாளையம் | 2005 |
| திருவள்ளூர் | திருவள்ளூர் | 2101 |
| | ஆவடி | 2102 |
| | பொன்னேரி | 2105 |
| | பூந்தமல்லி | 2106 |
| | திருத்தணி | 2108 |
| திருவண்ணாமலை | திருவண்ணாமலை | 2201 |
| | ஆரணி | 2202 |
| | கீழ்பென்னத்தூர் | 2208 |
| | போளூர் | 2209 |
| திருவாரூர் | திருவாரூர் | 2301 |
| | மன்னார்குடி | 2304 |
| | திருத்துறைப்பூண்டி | 2307 |
| தூத்துக்குடி | தூத்துக்குடி | 2401 |
| | கோவில்பட்டி | 2405 |
| | ஸ்ரீவைகுண்டம் | 2408 |
| | திருச்செந்தூர் | 2409 |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி (மேற்கு) | 2510 |
| | லால்குடி | 2502 |
| | மணப்பாறை | 2504 |
| | முசிறி | 2506 |
| | ஸ்ரீரங்கம் | 2507 |
| | துறையூர் | 2509 |
| | திருச்சிராப்பள்ளி (கிழக்கு) | 2511 |
| திருநெல்வேலி | திருநெல்வேலி | 2601 |
| | அம்பாசமுத்திரம் | 2602 |
| | சேரன்மகாதேவி | 2603 |
| | பாளையங்கோட்டை | 2606 |
| திருப்பத்தூர் | திருப்பத்தூர் | 3701 |
| | வாணியம்பாடி | 3704 |
| திருப்பூர் | திருப்பூர் (வடக்கு) | 3208 |
| | தாராபுரம் | 3203 |
| | திருப்பூர் (தெற்கு) | 3209 |

| | | |
|---|---|---|
| **வேலூர்** | வேலூர் | 2701 |
| | குடியாத்தம் | 2703 |
| **விழுப்புரம்** | விழுப்புரம் | 2801 |
| | செஞ்சி | 2802 |
| | திண்டிவனம் | 2807 |
| **விருதுநகர்** | விருதுநகர் | 2901 |
| | அருப்புக்கோட்டை | 2902 |
| | ராஜபாளையம் | 2904 |
| | சாத்தூர் | 2905 |
| | சிவகாசி | 2906 |
| | ஸ்ரீவில்லிபுத்தூர் | 2907 |

**ஆ. முதன்மைத் தேர்வு**

3.7.5. முதன்மைத் தேர்வு மையங்கள்:

3.7.5.1. ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் II - தொகுதி II பணிகளுக்கான முதன்மைத் தேர்வின் தாள் II-ற்கான தேர்வு, பின்வரும் தேர்வு மையங்களில் நடைபெறும்:

| **வ.எண்** | **தேர்வு மையத்தின் பெயர்** | **மைய குறியீடு** |
|---|---|---|
| 1. | சென்னை | 0101 |
| 2. | கோயம்புத்தூர் | 0201 |
| 3. | மதுரை | 1001 |
| 4. | திருச்சிராப்பள்ளி | 2501 |
| 5. | திருநெல்வேலி | 2601 |
| 6. | சேலம் | 1701 |
| 7. | வேலூர் | 2701 |

3.7.5.2. ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் II ல் உள்ள தொகுதி II மற்றும் IIA பணிகளுக்கான முதன்மைத் தேர்விற்கான தாள் I பொதுவான தமிழ் தகுதித்தேர்வு மற்றும் IIA பணிக்கான முதன்மைத் தேர்விற்கான தாள் II ஆகியவை பின்வரும் தேர்வு மையங்களில் நடைபெறும்.

| **வ. எண்** | **தேர்வு மையத்தின் பெயர்** | **மைய எண்.** | **வ.எண்** | **தேர்வு மையத்தின் பெயர்** | **மைய எண்.** |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் | 3001 | 21. | இராணிப்பேட்டை | 3501 |
| 2. | செங்கல்பட்டு | 3301 | 22. | சேலம் | 1701 |
| 3. | சென்னை | 0101 | 23. | சிவகங்கை | 1801 |
| 4. | கோயம்புத்தூர் | 0201 | 24. | தென்காசி | 3601 |
| 5. | கடலூர் | 0301 | 25. | தஞ்சாவூர் | 1901 |
| 6. | தர்மபுரி | 0401 | 26. | நீலகிரி | 1301 |
| 7. | திண்டுக்கல் | 0501 | 27. | தேனி | 2001 |
| 8. | ஈரோடு | 0601 | 28. | திருவள்ளூர் | 2101 |
| 9. | கள்ளக்குறிச்சி | 3401 | 29. | திருவண்ணாமலை | 2201 |
| 10. | காஞ்சிபுரம் | 0701 | 30. | திருவாரூர் | 2301 |
| 11. | கன்னியாகுமரி | 0801 | 31. | தூத்துக்குடி | 2401 |
| 12. | கரூர் | 0901 | 32. | திருச்சிராப்பள்ளி | 2501 |
| 13. | கிருஷ்ணகிரி | 3101 | 33. | திருநெல்வேலி | 2601 |
| 14. | மதுரை | 1001 | 34. | திருப்பத்தூர் | 3701 |
| 15. | மயிலாடுதுறை | 3801 | 35. | திருப்பூர் | 3201 |
| 16. | நாகப்பட்டினம் | 1101 | 36. | வேலூர் | 2701 |
| 17. | நாமக்கல் | 1201 | 37. | விழுப்புரம் | 2801 |
| 18. | பெரம்பலூர் | 1401 | 38. | விருதுநகர் | 2901 |
| 19. | புதுக்கோட்டை | 1501 | | | |
| 20. | இராமநாதபுரம் | 1601 | | | |

3.8. **விண்ணப்பத்தை சரிபார்க்க வாய்ப்பு**:

3.8.1. தேர்வர்கள் இணையவழி விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விவரங்களை அதற்குரிய இடங்களில் கவனமுடன் பூர்த்தி செய்த பின், விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் "SAVE AND PROCEED" என்ற பொத்தானை அழுத்த வேண்டும். தேர்வர் "SAVE AND PROCEED" பொத்தானை அழுத்துவதற்கு முன், விண்ணப்பத்தின் ஒவ்வொரு குறிப்பிட்ட கலத்தையும் சரிபார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3.8.2. தேர்வர் தமது இணைய வழி விண்ணப்பத்தினை நிரப்பும் பொழுது விண்ணப்பத்தினை திருத்தவோ / தகவல்களை சேர்க்கவோ / நீக்கவோ முடியும். விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, விண்ணப்பத்தினை சரிபார்க்க வாய்ப்பு வழங்கப்படும். இதன்படி "PREVIEW" பொத்தானை அழுத்துகின்ற போது தேர்வரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கு விண்ணப்பத்தின் PREVIEW அனுப்பப்படும். இத்தகவல் தேர்வரின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்குக் குறுஞ்செய்தியாகவும் அனுப்பப்படும்.

3.8.3. இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிப்பதற்கு முன்பு, தேர்வர் மேற்குறிப்பிடப்பட்ட வரைவு விண்ணப்பத்தில் (Preview) உள்ள விவரங்களை கவனமாக சரிபார்த்து ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அவற்றை சரிசெய்து கொள்ள வேண்டும். இப்பணியினை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் மற்றும் நேரம் வரை மேற்கொள்ளலாம். விண்ணப்பம் இறுதியாக சமர்ப்பிக்கப்படாமலோ அல்லது ஏதேனும் விவரங்கள் விடுபட்டிருந்தாலோ அதற்கு தேர்வர் மட்டுமே முழு பொறுப்பாவார்.

3.8.4. தேர்வர் இறுதியாக சமர்ப்பி (Submit) என்ற பொத்தானை அழுத்துவதன் வாயிலாகவே அவர் ஒரு பதவிக்கு இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ளார் என கருதப்படும். தேர்வர் அவருக்கு கிடைக்கப்பெற்ற preview-ஐ மட்டும் கொண்டு எவ்வகையிலும் அவர் ஒரு குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார் எனக் கருத இயலாது.

3.9. **தேர்வுக் கட்டணம்**:

3.9.1. தேர்வுக் கட்டணச் சலுகை கோராத தேர்வர்கள் முதல் நிலை தேர்விற்கு தேர்வுக் கட்டணமாக ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது செலுத்த வேண்டும்.

3.9.2. முதல்நிலைத் தேர்வின் முடிவுகளின் அடிப்படையில் முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வுக் கட்டணச் சலுகை கோராத நிலையில், தேர்வாணையத்திலிருந்து கட்டணம் செலுத்துமாறு அறிவிப்பு கிடைக்கப் பெற்ற நிலையில் முதன்மை தேர்விற்கான கட்டணமாக ரூ.150/- (ரூபாய் நூற்றைம்பது மட்டும்) செலுத்த வேண்டும். தொகுதி II மற்றும் தொகுதி IIA ஆகிய இரண்டு முதன்மைத் தேர்வுகளுக்கும் அனுமதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வுக் கட்டணச் சலுகை கோராத நிலையில், முதன்மைத் தேர்வுகளுக்கான கட்டணம் ரூ.300/- (ரூபாய் முந்நூறு மட்டும்) செலுத்த வேண்டும்.

3.9.3. சிறப்புப் பிரிவுகளைச் சேர்ந்த தேர்வர்கள் அப்பிரிவுகளின் அடிப்படையில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு கோரலாம். மேலும் விவரங்களுக்கு அறிவிக்கையில் உள்ள பிற்சேர்க்கை – II ஐ பார்க்கவும்.

3.9.4. முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட உரிமைகளின் அடிப்படையில், மொத்த தேர்வுக் கட்டண இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். தேர்வர் பெறும் இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையானது தெரிவின் எந்நிலையிலும் தேர்வாணையத்தால் சரிபார்க்கப்படும். தேர்வர் தம்முடைய முந்தைய விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களை மறைத்து விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டண விலக்கு தவறாகக் கோரும்பட்சத்தில், அவருடைய விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படுவதுடன், தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து ஒரு வருட காலத்திற்கு விலக்கி வைக்கப்படுவார்.

3.9.5. தேர்வர் தேர்வுக் கட்டண விலக்கு தொடர்பான இலவச சலுகையைப் பெறுவதற்கு "ஆம்" அல்லது "இல்லை" என்ற விருப்பத்தினை கவனமாக தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார். விண்ணப்பம் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், தெரிவு செய்யப்பட்ட விருப்பங்களை மாற்றம்

செய்யவோ, திருத்தம் செய்யவோ இயலாது. தேர்வர், தேர்வர்களின் தன்விவரப்பக்கத்தின் <Application History>-ல் தோன்றும் தகவல்களைப் பொருட்படுத்தாமல் தேர்வுக் கட்டணச் சலுகை இதுவரை எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தங்களின் சொந்த நலன் கருதி கணக்கிட்டு வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

3.9.6. கட்டணச் சலுகை கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது (விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளைப் பொருட்படுத்தாமல்) தேர்வருக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையிலிருந்து ஒரு வாய்ப்பு குறைக்கப்பட்டதாகக் கருதப்படும். அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச இலவச வாய்ப்புகளை பெற்றுக் கொண்ட தேர்வர் / தேர்வுக் கட்டணச் சலுகையைப் பெற விரும்பாத தேர்வர் / தேர்வுக் கட்டணச் சலுகைக்கு தகுதியற்ற தேர்வர் தேர்வுக் கட்டணச் சலுகை தொடர்பான கேள்விக்கு எதிரே “இல்லை” என்ற விருப்பத்தினை தெரிவு செய்ய வேண்டும். அத்தேர்வர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை மூலம் தேவையான கட்டணத்தினை பின்னர் செலுத்தலாம்.

3.9.7. முதல்நிலைத் தேர்வுக்கான இணையவழி விண்ணப்பத்துடன் அல்லது முதன்மை தேர்வுக்கான தேர்வாணையத்திடமிருந்து தகவல் பெறப்பட்டவுடன், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை சரியான நேரத்தில் செலுத்த தவறினால், உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

3.10. **தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை**:

3.10.1. இணையவழி விண்ணப்பத்தில் உரிய விவரங்களைப் பதிவு செய்த பின்னர், விண்ணப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குள் தேர்வர் தேர்வுக் கட்டணத்தை இணைய வழியில் (அதாவது இணைய வங்கி / பற்று அட்டை / கடன் அட்டை/ ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம்(UPI )) மூலம் ஏதேனும் ஒரு முறையினை தேர்வு செய்து செலுத்த வேண்டும். தேர்வர் உரிய சேவைக் கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டும்.

3.10.2. இணையவழியில் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், நேரடியாக செலுத்தும் வரைவு காசோலை / அஞ்சலக காசோலை போன்றவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் அவை திரும்ப வழங்கப்படமாட்டாது.

3.10.3. தேர்வர் இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையை தெரிவு செய்த பின், விண்ணப்பத்தில் அதற்குரிய கூடுதல் பக்கம் திரையில் தெரியவரும். அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாகப் பின்பற்றி, தேவையான விவரங்களைப் பதிவு செய்து கட்டணம் செலுத்த வேண்டும். இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் பணப் பரிமாற்றம் தோல்வியடையும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் தோல்வி ஏற்படும் நிலையில், தேர்வர் ஏற்கனவே செய்த பணப் பரிமாற்ற நிலவரத்தினை சரிபார்க்க முடியும். ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணப்பரிமாற்றம் தோல்வியடைந்திருப்பின், தேர்வர் மீண்டும் இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையினைத் தேர்ந்தெடுத்து பணம் செலுத்த வேண்டும். இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் தோல்வி ஏற்பட்டால் தேர்வர் கணக்கில் பிடித்தம் செய்யப்படும் தொகை தேர்வர் கணக்கிலேயே திருப்பி சேர்க்கப்படும். தேர்வர் மேற்கொண்ட பணப்பரிமாற்ற நிலவரத்தை அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்ட அனைத்துப் பணப் பரிமாற்றங்களிலும் தோல்வி ஏற்படும் நிலையில்,தேர்வர் மீண்டும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இணைய வழிக் கட்டணம் செலுத்தும் முறையில் ஏற்படும் தடைகளுக்கு தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது. எனவே, கட்டணம் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதை உறுதி செய்து கொள்வது தேர்வரின் பொறுப்பாகும்.

3.10.4. இணையவழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும் போது கட்டண விவரங்களைப் பதிவு செய்த பின்னர், அதற்கான தகவல் திரையில் வரும்வரை காத்திருக்கவும். இதற்கிடையில் “Back” அல்லது “Refresh” பொத்தான்களை அழுத்தாமல் காத்திருக்க வேண்டும். இல்லையெனில் பணப்பரிமாற்றம் தடைபடும் அல்லது இரண்டாம் முறையாகப் பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும்.

3.10.5. இணையவழிப் பணப் பரிமாற்றம் வெற்றிகரமாக நிறைவுற்றவுடன், ஒரு விண்ணப்ப எண் / தேர்வருக்கான அடையாளக் குறியீடு திரையில் தோன்றும். தேர்வர் அந்த விண்ணப்ப எண்/ தேர்வருக்கான அடையாளக் குறியீடு ஆகியவற்றை அந்தத் தேர்வின் எதிர்காலத் தேவைக்காக குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

3.10.6. கட்டணம் செலுத்தும் முறையினை எந்நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு உண்டு.

3.11. **இணையவழி விண்ணப்பத்தில் திருத்தம்**:

3.11.1. இணையவழி விண்ணப்பத்தில் அளித்துள்ள அனைத்து விவரங்களையும், தேர்வர் அவ்விணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசி தேதி வரை திருத்தம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

3.11.2. தேர்வர் தமது இணையவழி விண்ணப்பத்தில் உள்ள புகைப்படம் மற்றும் / அல்லது கையொப்பத்தினை மாற்றம் செய்ய விரும்பினால், இணையவழி விண்ணப்பத்தில் உள்ள EDIT ல் சென்று அவற்றை மறுபதிவேற்றம் செய்து இறுதியாக சேமித்தபின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க (SUBMIT) வேண்டும்.

3.11.3. இணையவழி விண்ணப்பத்தில் உள்ள தகவல்களில், சில தகவல்கள் தேர்வரின் ஒருமுறைப் பதிவில் இருந்து முன் கொணரப்பட்டவை. எனவே, அத்தகவல்களைத் திருத்தம் செய்வதற்கு தேர்வர், முதலில் தனது ஒருமுறைப் பதிவில் (OTR) ல் உள்ள Edit profile-ல் சென்று உரிய திருத்தங்களை செய்து, அவற்றை சேமிக்க வேண்டும். அதன் பின்னர், இணையவழி விண்ணப்பத்தில் உள்ள EDIT-ல் சென்று விண்ணப்பத்தில் திருத்தம் செய்ய விரும்பும் விவரங்களை திருத்தம் செய்து, இறுதியாக சேமித்தபின் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க (SUBMIT) வேண்டும். தேவைப்படின், அதற்குரிய நகலினை அச்சுப்பிரதி (Print Out) எடுத்துக் கொள்ளலாம்.

3.11.4. விண்ணப்பத்தில் திருத்தம் செய்த பிறகு, திருத்தப்பட்ட விவரங்களை இறுதியாக சேமித்து சமர்ப்பிக்கவில்லையென்றால், தேர்வர் இதற்கு முன்பு சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். திருத்தம் செய்யப்பட்ட விவரங்களின் அடிப்படையில், தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால், உரிய தேர்வுக் கட்டணத்தை இணைய வழியாக செலுத்தவேண்டும். உரியத் தேர்வுக் கட்டணத்தை ஏற்கனவே செலுத்திய தேர்வர்கள் மீண்டும் செலுத்தத் தேவையில்லை.

3.12. **விண்ணப்பத் திருத்தச் சாளரம்**:

3.12.1. இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிக்குப் பின்னர், அறிவிக்கையின் பத்தி 1 ல் முக்கிய அறிவுரைகளில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பத் திருத்தச் சாளரம் (Application Correction Window), மூன்று நாட்களுக்கு செயல்படுத்தப்படும். அப்போது தேர்வர்கள் இணையவழி விண்ணப்பங்களில் உள்ள விவரங்களை திருத்தம் செய்து கொள்ள இயலும் . விண்ணப்பத் திருத்தச் சாளர காலத்தின் கடைசி தேதிக்குப் பின்னர், தேர்வர்கள் விண்ணப்பங்களில் மாற்றம் செய்ய இயலாது.

3.12.2. தேர்வர்களால் இறுதியாக அளிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையிலேயே விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மேலும், இணையவழி விண்ணப்பத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களைத் திருத்தம் செய்ததன் விளைவாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமாயின், அதற்கு தேர்வரே பொறுப்பாவார், தேர்வாணையம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது. இணையவழி விண்ணப்பத்தில் உள்ள உரிமைகோரல்களை மாற்றம் செய்வது குறித்து எந்தவொரு தகவல் தொடர்பு முறையிலும் பெறப்படும் கோரிக்கைகள் / முறையீடுகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

3.13. கடைசி நாளில் அதிகப்படியான தேர்வர்கள் விண்ணப்பிக்கும் போது, இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது. எனவே, தேர்வர் தேர்வுக்கு விண்ணப்பிக்கக் குறிப்பிட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே, போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

3.14. மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது தேர்வாணையத்தின் கட்டுப்பாட்டிற்கு மீறிய வேறு காரணங்களால், தேர்வர் தமது இணையவழி விண்ணப்பத்தினை கடைசி கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

3.15. தேர்வாணையம் குறிப்பிட்டுக் கேட்டாலன்றி, தேர்வர் இணையவழி விண்ணப்பத்தின் நகலினையோ அல்லது தொடர்புடைய ஆதாரச் சான்றிதழ்களையோ தேர்வாணையத்திற்கு அஞ்சல் வழியாக அனுப்பத் தேவையில்லை.

3.16. தேர்வர் ஒரு முறைப் பதிவில் / இணையவழி விண்ணப்பத்தில் தமது பெயர் மற்றும் தங்களது தந்தை அல்லது தாயார் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச் சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.

3.17. இணையவழி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் இடையே வேறுபாடிருப்பின், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

3.18. தேர்வர் தமது இணையவழி விண்ணப்பத்தில் தரும் தவறான அல்லது முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களால் ஏற்படும் விளைவுகளுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

3.19. **ஆவணங்கள் பதிவேற்றம்**:

3.19.1. கணினிவழித்திரை சான்றிதழ் சரிப்பார்ப்புக்கு அனுமதிக்கப்படுபவர்கள் தமது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுக்கான சான்றுகளை தேர்வாணையம் கோரும் நேரத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

3.19.2. தேர்வர், எந்தப் பதவிக்கு விண்ணப்பித்தாரோ அந்த அறிவிக்கையின் எண் மற்றும் விண்ணப்ப எண்ணுடன் தேர்வரால் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள், அத்தேர்வரது ஒருமுறைப் பதிவில் இணைக்கப்படும். (தேர்வாணைய அறிவிக்கையின்படி ஒவ்வொரு பதவிக்கும்) எனவே, அவற்றை தேர்வர் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

3.19.3. தேர்வரால் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் அவர்களது ஒருமுறைப்பதிவுடன் இணைக்கப்பட்டு அவ்விவரங்கள் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு கணினி சர்வரில் (Server) சேமித்து வைக்கப்படும். அதன் பின்னர் தேர்வர் வேறு ஏதேனும் பதவிகளுக்கு (அதாவது அவர்கள் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்த நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள்) விண்ணப்பிக்கும் பொழுது, அவர்களால் ஏற்கனவே பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கணினிவழித்திரையில் காண்பிக்கப்படும் மற்றும் அவர்கள் மீண்டும் அந்த ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டியதில்லை. தேர்வர் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்த நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குப் பின்னர், ஏதேனும் பதவிகளுக்கு விண்ணப்பித்தால் அவர்களது அனைத்து ஆவணங்களையும் புதியதாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

**4. குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்**:

4.1. இணையவழி விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள தேர்வர்கள், அதுதொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை / குற்றக்குறிப்பாணை / காரணம் கேட்கும் குறிப்பாணையின் நகலை (நேர்வுக்கேற்ப) கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2. தேர்வர், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத்தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், கோரும்பொழுது தொடர்புடைய நீதிமன்ற ஆணை அல்லது விடுவிக்கப்பட்ட ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த குறிப்பாணையினை பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.3. தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன்வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் தேர்வர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்ப்பிக்கக் கோரும் நிலையில், தேர்வர் அது குறித்த உண்மை விவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய தேர்வருடைய விண்ணப்பம் தேர்வாணையத்தால் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் இரத்து செய்யப்பட்டு, ஓராண்டுக்கு தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

4.4. நிலுவையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றவியல் நடவடிக்கைகள், தேர்வரின் தெரிவு வாய்ப்புகளை (Selection Prospects) எவ்வகையிலும் பாதிக்காது. எனினும், மேற்கண்ட தகவல்களை தேர்வர் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கத் தவறினால், (எவ்வித உள்நோக்கமுமின்றி இருந்தாலும்) விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.5. குற்றவியல் வழக்கு / ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள தேர்வர்களின் தெரிவு (Selection), நிலுவையில் உள்ள குற்றவியல் / ஒழுங்கு வழக்கின் முடிவுக்கு உட்பட்டு நிறுத்தி வைக்கப்படும்.

5. **பணி விவரங்கள்**:

5.1. தேர்வர்கள், இணையவழியில் விண்ணப்பிக்கும் போது, இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியில் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக் கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் அரசு சார்புள்ள நிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தரப் பணியில் இருப்பின், தங்களது பணி குறித்த விவரத்தினை தேர்வாணையத்திற்கு தெரிவித்தல் வேண்டும். தேர்வர், பணி குறித்த உண்மையை மறைக்கும் பட்சத்தில், அவரது விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.2. தேர்வர்கள், தங்களுடைய விண்ணப்பங்களை துறைத்தலைவர் வாயிலாகவோ அல்லது தாம் வகித்து வரும் பதவிக்கு நியமனம் செய்வதற்கு தகுதி பெற்ற அலுவலர் மூலமாகவோ அனுப்பத் தேவையில்லை. மாறாக, தமது துறைத் தலைவருக்கு, தாம் தேர்வாணையத்தின் எந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கிறார் என்பதை எழுத்து மூலம் தெரிவித்து, தெரிவாகும் பட்சத்தில் கீழ்க்கண்ட நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

## தடையின்மைச் சான்றிதழ்

திரு/திருமதி/செல்வி-------------------------------------------- (பெயர்) இவ்வலுவலகத்தில் ------------------- (பதவி) ஆக -------------------- முதல் (பணிநியமனம் செய்யப்பட்ட தேதியைக் குறிப்பிடவும்) நிரந்தரமாக / தற்காலிகமாக பணிபுரியும் தகுதிகாண் பருவத்தினர் / ஒப்புதல் அளிக்கப் பட்ட தகுதிகாண் பருவத்தினர் / முழு உறுப்பினர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ---------------------------------------------------------------------- பணிகளில் உள்ள …………………………………… பதவிக்கான நேரடி நியமனத்திற்கு விண்ணப்பத்திருந்தார் என்ற தகவல் தனியரால் இத்துறைக்கு / நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

தனியரால் அளிக்கப்பட்ட தகவல்கள் சரியானவை எனக் கண்டறியப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரது விண்ணப்பத்தினை தேர்வாணையம் பரிசீலனை செய்வதில் இத்துறை / நிறுவனத்திற்கு தடையேதும் இல்லை* எனத் தெரிவிக்கப் படுகிறது.

நியமனஅதிகாரி
(ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரை)

*நியமன அதிகாரி தடையின்மைச் சான்றிதழ் வழங்கும் போது, அரசு அலுவலருக்கு எதிராக துறைசார்ந்த / குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்படக்கூடிய நிலையில் இருந்தாலோ அல்லது

நிலுவையிலிருந்தாலோ, அதனை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு தடையின்மைச் சான்றிதழுடன் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர், அந்த அரசு அலுவலர் தற்போதுள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியில் நியமனம் செய்யப்படும் நாள் வரை ஏதேனும் துறை ரீதியான அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் அவர் மீது தொடரப்பட்டால் அத்தகவலையும் நியமன அதிகாரி தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

5.3. தேர்வர்கள், இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர், அரசுப் பணியில் சேர்ந்திருந்தால், தடையின்மைச் சான்றிதழையோ அல்லது குறைந்தபட்சம் அரசுப் பணியில் சேர்ந்த தகவலைத் தெரிவித்து தடையின்மைச் சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்ற ஓர் உறுதி மொழியினையோ பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.4. தேர்வர்கள் அரசுப் பணியிலிருந்து நீக்கப்பட்டாலோ / பணியறவு செய்யப்பட்டாலோ / பணியிலிருந்து விலகியிருந்தாலோ அத்தகவலை தேர்வர் தனது ஒருமுறைப்பதிவு Dashboard வாயிலாக தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.5. தெரிவுப் பணிகள் முழுமையாக முடிவடைவதற்கு முன்னர், தெரிவுப் பணியின் எந்த நிலையிலும், அவரது பணி நிலையில் ஏதேனும் மாற்றம் நேரிடின், அதாவது பணி நியமனம் செய்யப்பட்டாலோ அல்லது பணியிலிருந்து விலகியிருந்தாலோ, பணி நீக்கம் / பணியறவு செய்யப்பட்டாலோ அது குறித்த தகவலை தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். தவறினால், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.6. பணியில் உள்ள தேர்வர்கள், "தடையின்மைச் சான்றிதழைப்" பதிவேற்றம் / சமர்ப்பிக்க செய்ய தவறினால் விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

# பிற்சேர்க்கை - II

## 1. முன்னாள் இராணுவத்தினர்

### 1.1. "முன்னாள் இராணுவத்தினர்" என்பவர்

1.1.1. இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ அல்லது களவீரரல்லாதவராகவோ) ஏற்புடையவராகக் கொள்ளப்பட்ட பின், தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கும் குறையாமல் பணிபுரிந்து, 01.07.1979 முதல் 30.06.1987 வரையிலான காலத்தில் (இரண்டு நாட்களும் உட்பட) கீழ்க்கண்டவாறு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

அ. சொந்த வேண்டுகோளைத் தவிர்த்து பிற காரணங்களுக்காக, தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது; அல்லது

ஆ. ஐந்து வருடங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்து சொந்த விருப்பத்தில் வெளிவந்தவர் அல்லது

1.1.2. இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ அல்லது களவீரரல்லதவராகவோ) பணிபுரிந்து 01.07.1987 அன்றோ அதற்குப் பிறகோ அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

அ. அவருடைய சொந்த விருப்பத்தில் ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்; அல்லது

ஆ. இராணுவப் பணியின் காரணமாகவோ அல்லது அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைக் காரணங்களினாலோ, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் வெளியேறி மருத்துவ அல்லது இயலாமை ஓய்வூதியம் பெற்று வெளிவந்தவர்; அல்லது

இ. சொந்த விருப்பத்தினாலன்றி, படைக் குறைப்புக் காரணமாக ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்; அல்லது

ஈ. குறிப்பிட்ட காலம் பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமலும் சொந்த விருப்பத்தில் வெளிவந்தவராக அல்லாமலும் பணிக்கொடை பெற்று வெளிவந்தவர்.

1.1.3. 15.11.1986 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ ஓய்வு பெற்ற பிராந்திய இராணுவப் படையைச் சேர்ந்த பிராந்திய இராணுவப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் (embodied) தொடர்ச்சியான பணிக்காக ஓய்வூதியம் பெற்றவர், படைப்பணியின் காரணமாக ஊனமடைந்தவர், வீரவிருது பெற்றவர்; அல்லது

1.1.4. இராணுவ அஞ்சல் பிரிவினைச் சேர்ந்த பின்வரும் வகையினர் தபால்தந்தித் துறையிலிருந்து இராணுவ அஞ்சல் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் தபால்தந்தித்துறைக்கு திரும்ப அனுப்பப்படாமல், இராணுவ அஞ்சல் பணியிலேயே 19.07.1989 அன்றோ அல்லது அதற்குப்பிறகோ ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவர்கள் அல்லது இராணுவப்பணியின் காரணமாகவோ அல்லது அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைக் காரணங்களினாலோ, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் வெளியேறி, மருத்துவ அல்லது வேறு பிறஇயலாமை ஓய்வூதியத்துடன் 19.07.1989 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ மருத்துவக் காரணங்களினால் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்; அல்லது

1.1.5. 14.04.1987 ஆம் நாளுக்கு முன்னர் ஆறு மாதங்களுக்கு மேலாக இராணுவ அஞ்சல் துறையில் மாற்றுப்பணியில் பணியாற்றியவர்; அல்லது

1.1.6. மருத்துவக் காரணங்களினால் விடுவிக்கப்பட்டவர் மற்றும் மருத்துவம் / இயலாமை ஓய்வூதியம் பெற்று வெளிவந்தவர்; அல்லது

1.1.7. இராணுவ விதி 13(3)III(V)-ன்கீழ் அவரது பணி இனிமேலும் தேவைப்படாத காரணத்தினால் ஜுலைத்திங்கள் 1987 அன்றோ அல்லது அதற்குப்பிறகு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஓய்வூதியம் பெறுபவர்; அல்லது

1.1.8. அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படக்கூடிய பிற நபர்கள்.

1.2. இராணுவ வீரர்களின் வாரிசுதாரர்கள் முன்னாள் இராணுவத்தினராக கருதப்பட மாட்டார்கள்.

1.3. இராணுவ விதி 13 (3)III (V)-ன்கீழ் பணி தேவைப்படாத காரணத்தினால் 1987-ஆம் ஆண்டு ஜூலைத்திங்களுக்கு முன் பணியிலிருந்து விலக்கப்பட்டவர், முன்னாள்படைவீரராகக் கருதப்பட மாட்டார்.

1.4. முன்னாள் இராணுவத்தினர் ஏதேனும் ஒரு பதவிப் பணியில் சேர்ந்து விட்ட பின்னர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

1.5. அறிவிக்கை வெளியிட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து ஓராண்டுக்குள், முப்படைப் பணியிலிருந்து, விடுவிப்புப் பெறவிருக்கும் இராணுவவீரர்கள் அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருப்பின் அவர்களும் விண்ணப்பிக்கலாம்.

1.6. முன்னாள் இராணுவத்தினர் ஏற்கனவே ஏதாவது ஒரு பணிக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் வயது வரம்பு சலுகை கோர முடியாது.

1.7. **தேர்வுக் கட்டணச் சலுகை**: இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

1.8. **நியமன ஒதுக்கீடு**: இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில், முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு ஊதிய நிலை 9-12 வரையுள்ள பதவிகளுக்கு மட்டும் பொருந்தும். இந்நியமனத்திற்கான இடஒதுக்கீடு ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த தகுதியான மற்றும் பொருத்தமான முன்னாள் இராணுவத்தினர் ஒதுக்கீடு செய்யப்பட்ட முறை (Turn) க்கு தேர்வாகவில்லை எனில், அதே வகுப்புப் பிரிவைச் சேர்ந்த முன்னாள் இராணுவத்தினர் அல்லாத வேறொரு தேர்வரைக் கொண்டு அம்முறை நிரப்பப்படும்.

1.9. **ஆதார ஆவணங்கள்** :

1.9.1. தேர்வர் இராணுவம் அல்லது கடற்படை அல்லது விமானப் படையில் இருந்து விடுவிக்கப்பட்டவர் என உரிமை கோரும் பொழுது, கோரிக்கைகளுக்கு ஆதாரமாக, முன்னாள் இராணுவத்தினர் நலவாரியத்தால் வழங்கப்பட்ட அவரது பணிவிடுவிப்புச் (Discharge Certificate) சான்றிதழில் இருந்து கீழ்க்கண்ட படிவத்தில் உறுதியொப்பமிட்ட எடுகுறிப்பினையோ (Bonafide Certificate) அல்லது ஓய்வூதிய கொடுப்பாணையையோ (Pension pay order) தேர்வாணையம் கோரும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**முன்னாள் இராணுவத்தினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் படிவம்**

1. தேர்வரின் பெயர்
2. வகித்த நிலை (பதவி), படையின் பெயர் (ஆயுதப் படை / கடற்படை / விமானப்படை)
3. படையில் சேர்ந்த நாள்
4. விடுவிக்கப்பட்ட நாள்
5. விடுவிக்கப்பட்டதற்கான காரணங்கள்
6. முன்னாள் இராணுவத்தினர் என்பது குறிப்பிடப்பட வேண்டும்
7. ஓய்வூதியம் பெற்று வருபவரா
8. ஓய்வூதிய கொடுப்பாணை எண்
9. இராணுவத்தில் பணிபுரிந்த போது நடத்தையும் ஒழுக்கமும்
10. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்
11. படை எண்.
12. தனியர் தமிழ்நாடு அரசின் கீழ் ஏதேனும் ஒரு பதவியில் பணிபுரிந்து

கொண்டிருக்கிறாரா? ஆம் எனில், வகிக்கும் பதவியின் பெயர் மற்றும்

பணியில் சேர்ந்த நாள்.

1.9.2.அறிவிக்கை வெளியிட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து ஓராண்டுக்குள், முப்படைப் பணியிலிருந்து, விடுவிப்புப் பெறவிருக்கும் இராணுவவீரர்கள் கீழ்க்கண்ட படிவத்தின் படி ஓர்

உறுதிமொழிப் படிவத்தையும் மற்றும் அவர்களது படைப்பிரிவின் தலைவரிடமிருந்து (**Commanding Officer**) பெறப்பட்ட சான்றிதழையும் தேர்வாணையம் கோரும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**தேர்வரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உறுதிமொழி**

நான் இந்த விண்ணப்பம் மூலமாக நேரடி நியமனத்தின் / தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டால், இராணுவப்படையிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளேன் / ஓய்வு பெற்றுள்ளேன் என்பது தொடர்பான ஆவணச் சான்றினை பணிநியமன அலுவலருக்கு திருப்தி அளிக்கும் வகையில் தாக்கல் செய்வேன் என்றும், நான் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 63-ன்படி முன்னாள் இராணுவத்தினருக்கான சலுகைகளைத் துய்க்க தகுதி பெற்றுள்ளேன் என்றும் இதன்மூலம் ஏற்றுக்கொள்கிறேன்.

இடம் தேர்வரின் கையொப்பம்

**பணியாற்றும் நபருக்கான சான்றிதழ்**

நான், என்னிடம் உள்ள தகவலின்படி (எண்) ………………………… (பதவி) …………………… (பெயர்) ………………… ……………தேதியில் இராணுவப்பணியில் தமக்கு குறிப்பிடப்பட்ட பணிக்காலத்தை நிறைவு செய்வார் எனச் சான்றளிக்கிறேன்.

இடம்:

தேதி: இராணுவப் படைத்தலைவரின் கையொப்பம்

1.9.3. தேர்வர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சுய உறுதிமொழியையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**Self Declaration**

1) I am aware of the fact that, as per the proviso to Section 3 (j) and 3(y) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 (Tamil Nadu act 14 of 2016) and as per note II under para.4-A of the Commission's Instructions to Applicants, "In all cases, an ex-serviceman once recruited to a post in any class or service or category, cannot claim the concession of being called an ex-serviceman for his further recruitment".

2) I am also aware of the fact that as per para.14 (P)(V) of the Commission's Instructions to Applicants "Any change in the employment status of the candidate, whether appointment to, or resignation / removal / dismissal, from a post, at any stage of the recruitment process, until completion of the entire selection process, must be informed to the Commission. Any failure in this regard shall result in rejection of candidature after due process"

3) Knowing the above facts, I (Ex.No.............................................) Ex.Rank............................. Name .........................................of …………………………District hereby declare that I have never been employed in any post in any class or service or category classified under State service or Subordinate service of Tamil Nadu.

4) Knowing the above facts, I (Ex.No..........................................) Ex.Rank............................ Name .....................................of…………………………District hereby declare that I have been employed in .................................................. State service or Subordinate service of Tamil Nadu as .................................from..................to..................after my retirement from the Armed Forces. I also enclose herewith the No Objection Certificate obtained from my employer.

5) Further, if the above declaration is found to be false, I may be subjected to any departmental / legal/ penal action as deemed fit and my candidature to the said examination will be cancelled by the Commission after due process.

(*Strikeout whichever is not applicable)

Date :

Place :

Signature :
Name :
Register No. :
Ex. No. :
Rank :
Mobile No. :

1.9.4. ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்**

2.1. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் என்பவர் குறிப்பிட்ட இயலாமையின் அளவு அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்படாமல் இருந்தால், குறிப்பிட்ட இயலாமையின்அளவு 40% அளவிற்கு குறைவில்லாத மாற்றுத்திறனாளியாகவோ மற்றும் குறிப்பிட்ட இயலாமை அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்பட்டிருந்தால், அவ்வகை இயலாமை கொண்ட மாற்றுத் திறனாளியாகவோ, மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, பிரிவு 57-ல் உட்பிரிவு (1)ன்படி, அரசால் நியமிக்கப்பட்டுள்ள சான்றளிக்கும் அலுவலரால் சான்றளிக்கப்பட்ட நபர்கள்.

**2.2. தேர்வுக் கட்டணச் சலுகை**: கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

**2.3. நியமன ஒதுக்கீடு**: (நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு இனம் காணப்பட்ட பதிவிகளுக்கு) நேரடி நியமனம் செய்யக்கூடிய மொத்த பணியிடங்களில், ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட - அருந்ததியினர் (முன்னுரிமை அடிப்படையில்) / பழங்குடியினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் பொதுப்பிரிவு, ஆகிய ஒதுக்கீட்டுப் பிரிவுகளில், கீழ்க்காணும் (அ), (ஆ) மற்றும் (இ) பிரிவுகளைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 1 சதவீதமும், (ஈ) மற்றும் (உ) ஆகிய இரண்டு பிரிவுகளைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு சேர்த்து 1 சதவீதமும் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

(அ) பார்வையற்றோர் மற்றும் குறைந்த பார்வைத் திறனுடையவர்;

(ஆ) காது கேளாதோர் மற்றும் கேட்புத்திறனில் மந்தத்தன்மை;

(இ) கை, கால்களில் குறைபாடுடையவர், மூளை வாதம், தொழுநோயிலிருந்து மீண்டவர், வளர்ச்சிக் குறைபாடுடையோர், அமிலவீச்சில் பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைநார் தேய்மானமுற்றோர்;

(ஈ) ஆட்டிசம், அறிவுசார் குறைபாடுடையோர், குறிப்பிடத்தக்க வகையிலான கற்கும் ஆற்றலில் குறைபாடு மற்றும் மனநலிவு நோய்;

(உ) மேற்கூறப்பட்ட (அ) முதல் (ஈ) வரை குறைபாடுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகளைப் பெற்றிருத்தல் மற்றும் காதுகேளாமையுடன் பார்வைத்திறன் குறைவு, உட்பட பலவகையான இயலாமை.

**2.4. ஆதார ஆவணங்கள்**:

2.4.1. மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்கண்ட படிவத்தில், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக்கூடிய தகுதிவாய்ந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**Form V**

**Certificate of Disability**

**(In cases of amputation or complete permanent paralysis of limbs or dwarfism and in case of blindness)**

**(Name and Address of the Medical Authority issuing the Certificate)**

| Recent passport size attested photograph (Showing face only) of the person with disability. |
|---|

Certificate No.______________ Date:____

This is to certify that I have carefully examined Shri./ Smt./ Kum. __________________________ son/ wife/ daughter of Shri __________________ Date of Birth (DD/ MM/ YY) ____________ Age _______ years, male/ female ______ Registration No. ______________ permanent resident of House No. _______________ Ward/ Village/ Street ________ Post Office _______________ District _______________ State ________________, whose photograph is affixed above, and am satisfied that:

(A) he/ she is a case of:

- locomotor disability
- dwarfism
- blindness

(Please tick as applicable)

(B) the diagnosis in his/ her case is __________________

(C) he / she has ________ % (in figure) __________________ percent (in words) permanent locomotor disability/ dwarfism/ blindness in relation to his/ her ______ (part of body) as per guidelines (................ number and date of issue of the guidelines to be specified).

2. The applicant has submitted the following document as proof of residence:-

| Nature of Document | Date of Issue | Details of authority issuing certificate |
|---|---|---|

| Signature/ thumb impression of the person in whose favour certificate of disability is issued. |
|---|

(Signature and Seal of Authorised Signatory of notified Medical Authority)

**Form VI**
**Certificate of Disability**
**(In cases of multiple disabilities)**
**(Name and Address of the Medical Authority issuing the Certificate)**

| Recent passport size attested photograph (Showing face only) of the person with disability. |
|---|

Certificate No.________________ Date:_________

This is to certify that we have carefully examined Shri./ Smt./ Kum. _______________________________________son / wife / daughter of Shri _______________________________________Date of Birth (DD/ MM/ YY) _____________ Age ______ years, male/ female _________. Registration No. ________________ permanent resident of House No. _____________ Ward/ Village/ Street _________ Post Office ________ District _____________ State _____________, whose photograph is affixed above, and am satisfied that:

(A) he/ she is a case of Multiple Disability. His/ her extent of permanent physical impairment/ disability has been evaluated as per guidelines (....................... number and date of issue of the guidelines to be specified) for the disabilities ticked below, and is shown against the relevant disability in the table below:

| Sl. No. | Disability | Affected part of body | Diagnosis | Permanent physical impairment/ mental disability (in %) |
|---|---|---|---|---|
| 1. | Locomotor disability | @ | | |
| 2. | Muscular Dystrophy | | | |
| 3. | Leprosy cured | | | |
| 4. | Dwarfism | | | |
| 5. | Cerebral Palsy | | | |
| 6. | Acid attack Victim | | | |
| 7. | Low vision | # | | |
| 8. | Blindness | # | | |
| 9. | Deaf | £ | | |
| 10. | Hard of Hearing | £ | | |
| 11. | Speech and Language disability | | | |
| 12. | Intellectual Disability | | | |
| 13. | Specific Learning Disability | | | |
| 14. | Autism Spectrum Disorder | | | |
| 15. | Mental illness | | | |
| 16. | Chronic Neurological Conditions | | | |
| 17. | Multiple sclerosis | | | |
| 18. | Parkinson's disease | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | Haemophilia | | | |
| 20. | Thalassemia | | | |
| 21. | Sickle Cell disease | | | |

(B) In the light of the above, his/ her over all permanent physical impairment as per guidelines (.................. number and date of issue of the guidelines to be specified), is as follows : -
In figures :- ----------------- percent
In words :- ---------------------------------------------------------------------- percent

2. This condition is progressive/ non-progressive/ likely to improve/ not likely to improve.

3. Reassessment of disability is:
(i) not necessary, or
(ii) is recommended/ after ...... years ..... months, and therefore this certificate shall be valid till --- --- --- (DD) (MM) (YY)

@ e.g. Left/ right/ both arms/ legs
# e.g. Single eye
£ e.g. Left/ Right/ both ears

4. The applicant has submitted the following document as proof of residence:-

| Nature of document | Date of issue | Details of authority issuing certificate |
|---|---|---|
| | | |

5. Signature and seal of the Medical Authority.

| Name and Seal of Member | Name and Seal of Member | Name and Seal of the Chairperson |
|---|---|---|
| | | |

| |
|---|
| Signature / thumb impression of the person in whose favour certificate of disability is issued. |

**Form VII**
**Certificate of Disability**
**(In cases other than those mentioned in Forms V and VI)**
**(Name and Address of the Medical Authority issuing the Certificate)**

Recent passport size attested photograph (Showing face only) of the person with disability.

Certificate No.______________ Date:_________

This is to certify that I have carefully examined Shri/ Smt/ Kum ___________________ son/ wife / daughter of Shri ______________ Date of Birth (DD/ MM/ YY)__________ Age ________ years, male/ female __________ Registration No. ___________________ permanent resident of House No. ____________ Ward/ Village/ Street ______________________ Post Office __________________ District _________________ State ______________________, whose photograph is affixed above, and am satisfied that he/ she is a case of _______________________________ disability. His/ her extent of percentage physical impairment/ disability has been evaluated as per guidelines (................ number and date of issue of the guidelines to be specified) and is shown against the relevant disability in the table below:-

| Sl. No. | Disability | Affected part of body | Diagnosis | Permanent physical impairment/mental disability (in %) |
|---|---|---|---|---|
| 1. | Locomotor disability | @ | | |
| 2. | Muscular Dystrophy | | | |
| 3. | Leprosy cured | | | |
| 4. | Cerebral Palsy | | | |
| 5. | Acid attack Victim | | | |
| 6. | Low vision | # | | |
| 7. | Deaf | € | | |
| 8. | Hard of Hearing | € | | |
| 9. | Speech and Language disability | | | |
| 10. | Intellectual Disability | | | |
| 11. | Specific Learning Disability | | | |
| 12. | Autism Spectrum Disorder | | | |
| 13. | Mental illness | | | |
| 14. | Chronic Neurological Conditions | | | |
| 15. | Multiple sclerosis | | | |
| 16. | Parkinson's disease | | | |
| 17. | Haemophilia | | | |
| 18. | Thalassemia | | | |
| 19. | Sickle Cell disease | | | |

(Please strike out the disabilities which are not applicable)

2. The above condition is progressive/ non-progressive/ likely to improve/ not likely to improve.
3. Reassessment of disability is:
(i) not necessary, or

(ii) is recommended/ after __ years __ months, and therefore this certificate shall be valid till (DD/ MM/ YY) ____ ____ ____

@ - eg. Left/ Right/ both arms/ legs
# - eg. Single eye/ both eyes
€ - eg. Left/ Right/ both ears

4.The applicant has submitted the following document as proof of residence:-

| Nature of document | Date of issue | Details of authority issuing certificate |
|---|---|---|
| | | |

(Authorised Signatory of notified Medical Authority)
(Name and Seal)

Countersigned
{Countersignature and seal of the
Chief Medical Officer/ Medical Superintendent/
Head of Government Hospital, in case the
Certificate is issued by a medical authority who is
not a Government servant (with seal)}

| Signature/ thumb impression of the person in whose favour certificate of disability is issued. |
|---|

## List of Certifying Authority for the issue of disability certificate

TABLE – I

| S. No. | Specified disability | Medical Authority for the purpose of the issue of disability certificate | Certifying authority to issue certificate of disability |
|---|---|---|---|
| 1 | In case of amputation or complete permanent paralysis of limbs or dwarfism | Hospitals/ Institutions/ Primary Health Centres run by Central and State Government/ Statutory Local bodies | Any doctor/ medical practitioner working in the Hospitals/ Institutions/ Primary Health Centres run by Government/ Statutory Local bodies. |
| 2 | Multiple Disability | District Hospital/ Other hospitals/ Institutions run by Central and State Government /Statutory Local Bodies having relevant medical specialist and testing/assessment facilities | Medical Board consisting of three members of whom two will be specialist dealing with relevant disabilities |
| 3 | Specified Disabilities not mentioned in Serial numbers 1 & 2 above | Hospitals/ Primary Health Centers / Institutions run by Central and State Government/ Statutory Local bodies having relevant medical specialist and testing/ assessment facilities | A specialist dealing with the relevant disability as specified in the Table - II given below |

TABLE – II

| Sl. No. | Category | Specialist |
|---|---|---|
| 1 | Locomotor disability other than amputation or complete permanent paralysis of limbs and dwarfism | Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician. |
| 2 | Muscular Dystrophy | Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician. |
| 3 | Leprosy cured person | Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician. |
| 4 | Cerebral Palsy | Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician. |
| 5 | Acid Attack Victim | Specialist in Physical Medicine and Rehabilitation or Orthopaedician. |
| 6 | Blindness | Specialist in the field of Ophthalmology. |
| 7 | Low Vision | Specialist in the field of Ophthalmology. |
| 8 | Deaf | Specialist in the field of Ear, Nose, Throat (E.N.T). |
| 9 | Hard of Hearing | Specialist in the field of Ear, Nose, Throat (E.N.T). |
| 10 | Speech and Language Disabilities | Specialist in the field of Ear, Nose, Throat (E.N.T) and Neurologist. |
| 11 | Intellectual Disability | Adults with intellectual disability above the age group of 18 years – Psychiatrist. |

| | | |
|---|---|---|
| 12 | Specific Learning Disabilities | Medical board consisting of<br>a) Paediatrician; and<br>b) Psychiatrist and Trained Psychologist. |
| 13 | Autism Spectrum Disorder | Medical Board consisting of<br>a) Psychiatrist and Trained psychologist; and<br>b) Paediatrician or General Physician. |
| 14 | Mental Illness | Psychiatrist. |
| 15 | Chronic Neurological Conditions such as Multiple Sclerosis and Parkinson's Disease | Medical Board consisting of<br>a) Psychiatrist and Trained Psychologist; and<br>b) Neurologist; and<br>c) Orthopaedician or Specialist in Physical Medicine and Rehabilitation. |

2.4.2. அரசு அலுவலரல்லாத மருத்துவ அலுவலரால் மாற்றுத்திறனாளி சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பின், அச்சான்றிதழ் இணைஇயக்குநர், மருத்துவப்பணிகள் அவர்களால் மேலொப்பம் இடப்பட்டிருந்தால் மட்டுமே கருத்தில் கொள்ளப்படும்.

2.4.3. இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாட்டின் வகை ((type of disability) மாற்றுத்திறனாளி சான்றிதழில் குறிப்பிட்டுள்ளபடி சரியாக இருத்தல் வேண்டும். இதில் ஏதேனும் வேறுபாடு இருப்பின், உரிமைகோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

2.4.4. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளின் உரிமைகோரலுக்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஆதாரமாக இல்லையெனில், உரிமைகோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**3. ஆதரவற்ற விதவை**:

3.1. "ஆதரவற்ற விதவை" என்பவர் விதவை ஒருவர் அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/- திற்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) மிகாமல் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். விவாகரத்து பெற்றவர், கணவரால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். தேர்வர் தேர்வு அறிவிக்கை நாளன்று ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.

**3.2. தேர்வுக் கட்டணச் சலுகை**: கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

**3.3. நியமன ஒதுக்கீடு**: பணி நியமன ஒதுக்கீடு விதியின்படி ஆதரவற்ற விதவைகளுக்கான இட ஒதுக்கீடு இந்நியமனத் தேர்விற்கு பொருந்தும். பெண் தேர்வர்களுக்கு நேரடி நியமனத்திற்கான ஒதுக்கப்படும் 30 விழுக்காட்டில் பத்து விழுக்காட்டினை ஆதரவற்ற விதவைகளுக்கென ஒதுக்கப்பட வேண்டும். இவ்வறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஊதிய நிலை – 10 க்கு மிகாமல் உள்ள பதவிகளுக்கு மட்டும் ஆதரவற்ற விதவைகள் தேர்வு செய்யப்படுவர். தகுதிவாய்ந்த பொருத்தமான ஆதரவற்ற விதவை இல்லாத நேர்வில், ஆதரவற்ற விதவைகளுக்காக ஓதுக்கப்பட்ட சுழற்சி முறையான குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த (ஆதரவற்ற விதவை அல்லாத) பெண்களுக்கு / திருநங்கை பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

**3.4. ஆதார ஆவணங்கள்**:

3.4.1. ஆதரவற்ற விதவைகள் வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து கீழ்க்கண்ட படிவத்தில் பெறப்பட்ட சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும். இச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய தவறினாலோ அல்லது விதவை அல்லது விவாகரத்து பெற்றதற்கான சான்றிதழை பதிவேற்றம் செய்தாலோ அவர்களது உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

## ஆதரவற்ற விதவை சான்றிதழ் படிவம்

(1) தனியரின் பெயர்

(2) முழுமையான அஞ்சல் முகவரி

(3) பணி குறித்த விவரங்கள், ஏதேனுமிருப்பின்

(4) அவரது குழந்தைகளின் விவரம், ஏதேனுமிருப்பின்

(5) அவரது காலஞ்சென்ற கணவரின் பெயர் மற்றும் அவர் கடைசியாக பார்த்த தொழில்

(6) அவரது கணவரின் மறைவு தேதி

(7) அவரது கணவர் மறைந்த பின்னர் குடும்ப ஓய்வூதியம், காப்பீடு மற்றும் பிறவற்றின் வழியாக பெற்ற பணப்பயன்கள்

(8) அவரது கணவர் விட்டுச்சென்ற அசையும் மற்றும் அசையா சொத்து ஏதேனுமிருப்பின் அதன் விவரங்கள்

(9) தற்போதைய மாத வருமானம்

(அ) சம்பளம் / கூலி

(ஆ) குடும்ப ஓய்வூதியத்திலிருந்து

(இ) தனியார் சொத்துகளிலிருந்து

(ஈ) பெறப்பட்ட வாடகை

(உ) தனியார் தொழிலிலிருந்து

(ஊ) பிற ஆதாரங்கள் ஏதேனுமிருப்பின்

(எ) மொத்தம்

(10) தனியாக வாழ்ந்து கொண்டு இருக்கிறாரா அல்லது கணவரின் பெற்றோர்களுடன் அல்லது உறவுமுறைகளுடன் / பெற்றோர்கள் / சகோதரர்கள் உடன் வாழ்ந்து கொண்டு இருக்கிறாரா?

(11) தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 20(8) மற்றும் பிரிவு 26-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதரவற்ற விதவை என்கிற விளக்கத்தினை நிறைவு செய்கின்றாரா?

தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20-ன், உட்பிரிவு (8)ன்படி மற்றும் 26--ஆம் பிரிவின் படி ஆதரவற்ற விதவை என்ற பொருள் வரையறையின்படி அவருடைய கோருதலின் மெய்த்தன்மை குறித்து தனியரால் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் என்னால் சரிபார்க்கப்பட்டு, திருப்தி அடைந்துள்ளேன் என்று சான்றளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சான்றிதழ் எண்: | கையெழுத்து : |
| இடம்: | பெயர் : |
| தேதி: | பதவியின் பெயர் : |

வருவாய் கோட்டாட்சியர் / உதவி ஆட்சியர் /
சார் ஆட்சியர்

விளக்கம்:- மேற்கண்ட சான்றிதழ் வருவாய் கோட்டாட்சியர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரால் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

3.4.2. 'விதவை சான்றிதழ்' ஆதரவற்ற விதவை சான்றிதழிலிருந்து வேறுபட்டதாகும். விதவை சான்றிதழை பதிவேற்றம் செய்யவும் தேர்வர்கள் ஆதரவற்ற விதவையாக கருதப்படமாட்டார்கள்.

3.4.3. தேர்வரின் கணவரின் மறைவு தேர்வு அறிவிக்கை நாளன்றோ அதற்கு முன்போ இருந்தால் மட்டுமே ஆதரவற்ற விதவைக்கான உரிமைக்கோரல் அனுமதிக்கப்படும்.

3.4.4. ஆதரவற்ற விதவைச் சான்றிதழில் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருப்பின், அத்திருத்தம் சான்றிதழ் வழங்கும் அலுவலரால் சான்றொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் அல்லது அதற்கு பதிலாக புதிய சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**4. தமிழ் வழியில் கல்வி பயின்றோர்:**

4.1. தமிழ் வழியில் படித்த நபர் என்றால், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்பு விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் படித்தவராவார்.

4.1.1. பட்டப்படிப்பு கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி இறுதி வகுப்பு (SSLC), மேல்நிலை வகுப்பு (HSC) மற்றும் பட்டப்படிப்பு (Degree) ஆகியவற்றை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்.

4.1.2. ஒன்றாம் வகுப்பில் பள்ளியில் சேராமல், வயதின் அடிப்படையில் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 2 முதல் 8 வரையிலான வகுப்புகளில் நேரடியாக பள்ளிகளில் சேர்ந்து, தமிழ்மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று தேர்ச்சி பெற்றவர்களும், பிற மாநிலங்களில் தமிழ்மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று, பின்னர் தமிழ் நாட்டில் தங்களது கல்வியினை சேரும் வகுப்பிலிருந்து தொடர்ந்து தமிழ் வழியில் பயின்றவர்களும் தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான முன்னுரிமை வழங்கப்பட தகுதியுடையவர்கள் ஆவர்.

4.1.3. பள்ளிக்குச் சென்று பள்ளியில் பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு போன்ற பொதுத் தேர்வுகள் எழுதி, அதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெறாமல், தனித் தேர்வர்களாக தேர்வெழுதி அப்பாடங்களில் தேர்ச்சி பெற்று, தொடர்ந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மேற்படி முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள் ஆவர்.

4.1.4. பள்ளிக்கு செல்லாமல் நேரடியாக தனித் தேர்வர்களாக தமிழ் வழியில் தேர்வெழுதி தேர்ச்சி பெற்றவர்கள் மேற்படி முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள் அல்லர்.

4.1.5. முதுநிலை பட்டப்படிப்பு கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்ட நேர்வுகளில், ஒருவர் பள்ளி முதல் வகுப்பு முதல் முதுநிலை பட்டப்படிப்பு வரை தமிழ்வழியில் படித்திருக்க வேண்டும்.

**4.2. ஆதார ஆவணங்கள்:**

4.2.1. தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான உரிமை கோரும் தேர்வர், அதற்கான சான்றாவணமாக, ஒன்றாம் வகுப்பு முதல் நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரை அனைத்து கல்வித்தகுதிகளின் படிப்புக்காலம் முழுவதும் தமிழ்வழியில் மட்டுமே பயின்றதற்கான பத்தாம்வகுப்பு / பன்னிரண்டாம்வகுப்பு / மாற்றுச்சான்றிதழ் / தற்காலிகச்சான்றிதழ் / பட்டச்சான்றிதழ் / பட்ட மேற்படிப்புச் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல் / குழுமம் அல்லது பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.2. தேர்வர், ஒன்றாம் வகுப்பு முதல் நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரை அனைத்து கல்வித் தகுதிகளையும் தமிழ்வழியில் பயின்றுள்ளார் என்பதற்கு ஆதாரமான சான்றுகளை கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.3. தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றாவணம் எதுவும் இல்லையெனில், முதல்வர் / தலைமையாசிரியர் / மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர் / இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் / சான்று வழங்கும் அலுவலர், தொழிற்பயிற்சி நிலையம் / கல்லூரி / பல்கலைக்கழக முதல்வர் / பதிவாளரிடம் கீழே குறிப்பிட்டுள்ள படிவத்தில், ஒன்றாம் வகுப்பு முதல் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரையிலான ஒவ்வொரு கல்வித்தகுதிக்கும் சான்றிதழைப் பெற்று பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4.2.4. ஒன்றாம் வகுப்பு முதல் நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி வரையிலான அனைத்து கல்வித் தகுதிகளையும் தமிழ்வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என்பதற்கான ஆதாரச் சான்றினை பதிவேற்றம் செய்ய தவறினால் உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

4.2.5.. ஏதேனும் ஒரு பாடத்தை பகுதி நேரமாகப் படித்ததற்காக, தேர்வர் தமிழ்வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என சான்றாவணம் ஏதேனும் பதிவேற்றம் செய்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ் ***

திரு./திருமதி/செல்வி……………………………………………………………… (பெயர்) ……………………………… வகுப்பு முதல் ……………………… வகுப்பு வரை, **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு** ……………………………… ஆண்டு முதல் ……………………………ஆண்டு வரை இப்பள்ளியில் / தனித் தேர்வர் முறையில் படித்தார் எனவும், மேற்குறிப்பிட்ட வகுப்புகளுக்கான படிப்பினை திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு/திருமதி/செல்வி………………………………………………… (பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது / வழங்கப்படவில்லை.

2020-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டம், பிரிவு 2 (d)ன் கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப்பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்
முதல்வர் / தலைமை ஆசிரியர் /
மாவட்டக் கல்வி அலுவலர் /
முதன்மைக் கல்வி அலுவலர் / இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் / தகுதி வாய்ந்த அலுவலர்

இடம்: கல்வி நிறுவனத்தின் அலுவலக முத்திரை (**அலைபேசி எண்**……………………………)
நாள்:

* தேர்வர் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை / பனிரெண்டாம் வகுப்பு வரை வெவ்வேறு பள்ளிகளில் பயின்றுள்ளார் எனில், தான் பயின்ற ஒவ்வொரு பள்ளியிலும் தனித்தனியாக சான்றிதழைப் பெற வேண்டும்.

## தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ் *

திரு./திருமதி/செல்வி………………………………………………………………(பெயர்)………………………… படிப்பினை (பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு** ……………… ஆண்டு முதல் ………………………ஆண்டு வரை இந்நிறுவனத்தில் படித்தார் எனவும் அப்படிப்பினை …………………………(பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு/திருமதி/செல்வி……………………………………………………(பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது / வழங்கப்படவில்லை.

2020-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டம், பிரிவு 2 (d)ன் கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப்பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்
முதல்வர் / பதிவாளர்
தொழிற் பயிற்சி நிலையம் / கல்லூரி /
பல்கலைக்கழகம்

இடம்: கல்வி நிறுவனத்தின் **(அலைபேசி எண்……………………)**
நாள்: அலுவலக முத்திரை

*தேர்வர் வெவ்வேறான படிப்புகளை வெவ்வேறு நிறுவனங்களில் நிறைவு செய்துள்ளார் எனில், தான் படிப்பினை நிறைவு செய்த ஒவ்வொரு நிறுவனத்திலும் தனித்தனியாக இச்சான்றிதழைப் பெற வேண்டும்.

### 5. ஆதிதிராவிடர், ஆதிதிராவிட-அருந்ததியர் மற்றும் பழங்குடியினர்

5.1. ஆதிதிராவிடர் என்பவர் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பிற்சேர்க்கையில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பட்டியல்-II பகுதி அ-விலிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் பட்டியலில் இருப்பவராவர்.

5.2. "அருந்ததியர்" என்பது அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மாதிகா, பகடை, தோட்டி, ஆதி ஆந்திரா ஆகிய இனத்தைக் குறிக்கும்.

5.3. பழங்குடியினர் என்பவர் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பிற்சேர்க்கையில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், **2016**, பட்டியல்-II பகுதி ஆ-விலிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள பழங்குடியினர் பட்டியலில் இருப்பவராவர்.

குறிப்பு:

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்து, "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பிற்சேர்க்கையில் காணும் பட்டியல்களில் குறிப்பிட்டுள்ள சாதிகளில் ஒன்றைச்சார்ந்தவராக இருந்தால் மட்டுமே அத்தேர்வர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் என்று கருதப்படுவார். பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராக கருதப்பட மாட்டார்கள்.

**5.4. தேர்வுக் கட்டணச்சலுகை:** கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

**5.5. நியமன ஒதுக்கீடு:** ஆதிதிராவிடர், ஆதிதிராவிட – அருந்ததியர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் இடஒதுக்கீடு விதிகளின்படி, தெரிவு செய்யப்படுவர்.

| | |
|---|---|
| ஆதிதிராவிடர் | 15% |
| ஆதிதிராவிட – அருந்ததியர் | 3% |
| பழங்குடியினர் | 1% |

**11.6. ஆதார ஆவணங்கள்**:

5.6.1. ஆதிதிராவிட–அருந்ததியர் மற்றும் ஆதிதிராவிடர் வகுப்பினைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

5.6.2. பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியர் அல்லது சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அல்லது மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

5.6.3. பழங்குடியினத்தைச் சேர்ந்த தேர்வர், மாநில கூர்நோக்கு குழுவிலிருந்து பெறப்பட்ட அறிக்கை கிடைக்கப் பெற்றிருப்பின், அதனைக் கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில், அவர்தம் உரிமைகோரல், மாநில கூர்நோக்கு குழுவின் சரிபார்ப்பிற்கு உட்படுத்தப்படும்.

5.6.4. கணவர் பெயரைக் குறிப்பிட்டு பெறப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்தால் தேர்வரின் உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

5.6.5. அரசாணை எண். 781, வருவாய்த்துறை, நாள் 02.05.1988-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்கள், உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச்சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5.6.6. தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்டு பதிவேற்றப்பட்ட சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ள சாதி, "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பிற்சேர்க்கையில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-லிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர், ஆதிதிராவிட - அருந்ததியர் அல்லது பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றால், அத்தேர்வர் ஆதிதிராவிடர், ஆதிதிராவிட – அருந்ததியர் அல்லது பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்தவராக உரிமை கோருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். இப்பட்டியலில் இடம்பெறாத சாதியைச் சேர்ந்தவர், ஏனையோர் (others category) என்ற பிரிவின்கீழ் மட்டுமே உரிமை கோர அனுமதிக்கப்படுவர்.

5.6.7. ஆதிதிராவிடர் வகுப்பினை சார்ந்த தேர்வர், கிருத்துவ / இசுலாம் மதம் நீங்கலாக ஏனைய மதங்களுக்கு மாறினால், "ஏனையோர்" ("others" category) எனக் கருதப்படுவர். எனினும், சீக்கியம் மற்றும் பௌத்த மதங்களுக்கு மாறிய ஆதிதிராவிடர் (Scheduled Caste) ஆதிதிராவிடராகவே கருதப்படுவர்.

5.6.8. ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**6. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்** :

6.1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்பவர் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பிற்சேர்க்கையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 - பட்டியல்-I பகுதி அ, ஆ, இ மற்றும் ஈ-யிலிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பட்டியலில் இருப்பவராவர்.

6.2. விளக்கம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 - பட்டியல்-I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள சமுதாயத்தினரில் ஒரு பிரிவைச் சார்ந்த தமிழ்நாடு மாநிலத்தைச் சார்ந்த நபர்கள் மட்டுமே அத்தகைய சமுதாயத்தை சேர்ந்தவராகப் பாவிக்கப்படுவார்கள்.

**6.3. தேர்வுக்கட்டணச் சலுகை**: மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

**6.4. நியமன ஒதுக்கீடு**: இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் ஆகியோர் இடஒதுக்கீடு விதிகளின்படி, தெரிவு செய்யப்படுவர்.

| | |
|---|---|
| இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | 20.0% |

**6.5. ஆதார ஆவணங்கள்:**

6.5.1. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ, அந்த வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச்சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணைவட்டாட்சியர் அல்லது துணைவட்டாட்சியர் (பள்ளி சான்றிதழ்கள்) அல்லது செயற் துணை வட்டாட்சியர் (சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை) அல்லது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அல்லது மண்டலத் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

6.5.2. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்களவர், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) சாதியைச் சேர்ந்த தேர்வர், அவரது தகப்பனார் அல்லது தாயின் பெயரைக் குறிப்பிட்டு, தேர்வரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த தலைமையிடத்துத் துணைவட்டாட்சியர் அல்லது மண்டலத் துணை வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

6.5.3. கணவர் பெயரைக் குறிப்பிட்டு பெறப்பட்ட சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்தால் தேர்வரின் உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

6.5.4. அரசாணை எண். 781, வருவாய்த்துறை, நாள் 02.05.1988-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்கள், உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச்சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

6.5.5. தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்டு பதிவேற்றப்பட்ட சான்றிதழில் பதிவு செய்யப்பட்டுள்ள சாதி, "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளின்" பிற்சேர்க்கையில் (தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-லிருந்து எடுக்கப்பட்டது) கொடுக்கப்பட்டுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றால், அத்தேர்வர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சேர்ந்தவராக உரிமை கோருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். இப்பட்டியலில் இடம்பெறாத சாதியைச் சேர்ந்தவர், ஏனையோர் (others category) என்ற பிரிவின்கீழ் மட்டுமே உரிமை கோர அனுமதிக்கப்படுவர்.

6.5.6. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தேர்வர்கள், கிருத்துவ / இசுலாமிய மதம் நீங்கலாக ஏனைய மதங்களுக்கு மாறினால், "ஏனையோர்" ("others" category) எனக் கருதப்படுவர்.

6.5.7. ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**7. பெண்கள்:**

7.1. **நியமன ஒதுக்கீடு**: மொத்தம் கணக்கிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களில், இடஒதுக்கீடு விதி பொருந்தும் பதவிகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், குறைந்த பட்சம் 30% பெண் தேர்வர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. இடஒதுக்கீடு விதி பொருந்தும் பதவிகளைப் பொருத்தவரை, ஒவ்வொரு பிரிவு மற்றும் பொதுப்பிரிவில், இடஒதுக்கீட்டின் படி, 30% காலிப்பணியிடங்கள் பெண் தேர்வர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படுகிறது. பெண்கள் / திருநங்கைகள் (பெண்கள்) தேர்வர் மேற்குறிப்பிடப்பட்ட 30% இட ஒதுக்கீட்டில் போட்டியிட தகுதியானவர். மேலும், அவர்கள் மீதமுள்ள 70% காலிப்பணியிடங்களுக்கான இடஒதுக்கீட்டில்,

ஆண்கள் / திருநங்கைகள் / திருநங்கைகள் (ஆண்கள்) தேர்வருடன் சேர்ந்து போட்டியிடத் தகுதியானவர்கள்.

**7.2. ஆதார ஆவணங்கள்**: மாற்றுச்சான்றிதழ் / சாதிச் சான்றிதழின் அடிப்படையில் பாலினம் சரிபார்க்கப்படும். ஆதார ஆவணங்களைப் பதிவேற்றம் செய்ய தவறினால், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**8. திருநங்கைகள்**:

**8.1. ஆதார ஆவணங்கள்**:

8.1.1. திருநங்கைகள் / திருநங்கைகள் (ஆண்) / திருநங்கைகள் (பெண்) தொடர்பான தகவல்கள், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் மூலம் சரிபார்க்கப்படும்.

8.1.2. தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம் அல்லாத மற்ற அமைப்புகளால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினை பதிவேற்றம் செய்தால் உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8.1.3. இணையவழி விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள திருநங்கைகள் அல்லது திருநங்கைகள் (ஆண்) அல்லது திருநங்கைகள் (பெண்) தொடர்பான தகவல்கள் திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும். இதில் ஏதேனும் முரண்பாடு இருப்பின், விண்ணப்பம் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8.1.4. பாலினம் தொடர்பாக தேர்வரின் உரிமைகோரலுக்கு தேவையான ஆவணங்கள் ஆதாரமாக இல்லாதிருப்பின், உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**8.2. சாதி**:

8.2.1. எந்தவொரு சாதிச்சான்றிதழும் இல்லாத திருநங்கை தேர்வர், தங்களது இணையவழி விண்ணப்பத்தில் ஏனையோர் பிரிவினையோ அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.

8.2.2. சாதிச்சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட-(அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை தேர்வர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

8.2.3. ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட - அருந்ததியர் / பழங்குடியினர் வகுப்பைத் தவிர மற்ற வகுப்பினைச் சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச் சான்றிதழ் பெற்றுள்ள திருநங்கை தேர்வர், அவருடைய வகுப்பு (class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில், அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, ஒருமுறைப் பதிவின் போதே தேர்வு செய்ய வேண்டும். அதன் பிறகு, வகுப்பை எப்பொழுதும் மாற்ற இயலாது.

8.2.4. தங்களது இணையவழி விண்ணப்பத்தில் ஏனையோர் பிரிவினையோ அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ தேர்வு செய்த சாதிச்சான்றிதழ் இல்லாத திருநங்கைகள் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்) / சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த திருநங்கைகள் சாதிச்சான்றிதழ் வைத்திருந்தாலும், தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதும்படி இணையவழி விண்ணபத்தில் விருப்பத்தேர்வு செய்திருக்கும் பட்சத்தில், அவர்கள் தங்களது உரிமைக்கோரலுக்கு ஆதாரமாக சாதிச்சான்றிதழை பதிவேற்றம் செய்ய தேவையில்லை.

8.2.5. சாதிச்சான்றிதழ் வைத்துள்ள திருநங்கை தேர்வர் அவர்கள் பெற்றுள்ள சாதிச்சான்றிதழின் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குமாறு இணையவழி விண்ணபத்தில் விருப்பத்தேர்வு செய்திருந்தால், அவர்கள் தங்களது சாதிச்சான்றிதழை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறும்பட்சத்தில் அவர்களது உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

8.2.6. சமூகப்பிரிவின் அடிப்படையிலான இடஒதுக்கீட்டைத் தேர்வு செய்வது தொடர்பாக, திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளும் அவர்களால் பதிவேற்றம் செய்யப்படும், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையினைச் சார்ந்தே அமையும். தேர்வர், திருநங்கைக்கான அடையாள அட்டையினை பதிவேற்றம் செய்ய தவறினாலோ, மற்ற

வாரியங்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினைப் பதிவேற்றம் செய்தாலோ, அவர்களது உரிமை கோரல் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும்.

**9. வனச் சார்நிலைப் பணியில் உள்ள வனவர் பதவிக்கு, சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு**

**9.1. விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு பெறுவதற்கான தகுதிகள்:**

9.1.1. விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் தேர்வர்கள், நேரடி தெரிவிற்கான அறிவிக்கை தேதிக்கு முந்தைய ஐந்து ஆண்டுகளுக்குள் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஒரு சிறந்த விளையாட்டு வீரராக இருக்க வேண்டும்.

**9.1.2. அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகளின் பட்டியல் (ஆண் மற்றும் பெண்)**

**9.1.2.1. தடகள நிகழ்வுகள்:**

i. தடகளம் (ஓட்டம், மராத்தான், தடை தாண்டுதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், மும்முறை தாண்டுதல், வட்டு எறிதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், சுத்தியல் எறிதல் உட்பட)
ii. பளு தூக்குதல்
iii. நீச்சல் (நீர் விளையாட்டு) (எதேச்சை பாணி நீச்சல் 100 / 50 மீட்டர், மல்லாந்து பாணி நீச்சல் 100 / 50 மீட்டர், நெஞ்சக நீச்சல் 100 / 50 மீட்டர், பட்டாம்பூச்சி / பலபாணி நீச்சல் 50 /200 மீட்டர்)

**9.1.2.2 விளையாட்டு நிகழ்வுகள்:**

| | |
|---|---|
| 1. இறகுப்பந்து | 17. துப்பாக்கி சுடுதல் |
| 2. புல்தரை பந்தாட்டம் | 18. குத்துச் சண்டை |
| 3. மேசைப் பந்து | 19. சைக்கிள் ஓட்டுதல் |
| 4. சுண்டாட்டம் (சதுப்பலகை) | 20. வாள் வீச்சு |
| 5. மட்டைப்பந்து | 21. சீருடற் பயிற்சி |
| 6. குழிப் பந்தாட்டம் | 22. மற்போர் (ஜூடோ) |
| 7. கோல் மேசை | 23. வெறுங்கை வீரர் விளையாட்டு (கராத்தே) |
| 8. அறைப்பந்தாட்டம் | 24. படகு வலித்தல் |
| 9. கோல் மேசை (பில்லியர்ட்ஸ்) | 25. கைகால் தாக்கும் கலை (டேக்வான்-டோ) |
| 10. பிரிட்ஜ் | 26. மூவகைப் போட்டி (டிரையத்லான்) |
| 11. சதுரங்கம் | 27. பளு தூக்குதல் |
| 12. கால்பந்து | 28. மல்யுத்தம் |
| 13. கைப்பந்து | 29. கைப்பந்து (Hand ball) |
| 14. கூடைப்பந்து | 30. படகோட்டம் |
| 15. வளைக் கோல் பந்து | 31. சிலம்பம் |
| 16. கபடி | |

**9.1.3. போட்டிகள்**

சிறந்த விளையாட்டு வீரராகக் கருதப்படுவதற்கு தேவைப்படும் தேர்வரின் பிரதிநிதித்துவம்.

(அ) இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்பின் நிதியுதவி செய்யப்படும் சர்வதேச அளவிலான போட்டி

(அல்லது)

(ஆ) இந்திய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான போட்டி

(அல்லது)

(இ) அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கத்தால் நடத்தப்பட்ட மாநில அளவிலான போட்டிகளில் முதல் 3 இடத்திற்குள் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

(அல்லது)

(ஈ) அகில இந்திய பல்கலைக்கழக விளையாட்டு வாரியத்தால் நடத்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் முதல் 3 இடத்திற்குள் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

(அல்லது)

(உ) இந்திய பள்ளி விளையாட்டு கூட்டமைப்பால் நடத்தப்பட்ட தேசிய அளவில் பள்ளிகளுக்கான விளையாட்டுகளில் மாநில பள்ளி அணிகள் முதல் 3 இடத்திற்குள் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

9.1.3.1. அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கம் என்பது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அல்லது தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தைக் குறிக்கும். வேறு எந்த சங்கங்களிடமிருந்தும் பெறப்பட்ட சான்றிதழ்கள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டைப் பெற தகுதியற்றவை. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்களின் பட்டியல் இந்த அறிவிப்பின் பிற்சேர்க்கை VI இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**9.2. நியமனங்களுக்கான இடஒதுக்கீடு:**

9.2.1. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு இட ஒதுக்கீடு, பொதுப் பிரிவு, பி.வ (இ.அ), பி.வ (இ), மி.பி.வ/சீ.ம, ஆ.தி, ஆ.தி(அ) மற்றும் ப.ப என ஒவ்வொரு பிரிவிற்கும் இனவாரி இட ஒதுக்கீட்டிற்குள் இருக்கும்.

9.2.2. நியமனங்களுக்கு எந்தவொரு பிரிவிலும் தகுதியான மற்றும் பொருத்தமான சிறந்த விளையாட்டு வீரர் கிடைக்கவில்லை என்றால், அந்தப் பிரிவில் சிறந்த விளையாட்டு வீரருக்கு ஒதுக்கப்பட்ட படிவம் காலாவதியாகிவிடும், மேலும் அது வகுப்புவாரிப் பிரிவில் உள்ள பிற தகுதியுள்ள தேர்வர்களால் நிரப்பப்பட வேண்டும்.

**9.3. ஆதார ஆவணங்கள்:**

9.3.1. சிறந்த விளையாட்டு வீரர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் சான்றிதழ்(களை) பதிவேற்ற வேண்டும்.

9.3.2. விளையாட்டு சான்றிதழ்களில், பங்கேற்பாளர்களின் பெயர் விளையாட்டு / விளையாட்டின் பெயர், நிகழ்வின் தேதி, சான்றிதழ் வழங்கும் அலுவலரின் பெயர் மற்றும் முத்திரை ஆகியவை கட்டாயமாகும்.

9.3.3. ஆதார ஆவணங்களை பதிவேற்றம் செய்ய தவறினால் உரிமை கோரல் உரிய நடமுறைக்குப்பின் நிராகரிக்கப்படும்.

## FORM I

(for representing India in an **International Competition** in one of the recognized Games / Sports mentioned in Annexure II of the Notification)

**NATIONAL FEDERATION / NATIONAL ASSOCIATION OF __________________**
**Certificate to meritorious sportsmen for employment to Group B and C Service under the Forest Department of Tamil Nadu**

Certified that Thiru / Tmt. / Selvi ___________________________________ Son / Wife / Daughter of Thiru ______________________ and resident of ___________________________________________ (complete address) ____________________________________ represented India in the _______________________ game / event of ___________ in Competition / Tournament held at ______________ from __________ to ____________.

Certified that ________________________ is recognized International competition in _________ category.

The position obtained by the individual / team in the above said International Competition / Tournament was ______________________. The Certificate is being given to Thiru / Tmt. / Selvi _______________ ________________ Son / Wife / Daughter of Thiru ______________________________ whose date of birth is ___________ on the basis of record available in the office of National Federation / National Association of ________________.

Place:
Date:

Signature:
Name:
Designation:
Name of the Federation /
National Association:
Address:
Seal:

Note: This Certificate will be valid only when signed personally by the Secretary, National Federation / National Association duly countersigned by the Member Secretary, Sports Development Authority of Tamil Nadu.

**FORM II**

(for representing State in India in a **National Level Competition** in one of the recognized Games / Sports mentioned in Annexure II of the Notification)

**STATE ASSOCIATION OF ___________________ IN THE GAME ____________________________ OF __________________________**

**Certificate to meritorious sportsmen for employment to Group B and C Service under the Forest Department of Tamil Nadu**

Certified that Thiru / Tmt. / Selvi ____________________________________ Son / Wife / Daughter of Thiru _______________________ and resident of _____________________________________________ (complete address) _____________________________________ represented the State of Tamil Nadu in the ________________________ game / event of ___________ in Competition / Tournament held at ______________ from __________ to ___________.

Certified that _________________________ is recognized **National Level Competition** in the ______________ category.

The position obtained by the individual / team in the above said National Competition / Tournament was ______________________. The Certificate is being given to Thiru / Tmt. / Selvi _______________ ________________ Son / Wife / Daughter of Thiru _______________________________ whose date of birth is ___________ on the basis of record available in the office of National Federation / National Association of ________________.

Place:
Date:

Signature:
Name:
Designation:
Name of the Federation / National Association:
Address:
Seal:

Note: This Certificate will be valid only when signed personally by the Secretary of the National Federation / Secretary of the State Association duly countersigned by the Member Secretary, Sports Development Authority of Tamil Nadu.

**FORM III**

(for representing State **Level Competition** in one of the recognized Games / Sports mentioned in Annexure II of the Notification)

**STATE FEDERATION / STATE ASSOCIATION OF __________________**

**Certificate to meritorious sportsmen for employment to Group B and C Service under the Forest Department of Tamil Nadu**

Certified that Thiru / Tmt. / Selvi ___________________________________ Son / Wife / Daughter of Thiru ______________________ and resident of ___________________________________________ (complete address) ____________________________________ won the ________________________ medal in _______________ State Games of Tamil Nadu in the _______________________ game / event of __________________ in Competition / Tournament held at ______________ from __________ to ___________.

Certified that ________________________ is recognized **State Level Competition** in the ______________ category.

The position obtained by Thiru / Tmt. / Selvi ________________ who was part of ________________ (name of team) in the __________________ State / Inter-university / School Games ____________________________________ Competition / Tournament. The _________________ (individual / team) qualified for the first three positions. In case of ________________ field and track event ____________________ the performance of __________________________ (individual) in the ________________________ category was _____________________ seconds / meters / kgs (units).

The position obtained by the individual / team in the above said State Competition / Tournament was ______________________. The Certificate is being given to Thiru / Tmt. / Selvi _______________ ________________ Son / Wife / Daughter of Thiru ______________________________ whose date of birth is ___________ on the basis of record available in the office of State Federation / State Association of ________________.

Place:
Date:

Signature:
Name:
Designation:
Name of the Federation / State Association:
Address:
Seal:

Note: This Certificate will be valid only when signed personally by the Secretary of the State Association duly countersigned by the Member Secretary, Sports Development Authority of Tamil Nadu.

## FORM IV

**(for representing in the Inter-University Competition in one of the recognized Inter-University Games / Sports mentioned Annexure II of the Notification)**

**Certificate to meritorious sportsmen for employment to Group B and C Service under the Forest Department of Tamil Nadu**

Certified that Thiru / Tmt. / Selvi ____________________________________ Son / Wife / Daughter of Thiru ______________________ and resident of __________________________________ student of ____________________________ represented the University of __________________________ in the game / event of __________________ in Inter-University Competition / Tournament held at ______________ from __________ to ___________ Certified that ________________________ is recognized **Inter University Competition** in the ______________ category.

The position obtained by Thiru / Tmt. / Selvi ________________ who was part of ________________ (name of the team) in the __________________ State / Inter-university / School Games ____________________________________ Competition / Tournament. The _________________ (individual / team) qualified for the first three positions. In case of ________________ field and track event ____________________ the performance of __________________________ (individual) in the ________________________ category was _____________________ seconds / meters / kgs (units).

The position obtained by the individual / team in the above said Inter University Competition / Tournament was _________________. The Certificate is being given to Thiru / Tmt. / Selvi __________ _____________ Son / Wife / Daughter of Thiru ______________________________ whose date of birth is ___________ on the basis of record available in the office of Dean of Sports or Officer in overall charge of sports in the University of ________________.

Place:
Date:

Signature:
Name:
Designation:
Name of the University:
Address:
Seal:

Note: This Certificate will be valid only when signed personally by Dean / Director / Registrar or other officer in overall charge of sports of the University duly countersigned by the Vice-Chancellor of the University.

## FORM V

**(for representing in the State School Teams in the National School Games / Sports mentioned in Annexure II of the Notification)**

**DIRECTORATE OF SCHOOL EDUCATION OF THE STATE OF TAMIL NADU**

**Certificate to meritorious sportsmen for employment to Group B and C Service under the Forest Department of Tamil Nadu**

Certified that Thiru / Tmt. / Selvi ________________________________ Son / Wife / Daughter of Thiru ____________________ student of __________________________ (complete address) represented the ____________________ State School Team in the game / event of ________________ in the National school Games for Schools held at _____________ from _________ to __________. Certified that ______________________ is recognized National School Competition in the _____________ category.

The position obtained by Thiru / Tmt. / Selvi ______________ who was part of ______________ (name of the team) in the ________________ State / Inter-university / School Games _________________________________ Competition / Tournament. The _______________ (individual / team) qualified for the first three positions. In case of ______________ field and track event __________________ the performance of ________________________ (individual) in the ______________________ category was ___________________ seconds / meters / kgs (units).

The position obtained by the individual / team in the above said Competition / Tournament was _______________. The Certificate is being given to Thiru / Tmt. / Selvi _________ ____________ Son / Wife / Daughter of Thiru ___________________________ whose date of birth is __________ on the basis of record available in the ___________ School.

Place:
Date:

Signature:
Name:
Designation:
Address:
Seal:

Note: This Certificate will be valid only when signed personally by the Principal / Headmaster of the school as per records of the School duly countersigned by the Joint Director (NSS), Directorate of School Education, Government of Tamil Nadu.

**9.4. அங்கீகரிக்கப்பட்ட போட்டிகள் அல்லது தொடர்களில் சான்றிதழ்களை பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில் வழங்க தகுதி வாய்ந்த அலுவலர்:**

| படிவத்தின் பெயர் | பங்குபெற்ற நிலையின் விவரம் | சான்றிதழ் வழங்கும் அலுவலர் |
|---|---|---|
| படிவம் I | பன்னாட்டு அளவிலான போட்டி | சம்பந்தப்பட்ட விளையாட்டின் தேசிய கூட்டமைப்பின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழிற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளரால் மேலொப்பமிடப்பட்டது. |
| படிவம் II | தேசிய அளவிலான போட்டி | சம்பந்தப்பட்ட விளையாட்டின் தேசிய விளையாட்டு கூட்டமைப்பின் செயலாளர் அல்லது மாநில விளையாட்டு சங்கத்தின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழிற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளரால் மேலொப்பமிடப்பட்டது. |
| படிவம் III | மாநில அளவிலான போட்டி | மாநில விளையாட்டு சங்கத்தின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழிற்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளரால் மேல் ஒப்பமிடப்பட்டது |
| படிவம் IV | பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டி | முதல்வர் / இயக்குநர் அல்லது பதிவாளர் அல்லது பல்கலைக்கழகத்தின் விளையாட்டு பொறுப்பு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழிற்கு பல்கலைக்கழக துணைவேந்தரால் மேல் ஒப்பமிடப்பட்டது. |
| படிவம் V | தேசிய அளவிலான பள்ளிகளுக்கான விளையாட்டுகளில் மாநில பள்ளி அணிகள் | பதிவுகளின் படி பள்ளியின் முதல்வர் / தலைமை ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழிற்கு, தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வி இயக்குநரகம், இணை இயக்குநரால் (NSS) மேலொப்பமிடப்பட்டது. |

**பிற்சேர்க்கை III**

**பாடத்திட்டம்**

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (முதல்நிலை) தேர்வு-II(தொகுதி II மற்றும் IIA பணிகள்)**

**குறியீடு: 495**

**பகுதி அ : மொழித் தாள் (பொது ஆங்கிலம் அல்லது பொதுத் தமிழ்) (100 கேள்விகள்)**

**பொதுத்தமிழ்**

**அலகு I: இலக்கணம் (25 வினாக்கள்)**

**எழுத்து:** பிரித்து எழுதுதல் – சேர்த்து எழுதுதல் – சந்திப்பிழை – குறில், நெடில் வேறுபாடு – லகர, ளகர, ழகர வேறுபாடு – னகர, ணகர வேறுபாடு – ரகர, றகர வேறுபாடு – இனவெழுத்துகள் அறிதல் – சுட்டு எழுத்துகள் – வினா எழுத்துகள் – ஒருமைப் பன்மை அறிதல்.

**சொல்:** வேர்ச்சொல் அறிதல் – வேர்ச்சொல்லில் இருந்து வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், பெயரெச்சம் வகை அறிதல் – அயற்சொல் – தமிழ்ச்சொல், எதிர்ச்சொல் – வினைச்சொல் – எழுத்துப் பிழை, ஒற்றுப்பிழை அறிதல் – இரண்டு வினைச் சொற்களின் வேறுபாடு அறிதல்.

**அலகு II: சொல்லகராதி (15 வினாக்கள்)**

(i) எதிர்ச்சொல்லை எடுத்தெழுதுதல், ஓரெழுத்து ஒரு மொழி, உரிய பொருளைக் கண்டறிதல் – ஒருபொருள் தரும் பல சொற்கள், பொருந்தா சொல்லைக் கண்டறிதல், அகர வரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல்; ஒருபொருள் பன்மொழி – இருபொருள் குறிக்கும் சொற்கள் – பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு – சொல்லும் பொருளும் அறிதல் – ஒரு சொல்லிற்கு இணையான வேறு சொல் அறிதல்.

(ii) கோடிட்ட இடத்தில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் - (எ.கா.) பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுதல் சிறப்பு (பயிலுதல், எழுதுதல்) - வானில் முகில் தோன்றினால் மழை பொழியும் (முகில், நட்சத்திரம்); பொருத்தமான பொருளைத் தெரிவு செய்தல் - (எ.கா.) ஊடகம் - தகவல் தொடர்புச் சாதனம் (செய்தி, தகவல் தொடர்புச் சாதனம்) - சமூகம் – மக்கள் குழு (மக்கள் குழு, கூட்டம்); ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக - (எ.கா.) புதுச்சேரி – புதுவை, மன்னார்குடி – மன்னை, மயிலாப்பூர் – மயிலை; பிழை திருத்துக. (எ.கா.) ஒரு – ஓர்; பேச்சு வழக்குச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்களை இணைத்தல் - (எ.கா.) வெத்தில – வெற்றிலை, நாக்காலி – நாற்காலி;

(iii) பேச்சு வழக்குத் தொடர்களிலுள்ள பிழை திருத்தம் - (எ.கா.) நேத்து மழ பேஞ்சுது - நேற்று மழை பெய்தது; சொற்களை இணைத்துப் புதிய சொல் உருவாக்குதல்: மற்றும், அல்லது, ஆல், பிறகு, வரை, இதுவுமல்ல, இருப்பினும், எனினும், இதனால்; அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் - (எனவே, ஏனெனில், ஆகையால், அதுபோல, அதனால், வரை, பின்பு) - (எ.கா.) நான் காட்டிற்குச் சென்றேன். அதனால் புலியைப் பார்த்தேன் - மாலைநேரம் முடியும் வரை விளையாடுவேன். தேர்வு முடிந்த பின்பு சுற்றுலா செல்லலாம்; பொருள் தரும் ஓர் எழுத்து - (எ.கா.) ஆ-பசு, ஈ-கொடு, தை-மாதம், தீ – நெருப்பு; பல பொருள் தரும் ஒரு சொல்லைக் கூறுக - (எ.கா.) கமலம், கஞ்சம், முளரி, பங்கயம் இச்சொற்கள் தாமரையைக் குறிக்கும்.

**அலகு III: எழுதும் திறன் (15 வினாக்கள்)**

(i) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்தல் – தொடர் வகைகள் – செய்வினை, செயப்பாட்டு வினை – தன்வினை, பிறவினை – ஒருமைப் பன்மை பிழையறிந்து சரியான தொடரறிதல்.

(ii) மரபுத் தமிழ்: திணை மரபு - உயர்திணை: அம்மா வந்தது – அம்மா வந்தாள்; அஃறிணை: மாடுகள் நனைந்தது – மாடுகள் நனைந்தன; பால் மரபு: ஆண்பால்: அவன் வந்தது – அவன் வந்தான்; பெண்பால்: அவள் வந்தது – அவள் வந்தாள்; பலர் பால்: அவர்கள் வந்தார்கள் – அவர்கள் வந்தனர்; ஒன்றன் பால்: அது வந்தன - அது வந்தது; பலவின் பால்: பறவைகள் பறந்தனர் – பறவைகள் பறந்தன; காலம்: நேற்று மழை பெய்யும் – நேற்று மழை பெய்தது; நேற்று வருவேன் – நேற்று வந்தேன்; இளமைப் பெயர்: பசு – கன்று; ஆடு – குட்டி; ஒலிமரபு: நாய் கத்தியது – நாய் குரைத்தது; வினைமரபு: கூடைமுடை, சோறு உண்; தொகை மரபு: மக்கள் கூட்டம் – ஆட்டு மந்தை; நிறுத்தல் குறியீடுகள்: கால்புள்ளி, அரைப் புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வியப்புக் குறி, வினாக்குறி அமையும் இடங்கள்.

**அலகு IV: கலைச் சொற்கள் (10 வினாக்கள்)**

பல்துறை சார்ந்த கலைச் சொற்களை அதாவது அறிவியல், கல்வி, மருத்துவம், மேலாண்மை, சட்டம், புவியியல், தொழில்நுட்பம், ஊடகம், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்துறை சார்ந்த கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொற்களை அறிந்திருக்க வேண்டும். (உதாரணம்: search engine – தேடு பொறி, வலசை – Migration, ஒவ்வாமை – Allergy, மரபணு – Gene, கடல் மைல் – Nautical Mile)

**அலகு V: வாசித்தல் – புரிந்து கொள்ளும் திறன் (15 வினாக்கள்)**

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் - செய்தித்தாள் – தலையங்கம் – முகப்புச் செய்திகள் – அரசு சார்ந்த செய்திகள் – கட்டுரைகள் – இவற்றை

வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன் – உவமைத் தொடரின் பொருளறிதல் - மரபுத் தொடரின் பொருளறிதல் – பழமொழிகள் பொருளறிதல் – ஆவண உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளும் திறன்.

**அலகு VI: எளிய மொழி பெயர்ப்பு (5 வினாக்கள்)**
ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அறிதல் வேண்டும் – பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்த்தல் வேண்டும் (சான்று: pendrive, printer, computer, keyboard) – ஆவணங்களின் தலைப்பு – கோப்புகள் – கடிதங்கள் – மனுக்கள் – மொழிபெயர்ப்பு புரிந்து கொள்ளுதல்.

**அலகு VII: இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும் (15 கேள்விகள்)**
திருக்குறள் தொடர்பான செய்திகள் (இருபது அதிகாரங்கள் மட்டும்) ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, ஊக்கமுடைமை, விருந்தோம்பல், அறன் வலியுறுத்தல், ஈகை, பெரியாரைத் துணைக்கோடல், வினை செயல்வகை, அவையஞ்சாமை, கண்ணோட்டம், அன்புடைமை, கல்வி, நடுநிலைமை, கூடா ஒழுக்கம், கல்லாமை, செங்கோன்மை, பண்புடைமை, நட்பாராய்தல், புறங்கூறாமை, அருளுடைமை - மேற்கோள்கள் - அறநூல் தொடர்பான செய்திகள் (நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, திரிகடுகம், இன்னாநாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, அவ்வையார் பாடல்கள்) - தமிழின் தொன்மை, சிறப்பு, திராவிட மொழிகள் தொடர்பான செய்திகள் - உ.வே.சாமிநாத ஐயர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சி.இலக்குவனார் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள் - தேவநேய பாவாணர், அகரமுதலி, பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஜி.யு.போப், வீரமாமுனிவர் தமிழ்த் தொண்டு தொடர்பான செய்திகள் – தமிழ்ச் சான்றோர் பற்றிய செய்திகள்: பாவேந்தர், டி.கே.சிதம்பரனாதர், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கண்ணதாசன், காயிதே மில்லத், தாரா பாரதி, வேலுநாச்சியார், பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம், முடியரசன், தமிழ் ஒளி, உருத்திரங்கண்ணனார், கி.வா.ஜகந்நாதர், நாமக்கல் கவிஞர்.

குறிப்பு: அலகு VII-க்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு வரையிலான (upto SSLC Standard) பாடப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டது.

## General English

### Unit I: Grammar (25 Questions)
Parts of speech, Concord, Tense, Active voice and passive voice, Types of sentences, Statement, Interrogative, Imperative, Exclamatory, Transformation of statements into imperatives, Interrogatives into statements, Assertives into negatives, Exclamatory sentences into Statement, Imperatives into Inquisitive Interrogatives, Imperatives into Appreciative Statements, Verbs, Main Verbs and Auxiliary Verbs , Regular and Irregular Verbs, Infinitives, Gerunds, Participles, Question tags, Sentence patterns, Types of sentences, Simple, Compound and Complex, Phrases and clauses, Degrees of comparison, Positive, Comparative and Superlative, Direct into Indirect and Indirect to Direct, Synthesis of sentences, Punctuations.

### Unit II: Vocabulary (15 Questions)
Synonyms, Antonyms, Homonyms, Homophones, Collocations, Idioms & Phrases, Phrasal verbs, Spelling of words, Correct usage of words, One word substitution, Word creation, Singular and plural (including Zero plural), Derivatives, Abbreviations, British and American English, Compound words and Figures of speech.

### Unit III: Writing Skills (10 Questions)
Letter writing (formal and informal) – Types of Letters (Multiple Choice Question), Jumbled sentences, Finding out the right order of sentences, Making queries (Multiple Choice Question), Inferences, Blanks, Substitutions.

### Unit IV: Technical Terms (10 Questions)
Administrative Terms, Department related, General and Official terms, Official Correspondence (only basics).

### Unit V: Reading Comprehension (20 Questions)
Unseen passages (News Paper, Headlines, Editorials, Government related News), Question Types – Strong question, Weak question, Match the following, Sentence Completion, Ascertainment of facts (Multiple Choice Question) - Choose the best response.

### Unit VI: Translation (5 Questions)
Word Translation, Sentence Translation, Tense related translation tasks, Tense / Voice related tasks.

**Unit VII: Literary Works (15 Questions) (SSLC Standard)**
Figures of Speech; Appreciation and Analysis of Poetry; Lines of Significance

**Poems:** I Dream of Spices – Raj Arumugam; The Crocodile – Lewis Carroll; Teamwork – Edger Albert Guest; From a Railway Carriage – Robert Louis Balfour Stevenson; A Tragic Story – William Makepeace Thackeray; Sea Fever – John Masefield; Courage – Edger Albert Guest; The Age of Chivalry – George Krokos; Wandering Singers – Sarojini Naidu; The Listeners – Walter de la mere; Your Space – David Bates; Special Hero – Christine M. Kerschan; Stopping by Woods on a Snowy Evening – Robert Frost; Leisure – William Henry Davies; A Poison Tree – William Blake; The Power of a Smile – Tupac Shakur; On Killing a Tree – Gieve Patel; Advice from a Tree – Ilan Shamir; The Spider and The Fly – Mary Howitt; Never Trust a Mirror – Erin Hanson; The River – Ilan Shamir; Nature the Gentlest Mother – Emily Dickinson; The Comet – Norman Littleford; The Star – Jane Taylor; The Stick-Together Families – Edgar Albert Guest; Memories of My Dad – Rebecca D. cook; Life – Henry Van Dyke; The Grumble Family - L.M. Montgomery; The Secret of the Machines – Rudyard Kipling; The House on Elm Street – Naida Bush.

**Prose:** His First Flight – Liam O' Flaherty; The Night the Ghost Got In – James Grover Thurber; Empowered Women Navigating the World; The Attic – Satyajit Ray; Tech Bloomers; The Last Lesson – Alphonse Daudet; The Dying Detective - Arthur Canon Doyle; Learning The Game - Sachin Ramesh Tendulkar; I Can't Climb Trees Anymore – Ruskin Bond; Old Man River – Dorothy Deming (Drama); Seventeen Oranges – Bill Naughton; Water – The Elixir of Life – Sir C.V. Raman; From Zero to Infinity – Biography of Srinivasa Ramanujan; A Birthday Letter – Jawaharlal Nehru; The Nose Jewel – C. Rajagopalachari; Hobby – Turns A Successful Career; Sir Isaac Newton – The Ingenious Scientist – Nathaniel Hawthorne; My Reminiscence – Rabindranath Tagore; Sea Turtles – Sheker Dattatri; When the Trees Walked – Ruskin Bond; A Visitor from Distant Lands; Sports Stars – Mithali Dorai Raj; The Last Stone Carver – Sigrun Srivastav; Eidgah – Munshi Premchand; The Wind on Haunted Hill – Ruskin Bond; A Prayer to the Teacher – Subroto Bagchi; The Tempest – Tales From Shakespeare; A Hunter Turned Naturalist – Jim Corbett; The Cat and the Painkiller (An Extract from the Adventures of Tom Sawyer) – Mark Twain.

Note: The Syllabus for Unit VII is based on school textbooks (up to SSLC Standard).

**பகுதி ஆ: பொது அறிவு (75 கேள்விகள்)**

**அலகு I: பொது அறிவியல் (5 கேள்விகள்)**
அறிவியல் அறிவு மற்றும் அறிவியல் உணர்வு - பகுத்தறிதல் - பொருள் உணராமல் கற்றலும் கருத்துணர்ந்து கற்றலும் - கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி புரிந்து கொள்வதற்கான ஒரு கருவி அறிவியல்; பேரண்டத்தின் இயல்பு - பொது அறிவியல் விதிகள் - இயக்கவியல் - பருப்பொருளின் பண்புகள், விசை, இயக்கம் மற்றும் ஆற்றல் - அன்றாட வாழ்வில் இயக்கவியல், மின்னியல், காந்தவியல், ஒளி, ஒலி, வெப்பம், அணுக்கரு இயற்பியல், லேசர் (LASER), மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் ஆகியவற்றின் அடிப்படை கோட்பாடுகளின் பயன்பாடுகள்; தனிமங்களும் சேர்மங்களும், அமிலங்கள், காரங்கள், உப்புகள், பெட்ரோலிய பொருட்கள், உரங்கள், பூச்சிகொல்லிகள்; உயிரியலின் முக்கிய கோட்பாடுகள், உயிர் உலகின் வகைப்பாடு, பரிணாமம், மரபியல், உடலியங்கியல், உணவியல், உடல்நலம் மற்றும் சுகாதாரம், மனிதநோய்கள்; சுற்றுப்புறச்சூழல் மற்றும் சூழலியல்; அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால கண்டுபிடிப்புகள்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு II: இந்தியாவின் புவியியல் (5 கேள்விகள்)**
அமைவிடம் - இயற்கை அமைவுகள் - பருவமழை, மழைப்பொழிவு, வானிலை மற்றும் காலநிலை - நீர் வளங்கள் - இந்திய ஆறுகள் - மண், கனிம வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் - காடு மற்றும் வன உயிரினங்கள் - வேளாண் முறைகள்; போக்குவரத்து - தகவல் தொடர்பு; சமூகப் புவியியல் - மக்கள்தொகை அடர்த்தி மற்றும் பரவல் - இனம், மொழிக் குழுக்கள் மற்றும் முக்கியப் பழங்குடிகள்; இயற்கைப் பேரிடர் - பேரிடர் மேலாண்மை; சுற்றுச்சூழல் மாசுபடுதல் - காரணங்களும் தடுப்பு முறைகளும் - பருவநிலை மாற்றம் - பசுமை ஆற்றல்; புவியியல் அடையாளங்கள்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு III: இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம் (10 கேள்விகள்)**
சிந்து சமவெளி நாகரிகம் - குப்தர்கள், தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் - விஜயநகர மற்றும் பாமினி அரசுகளின் காலம் - தென் இந்திய வரலாறு; தேசிய மறுமலர்ச்சி - ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்க கால எழுச்சிகள் - இந்திய தேசிய காங்கரஸ் - தலைவர்கள் உருவாதல் - பி.ஆர்.அம்பேத்கர், பகத்சிங், பாரதியார், வ.உ.சிதம்பரனார், ஜவகர்லால் நேரு, காமராசர், மகாத்மா காந்தி, மௌலானா அபுல் கலாம்

ஆசாத், தந்தை பெரியார், இராஜாஜி, சுபாஷ் சந்திர போஸ், ரவீந்திரநாத் தாகூர் மற்றும் பலர்; விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு நிலைகள்: அகிம்சை முறையின் வளர்ச்சி மற்றும் புரட்சிகர இயக்கங்கள்; வகுப்புவாதம் மற்றும் தேசப்பிரிவினை; இந்திய சமூகப் பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும்; இந்தியப் பண்பாட்டின் இயல்புகள், வேற்றுமையில் ஒற்றுமை - இனம், மொழி, வழக்காறு; இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம்; கலை, அறிவியல், இலக்கியம் மற்றும் தத்துவம் ஆகிய வெவ்வேறு துறைகளில் தனித்துவம் கொண்ட ஆளுமைகள்.

**அலகு IV: இந்திய ஆட்சியியல் (15 கேள்விகள்)**

இந்திய அரசியலமைப்பு - அரசியலமைப்பின் முகவுரை - அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் - ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள்; குடியுரிமை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்; ஒன்றிய நிர்வாகம், ஒன்றிய நாடாளுமன்றம் - மாநில நிர்வாகம், மாநில சட்டமன்றம் - உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ்; கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள்: மத்திய - மாநில உறவுகள்; தேர்தல் - இந்திய நீதி அமைப்புகள் - சட்டத்தின் ஆட்சி; பொதுவாழ்வில் ஊழல் - ஊழல் தடுப்பு நடவடிக்கைகள்- லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா - தகவல் உரிமை - பெண்களுக்கு அதிகாரமளித்தல் - நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் - மனித உரிமைகள் சாசனம்; இந்தியாவில் அரசியல் கட்சிகளும் மற்றும் ஆட்சியல் முறைகளும்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு V: இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம் (20 கேள்விகள்)**

இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள் - ஐந்தாண்டு திட்ட மாதிரிகள் - ஒரு மதிப்பீடு - திட்டக்குழு மற்றும் நிதி ஆயோக்; வருவாய் ஆதாரங்கள் - இந்திய ரிசர்வ் வங்கி - நிதி கொள்கை மற்றும் பணவியல் கொள்கை - நிதி ஆணையம் - மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான நிதிப் பகிர்வு - சரக்கு மற்றும் சேவை வரி; இந்திய பொருளாதார அமைப்பு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம், நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் வேளாண்மை - வேளாண்மையில் அறிவியல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு - தொழில் வளர்ச்சி - ஊரக நலன்சார் திட்டங்கள் - சமூகப் பிரச்சனைகள் - மக்கள் தொகை, கல்வி, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, வறுமை; தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் - தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு; அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் - இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும் - தமிழ்நாட்டின் பொருளாதார போக்குகள் - தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்; சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்; தமிழ்நாட்டின் கல்வி மற்றும் நலவாழ்வு (Health) முறைமைகள்; தமிழ்நாட்டின் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்; பல்வேறு துறைகளில் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ள சாதனைகள்; தமிழ்நாட்டில் மின்னாளுகை; பொது விழிப்புணர்வும் (Public Awareness) பொது நிர்வாகமும் - நலன்சார் அரசுத் திட்டங்களும் அவற்றின் பயன்பாடும், பொது விநியோக அமைப்புகளில் (Public delivery systems) நிலவும் சிக்கல்கள்; தற்போதைய சமூகப் பொருளாதார பிரச்சனைகள்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு VI: தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள் (20 கேள்விகள்)**

தமிழ் சமுதாய வரலாறு, அது தொடர்பான தொல்லியல் கண்டுபிடிப்புகள், சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறு; திருக்குறள் - மதச் சார்பற்ற தனித்தன்மையுள்ள இலக்கியம் - அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை - மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம் - திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு - திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்; விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு - ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள் - விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு; பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூக - அரசியல் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி – நீதிக்கட்சி, பகுத்தறிவு வாதத்தின் வளர்ச்சி - சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம் மற்றும் இவ்வியக்கங்களுக்கான அடிப்படை கொள்கைகள், தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் பங்களிப்புகள்.

## பகுதி இ: திறனறிவு மற்றும் மனக்கணக்கு நுண்ணறிவு (25 கேள்விகள்)

**அலகு I: திறனறிவு (15 கேள்விகள்)**

சுருக்குதல் - விழுக்காடு - மீப்பெரு பொதுக் காரணி (HCF) – மீச்சிறு பொது மடங்கு (LCM); விகிதம் மற்றும் விகிதாச்சாரம்; தனிவட்டி - கூட்டு வட்டி - பரப்பு - கொள்ளளவு - காலம் மற்றும் வேலை.

**அலகு II: காரணவியல் (10 கேள்விகள்)**

தருக்கக் காரணவியல் - புதிர்கள் - பகடை - காட்சிக் காரணவியல் - எண் எழுத்துக் காரணவியல் - எண் வரிசை.

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (முதன்மை) தேர்வு – II (தொகுதி II மற்றும் IIA பணிகள்)**

**தமிழ் தகுதித் தேர்வு – தாள் I (பத்தாம் வகுப்பு தரம்)**

**தேர்வுத்திட்டம்**

1. மொழி பெயர்த்தல்
   (i) தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்தல்

   (ii) ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தல்

2. சுருக்கி வரைதல்
3. பொருள் உணர்திறன்
4. சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல்
5. திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்
   - அ) மதச்சார்பற்ற தனித் தன்மையுள்ள இலக்கியம்
   - ஆ) அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை
   - இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்
   - ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும் – சமத்துவம், மனிதநேயம் முதலானவை
   - உ) சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு
   - ஊ) திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்
6. கடிதம் வரைதல் (அலுவல் சார்ந்தது)
7. தமிழ் மொழி அறிவு

**பாடத்திட்டம்**

1. தற்கால நிகழ்வுகள்
2 சமுதாயப் பிரச்சனைகள்
3. சுற்றுச்சூழல் தொடர்பான தலைப்புகள்
4. இந்தியப் பொருளாதாரம் தொடர்பான தலைப்புகள்
5. அறிவியலும் தொழில்நுட்பமும்
6. கலையும் பண்பாடும்
7. பகுத்தறிவு இயக்கங்கள் – திராவிட இயக்கம், சுயமரியாதை இயக்கம்.
8. இக்காலத் தமிழ்மொழி – கணினித் தமிழ், வழக்கு மன்றத் தமிழ், அலுவலக மொழியாகத் தமிழ், புதிய வகைமைகள்.
9. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் தமிழக அரசின் நலத் திட்டங்கள் (பெண்கள்/விவசாயிகள்...), சமூக நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலில் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்கு–இடஒதுக்கீடும் அதன் பயன்களும்–தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதி மற்றும் சமூக ஒற்றுமையின் பங்கு

10. சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக, பொருள் வேறுபாடு அறிதல், பிரித்தெழுதுக, எதிர்ச்சொல், எதிர்மறை வாக்கியம், பிழை நீக்கி எழுதுக.

11. திருக்குறளிலிருந்து கீழ்க்காணும் தலைப்புகள் தொடர்பாக கட்டுரை எழுதுதல்

அ) மதச்சார்பற்ற தனித் தன்மையுள்ள இலக்கியம்

ஆ) அன்றாட வாழ்வியலோடு தொடர்புத் தன்மை

இ) மானுடத்தின் மீதான திருக்குறளின் தாக்கம்

ஈ) திருக்குறளும் மாறாத விழுமியங்களும் - சமத்துவம், மனிதநேயம் முதலானவை

உ) சமூக அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் திருக்குறளின் பொருத்தப்பாடு

ஊ) திருக்குறளில் தத்துவக் கோட்பாடுகள்

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (முதன்மை) தேர்வு – II (தொகுதி – II பணிகள்)**

**பொது அறிவு (பட்டப் படிப்புத் தரம்) [300 மதிப்பெண்கள்]**

**குறியீடு: 469**

**அலகு I: தமிழ் நாட்டின் சிறப்புப் பார்வையுடன் நவீன இந்திய வரலாறு (40 மதிப்பெண்கள்)**

ஐரோப்பியர்களின் வருகை: போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள்; ஆங்கிலேய ஆட்சியின் விரிவாக்கம்: கர்நாடகப் போர்கள்; ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான தொடக்கக் கால கிளர்ச்சிகள்: பாளையக்காரர்களின் கிளர்ச்சி, தென்னிந்தியப் புரட்சி, வேலூர்க் கலகம், இந்திய தேசிய இயக்கம் – மிதவாத, தீவிரவாத மற்றும் பயங்கரவாத இயக்கங்கள் – காந்திய சகாப்தம்; தமிழ்நாட்டில் விடுதலைப் போரின் தொடக்கக் காலம் – தமிழ்நாட்டிலிருந்து விடுதலைப் போராட்டத்திற்கான முதல் குரல் – பூலித்தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், தீரன் சின்னமலை, வேலுநாச்சியார், குயிலி உள்ளிட்டோரின் போராட்டங்கள்; விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு – வ.உ.சிதம்பரனார், பாரதியார், வ.வே.சுப்பரமணியன், வாஞ்சிநாதன், சுப்பரமணியசிவா, தி.ஷே.சு.ராஜன், இராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜர், ருக்மணி இலட்சுமிபதி, அம்புஜம்மாள் மற்றும் பிறர்; விடுதலை போராட்டத்தின் வகைகள் – தியாகங்கள் – இதழ்கள் – இலக்கியங்கள் – நாடகங்கள் – பாடல்கள் – திரைப்படங்கள் உள்ளிட்டவை: விடுதலை போராட்டத்திலும் சமூகப் பணியிலும் பெண்களின் பங்களிப்பு: மருத்துவர் முத்துலட்சுமி அம்மையார், மூவலூர் இராமாமிர்தம், கடலூர் அஞ்சலை அம்மாள், தில்லையாடி வள்ளியம்மை மற்றும் பிறர்; ஆங்கிலேய ஆட்சியின் தாக்கம்: கிருத்துவ சமய இயக்கங்கள், கல்வி வளர்ச்சி, நீதித்துறை, உள்ளாட்சி சுய நிர்வாக அமைப்பு, காவல் துறை, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு – உள்நாட்டு தொழில்களின் வீழ்ச்சி – மேற்கத்திய பண்பாட்டுப் பரவல்; சமூக நீதிக் கோட்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும், சமூக-மத இயக்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சாதனைகள்.

**அலகு II: தமிழ்ச் சமூகம் – பண்பாடும் தொன்மையும் (30 மதிப்பெண்கள்)**

பண்டையத் தமிழ்ச் சமூகம் – தொல்லியல் அகழ்வாராய்ச்சி ஆதாரம் – அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், கீழடி – சங்க இலக்கியம் – செம்மொழித் தமிழ்; திருக்குறள் – மானுட மேன்மைக்கான வாழ்க்கை நெறி – அன்றாட வாழ்விலும் நீதித்தறையிலும் நிர்வாகத்துறையிலும் திருக்குறளின் வழிகாட்டி நெறிமுறைகள் – ஒட்டு மொத்த மனிதகுல மேன்மைக்கும் ஒருங்கிணைப்பிற்கும் திருக்குறள் தரும் தத்துவச் சிந்தனைகள்; பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் சமூக-அரசியல் இயக்கங்கள், வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் – நீதிக்கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் – பகுத்தறிவு இயக்கத்தின் தாக்கம், சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்க வரலாறும் வளர்ச்சியும், தனித் தமிழ் இயக்கம், தமிழ்ச் சமூக சீர்த்திருத்த ஆளுமைகள் – தந்தை பெரியார், அறிஞர் அண்ணா உள்ளிட்ட அறிஞர்கள்; கலை – தமிழர்களின் பண்பாட்டு மரபுகள் – தமிழர்களின் பண்டைய பண்பாட்டு அறிவு – தமிழர்களின் வழமையான சிந்தனை மரபுகள்; பண்பாட்டுக் கூறுகள்: தமிழ்நாட்டு அரசுச் சின்னங்கள் – பண்பாட்டுத் துறை வல்லுநர்கள் – நாட்டுப்புற நடனங்கள், நாட்டுப்புற இசை, நாட்டுப்புற நாடகம் மற்றும் உலகத் தமிழ் மாநாடுகள்.

**அலகு III: தமிழ்நாட்டின் சிறப்புப் பார்வையுடன் இந்தியாவில் நிலவும் சமூக பிரச்சனைகள் (50 மதிப்பெண்கள்)**

மக்கள் தொகை பெருக்கம்: கருவுறுதல் – இறப்பு – இடப்பெயர்வு – நோயுற்ற தன்மை – மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011 – மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்கள் – தேசிய மக்கள் தொகைக் கொள்கை 2000 – குடும்பக் கட்டுப்பாடு மற்றும் அதன் சாதனைகள்; நலவாழ்வு: சுகாதாரக் குறைபாடு – கிராமம் மற்றும் நகர ஏற்றத் தாழ்வுகள் – உட்கட்டமைப்பு குறைபாடு – போதுமான சுகாதார சேவை வழங்காமை – ஊரக பஞ்சாயத்து மற்றும் நகர்புற வளர்ச்சி முகமைகளின் பங்கு – இந்தியாவின் சுகாதார கொள்கை – இந்தியாவின் சுகாதார திட்டங்கள்; குழந்தை தொழிலாளர் மற்றும் குழந்தைகளுக்கு தீங்கிழைத்தல்: குழந்தைக் கல்வி – பள்ளி இடைநிற்றல் – பாலின வேறுபாடுகள் – இந்தியாவில் குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்பிற்கான முயற்சிகள் – ஊடகமும் அதிகரிக்கும் பாதிப்புகளும் – குழந்தை தீங்கிழைப்புகளிலிருந்து பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் நலத் திட்டங்கள்; மகளிருக்கு அதிகாரமளித்தல்: குடும்ப வன்முறை – வரதட்சணை பிரச்சனைகள் – பாலியல் தாக்குதல் – மகளிரை கேலி வதை செய்தல் – கடத்தல் – சட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் – மகளிருக்கு அதிகாரமளிப்பதில் அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பங்கு – நலத் திட்டங்கள்; விளிம்புநிலைக் குழுக்கள்: பிரச்சனைகள் – தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் – முதியோர்கள் – மாற்றுத்திறனாளிகள் – திருநங்கைகள் – மத சிறுபான்மையினர் – விளிம்பு நிலைக் குழுக்கள் மேம்பாட்டிற்கான மத்திய மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்கள்; சமூக மாற்றங்கள்: நகரமயமாதல் – நவீனமயமாதல் – உலகமயமாதல் – இந்தியாவின் கொள்கை, திட்டமிடல் மற்றும் திட்டங்கள் – சமூகத்தில் வன்முறையின் தாக்கம் – மதவன்முறை – பயங்கரவாதம் மற்றும் சாதிய வன்முறை – காரணங்கள் மற்றும் தீர்வுகள்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு IV: வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் (40 மதிப்பெண்கள்)**

ரோபோக்களும் பயன்பாடுகளும்; அணுவும் அணுக்கரு இயற்பியலும் – அணு ஆற்றலின் பயன்பாடுகள்; டையோட்களும் டிரான்சிஸ்டர்களும் அவற்றின் பயன்பாடுகளும்; ஒளிபரப்பு தொழில் நுட்பம்; மின்வேதிக்கலங்கள் – மின்முனைகளின் வகைகள் – மின்கலங்கள் – லித்தியம் – அயனிமின்கலன்; எரிபொருள்கள்: வாயு எரிபொருட்கள் – திரவ பெட்ரோலிய வாயு (LPG), இயற்கை வாயு மற்றும் நீர் வாயு; பலபடிச் சேர்மங்கள்: வெப்பத்தால் இளகும் மற்றும் வெப்பத்தால் இறுகும் நெகிழிகள், PVC, PET, நைலான் 66, டெஃப்லான்; மருந்தாக்க வேதியியல்: வலி நிவாரணிகள் – பாராசிட்டமால் மற்றும் ஆஸ்பிரின், எதிர் உயிரிகள் – பெனிசிலின் மற்றும் குளோரோமைசிடின். உயிர் தொழில் நுட்பம்: உயிர் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் – தாவர மரபு பொறியியல் – கோட்பாடுகள் – மரபணு மாற்றுத் தாவரங்கள், உண்ணக்கூடிய தடுப்பூசிகள் (edible vaccines), டெர்மினேட்டர் மரபணு தொழில் நுட்பம், பி.டி.பருத்தி (BT Cotton), தங்க அரிசி (Golden rice), ப்ளேவர் சேவர் (Flavr Savr) தக்காளி, மரபணு மாற்ற தாவரங்களால் சமூகத்திலும் சூழலியலிலும் ஏற்படும் தாக்கம் – பயிர் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் உயிர் தொழில் நுட்ப முறைகள் – வனவியல், தோட்டக்கலையில் தாவர திசு வளர்ப்பின் பயன்பாடு – மறுசேர்க்கை டி.என்.ஏ தொழில் நுட்பம் – டி.என்.ஏ குளோனிங் (cloning) – டி.என்.ஏ கைரேகை உத்தி (fingerprinting) – பாலிமரேஸ் சங்கிலி தொடர்

வினை (PCR)–என்சைம் இணைக்கப்பட்ட இம்யுனோசார்பன்ட் (ELISA) சோதனையை பயன்படுத்தி நோய்களை கண்டறிதல் – செல் கலப்பு நுட்பத்தை பயன்படுத்தி ஓரின எதிர்ப்பான்களை உற்பத்தி செய்தல் – விலங்கு செல் வளர்ப்பு நுட்பங்கள் – குருத்தணுக்களும் அவற்றின் பயன்பாடுகளும்; ஜி.ஐ.எஸ் (GIS) ன் பயன்பாடுகள்; மீநுண் தொழில் நுட்பம் (Nanotechnology) – அடிப்படைகள் – பயன்பாடுகள் – மீநுண் உரம் (Nano Fertilizer), மீநுண் பூச்சிக் கொல்லிகள் (Nano Pesticides), பசுமை மீநுண் தொழில் நுட்பம் (Green Nano Technology) மற்றும் மீநுண்-விவசாயம் (Nano-Farming); மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க நுட்பங்கள்: செயற்கை சோதனை முறை கருவுறுதல் (IVF) – கருப்பையில் கருவூட்டல் (IUI) – கருமுட்டை சைட்டோபிளாசத்தில் விந்தணு செலுத்துதல் (ICSI) – இனச்செல்களை கருக்குழாயில் செலுத்துதல் (GIFT) – பதநிலையில் விந்துக்களைப் பாதுகாத்தல்; கணினியின் உட்கூறுகள் – கணினி பிணையக்கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு – முறைமை மென்பொருள்கள் மற்றும் பயன்பாட்டு மென்பொருள்கள் – தரவு தொடர்பு வலை அமைப்பு – குறியாக்கவியல் – கணினி வரைவியல் மற்றும் பல் ஊடகம் – நகர்வுக் கணிமை மற்றும் தொடர்பியல் – வலை தொழில் நுட்பம் மற்றும் பயன்பாடுகள் – மின் வணிகம் – மேகக் கணிமைக் கட்டமைப்பு – பொருட்களின் இணையம் (IOT) – செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள் – இயந்திர கற்றல் – மின்வெளி பாதுகாப்பு – உயிரியளவியல் – கட்டச் சங்கிலி தொழில் நுட்பம்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு V: அரசியலமைப்பு, அரசியல் மற்றும் ஆளுகை (தமிழ்நாட்டின் சிறப்புப் பார்வையுடன்) (60 மதிப்பெண்கள்)**

இந்திய அரசியலமைப்பு: முன்னுரை மற்றும் தத்துவ அம்சங்கள் – முக்கிய அம்சங்கள் மற்றும் ஆதாரங்கள் – நடுவண், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் – குடியுரிமை – அடிப்படை உரிமைகள், அடிப்படைக்

கடமைகள், அரசின் வழிகாட்டி நெறிமுறை கோட்பாடுகள்; நடுவண் அரசாங்கம்: குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் அமைச்சரவைக் குழு – அமைச்சரவை – நாடாளுமன்றம் (மக்களவை மற்றும் மாநிலங்களவை) –நாடாளுமன்றக் குழுக்கள் – முக்கிய அரசியலமைப்பு திருத்தங்கள்; மாநில அரசாங்கம்: முதலமைச்சர் மற்றும் அமைச்சரவைக் குழு – தமிழ்நாடு சட்டமன்றம்: கட்டமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்; உள்ளாட்சி அமைப்புகள்: மூன்று அடுக்கு அமைப்பு – 73-வது மற்றும் 74-வது அரசியலமைப்புத் திருத்தங்கள் – தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994 – கிராம சபை – தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் – வளர்ச்சி நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சியரின் பங்கு; இந்திய கூட்டாட்சியின் இயக்கவியல்: மத்திய – மாநில உறவுகள்: நிர்வாகம், சட்டத் துறை மற்றும் நிதி துறை – சிக்கல்கள் மற்றும் சவால்கள்; இந்தியாவில் நீதித்துறை: உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் – துணை நீதிமன்றங்கள் (கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள்) – நீதிப்புணராய்வு – நீதித்துறை செயலுறுத்தம் – பொது நல வழக்குகள்; இந்தியாவில் தேர்தல் அமைப்பு – தேர்தல் ஆணையம் (அரசியலமைப்பு விதிகள், அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்); இந்தியாவில் கட்சி அமைப்பு: இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் உள்ள பிராந்திய மற்றும் தேசிய அரசியல் கட்சிகள்; இந்திய அரசியலில் நேர்மை: அரசியலில் ஊழல் – ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள்: லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா – மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், தலைமைக் கணக்கு தணிக்கைக் கட்டுப்பாட்டு அதிகாரி – மத்திய புலனாய்வு அமைப்பு – அமலாக்க இயக்குநரகம் – தகவல் அறியும் உரிமைச் சட்டம் – சேவைகளுக்கான உரிமை – நுகர்வோர் உரிமைகள் – நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 – மனித உரிமைகள் சட்டம் 1993 – தேசிய மனித உரிமைகள் ஆணையம், மாநில மனித உரிமைகள் ஆணையம் – சமூக தணிக்கை – குடிமக்கள் சாசனம். தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள்: பிராந்திய மற்றும் தேசியக் கட்சிகள் – 1947க்குப் பிறகு தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்தப்பட்ட அரசு நலத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் – தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு மற்றும் மொழிக் கொள்கை – தமிழ்நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியில் நலத்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் தாக்கம்; தமிழ்நாட்டில் கல்வி மற்றும் சுகாதார நிர்வாக கட்டமைப்பு: பரிணாம வளர்ச்சி – பல்வேறு துறைகளில் தமிழ்நாட்டின் சாதனைகள்: கல்வி, சுகாதாரம், தொழில்துறை, தகவல் தொழில்நுட்பம், விவசாயம், பெண்கள் மற்றும் விளிம்பு நிலை மக்கள்; தமிழ்நாட்டில் மின்-ஆளுமை மற்றும் அலைப்பேசி ஆளுமை முன்னெடுப்புகள் – மின்-ஆளுமை மூலம் பொது சேவை வழங்கல். தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) – இ-சேவை மையங்கள்; தமிழ்நாட்டில் பொது சேவை வழங்கலில் உள்ள சிக்கல்கள்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு VI: தமிழ் நாட்டின் சிறப்புப்பார்வையுடன் இந்தியப்புவியியல், சுற்றுச்சூழல், பல்லுயிர் மற்றும் இந்தியாவின் பேரிடர் மேலாண்மை (40 மதிப்பெண்கள்)**

புவியியல் அமைவிடம் – புறநிலைப் பிரிவுகள் – ஆறுகளின் அமைப்பு – காலநிலை – மண் – இயற்கைத் தாவரச்செறிவு – வேளாண் பயிர்கள் – கால்நடைகள் – மீன்வளம் – நீர்ப்பாசனம் – பன்நோக்குத் திட்டங்கள்; கனிமங்கள்: இரும்புத்தாது, மாங்கனீசு, செம்பு, பாக்சைட், தங்கம், வெள்ளி, மைகா, நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு; ஆற்றல் வளங்கள்: நீர்மின் ஆற்றல், அனல்மின் ஆற்றல், அணு ஆற்றல், காற்றாலைகள், ஓத ஆற்றல் மற்றும் சூரிய ஆற்றல்; தொழிற்சாலைகள்: நூற்பாலைகள், சணல், சர்க்கரை, சிமெண்ட, இரும்பு மற்றும் எஃகு, தானியங்கி வாகனம் மற்றும் கப்பல் கட்டுதல்; போக்குவரத்து: சாலைகள், இருப்புப்பாதைகள், நீர்வழி மற்றும் வான்வழி; சுற்றுச்சூழல் – உலகளாவிய மற்றும் தேசிய சுற்றுச்சூழல் பிரச்சினைகள் – மாசு – காற்று, நீர், மண், வெப்ப, கதிரியக்க, சத்தம், மின்னணு மற்றும் திடக்கழிவுகள் – நகர திடக்கழிவுகள் மற்றும் உயிர் மருத்துவ கழிவுகள் மேலாண்மை; பல்லுயிர் மற்றும் பாதுகாப்பு: வரையறை, வகைகள் – மரபியல், இனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை – மதிப்பு – பல்லுயிருக்கு அச்சுறுத்தல்கள் – இயல் வாழிடங்கள் அழிக்கப்படுதல், ஆக்கிரமிப்பு இனங்கள் மற்றும் மானுடவியல் நடவடிக்கைகள் – காலநிலை மாற்றம் மற்றும் காட்டுத் தீ. இனங்கள் அழிவின் காரணங்கள் மற்றும் விளைவுகள். பல்லுயிர் பாதுகாப்பு: இருப்பிடம் சார்ந்த மற்றும் இருப்பிடம் சாராத. பல்லுயிர் பாதுகாப்பு உத்திகள்: சர்வதேச சுற்றுச்சூழல் ஆளுகை – பல்லுயிர் சட்டம் (BDA), பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கம் (IUCN), அழிந்துவரும் உயிரினங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான அவை (CITES) மற்றும் இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (WWF). இந்தியாவின் பல்லுயிர் முக்கியத்துவம் செறிந்த பகுதிகள். நிலையான வளர்ச்சி – நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் மற்றும் குறிகள் – சுத்தமான மற்றும் பசுமை ஆற்றல் வளங்கள் – பாரிஸ் ஒப்பந்தம் மற்றும் COP28; பேரிடர் மேலாண்மை: பேரழிவு மீதான கண்ணோட்டம் – வரையறைகள் மற்றும் வகைகள். பேரிடர் இடர்பாடுகள் மேலாண்மை கட்டமைப்பின் அறிமுகம். இயற்கை பேரழிவுகள் – மானுடவியல் பேரழிவு – புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம், தொழில் சார்ந்த விபத்துக்கள். காலநிலை மாற்ற ஆளுகை – தணிப்பு மற்றும் தழுவல்கள். பேரிடர் மேலாண்மையில் விண்வெளி தொழில்நுட்பத்தின் பங்கு. காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல் திட்டம் – தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் – தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம் – தமிழ்நாட்டில் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பில் அரசு சாரா அமைப்புகள் மற்றும் குடிமை சமூக அமைப்புகளின் பங்கு; நடப்பு நிகழ்வுகள்

**அலகு VII: தமிழ் நாட்டின் சிறப்புப் பார்வையுடன் இந்தியப் பொருளாதாரம் (40 மதிப்பெண்கள்)**

இந்திய பொருளாதாரத்தின் தன்மைகள்: ஒரு மதிப்பீடு – இந்திய பொருளாதாரத்தின் கட்டமைப்பு – புதிய பொருளாதாரக் கொள்கை: காரணம் – பகுப்புக்கள் – தனியார் மயமாக்கல், கட்டுப்பாடுகள் நீக்குதல், வர்த்தக தாராளமயமாக்கல். 1991 முதல் இந்திய பொருளாதார சீர்திருத்தம் (கண்ணோட்டம் மட்டும்) – வருவாய் மூலங்கள்: வருவாய் வரவினங்கள் – மூலதன வரவினங்கள் – வருவாய் செலவினங்கள் – மூலதன செலவினங்கள்; இந்திய ரிசர்வ் வங்கி: செயல்பாடுகள் – பணவியல் கொள்கை – உட்கூறுகள் – நிதியியல் கொள்கை: நிதியியல் சீர்திருத்தம் – நிதியியல் பொறுப்பு மற்றும் வரவு செலவு நிர்வாக சட்டம் (FRBM Act) – நிதி ஆணையம்: மாநிலங்கள் மற்றும் நடுவண் அரசுக்கு இடையேயான வருவாய் பகிர்வு – நிதி ஆணையத்தின் அண்மைக்கால பரிந்துரைகள்; வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி: நில சீர்திருத்தம் – ஊரகக் கடன், நவீன வேளாண்மை நுணுக்கங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் – மின்னனு தேசிய வேளாண்மை சந்தையிடுதல் (e-NAM) – விலைக் கொள்கை – எம். எஸ். சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரைகள் – மானியங்கள் – வேளாண்மையை வணிகமயமாக்கல் மற்றும் பல்வகைப் படுத்தல் – ஊரக மேம்பாட்டுத் திட்டங்கள் – வறுமை ஒழிப்புத் திட்டங்கள் – தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (NREGS); உழைப்பாளர்: வேலைவாய்ப்பு – வகைகள் – துறைவாரி பரவல் – உழைப்பாளர் நல நடவடிக்கைகள் – இந்திய வேலைவாய்ப்பு பற்றிய பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் (ILO) அண்மைக்கால அறிக்கை (கண்ணோட்டம் மட்டும்); வறுமை மற்றும் மனித மேம்பாடு: சமமின்மை மதிப்பீடு மற்றும் வறுமை ஒழிப்பிற்கான நடவடிக்கைகள் – மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI), பாலின மேம்பாட்டுக் குறியீடு (GDI), பாலின மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் (GEM) மற்றும் மகிழ்ச்சிக் குறியீடு (HI); பன்னாட்டு வாணிபம்: உட்கூறுகள், போக்கு மற்றும் வர்த்தக அமைப்பு – அந்நிய நேரடி முதலீடு – வாணிப சமநிலை - செலுத்துநிலை சமநிலை – அந்நிய கடன்: நடப்பு நிகழ்வுகள்.

**ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (முதன்மை) தேர்வு- II (தொகுதி- II பணிகள்)**

**பொது அறிவு (பட்டப்படிப்பு தரம்)**

**தாள் II-ற்கான வினாத்தாள் அமைப்பு முறை**

**பகுதி- அ - 10 மதிப்பெண் வினாக்கள்**
**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்**

| அலகுவாரியாக பாடத்திட்டம் | வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண்கள் (10 மதிப்பெண்கள்) | ஒவ்வொரு விடைக்குரிய வார்த்தைகள் |
|---|---|---|---|
| அலகு I | 1 | 9 x 10=90 மதிப்பெண்கள் | 100 வார்த்தைகள் (9 x 100=900 வார்த்தைகள்) |
| அலகு III | 2 | | |
| அலகு IV | 1 | | |
| அலகு V | 3 | | |
| அலகு VI | 1 | | |
| அலகு VII | 1 | | |
| மொத்தம் | 9 | 90 மதிப்பெண்கள் | 900 வார்த்தைகள் |

**பகுதி- ஆ - 10 மதிப்பெண் வினாக்கள்**

**மொத்தமுள்ள ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

**தேர்வர்கள் இந்த அலகில் உள்ள வினாக்களுக்கு தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிக்கலாம்**

| அலகுவாரியாக பாடத்திட்டம் | வினாக்களின் எண்ணிக்கை | விடைளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண்கள் (10 மதிப்பெண்கள்) | ஒவ்வொரு விடைக்குரிய வார்த்தைகள் |
|---|---|---|---|---|
| அலகு II | 5 | 3 | 3x 10= 30 மதிப்பெண்கள் | 100 வார்த்தைகள் (3 x 100= 300 வார்த்தைகள்) |
| மொத்தம் | 5 | 3 | 30 மதிப்பெண்கள் | 300 வார்த்தைகள் |

**பகுதி- இ – 15 மதிப்பெண் வினாக்கள்**

**ஒவ்வொரு பிரிவிலும் மொத்தமுள்ள மூன்று வினாக்களில் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

| அலகு வாரியாக பாடத் திட்டம் | பிரிவு | மொத்த வினாக்களின் எண்ணிக்கை | விடைளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை | மதிப்பெண்கள் (15 மதிப்பெண்கள்) | ஒவ்வொரு விடைக்குரிய வார்த்தைகள் |
|---|---|---|---|---|---|
| அலகு I | A | 3 | 2 | 2x15= 30 | 200 வார்த்தைகள் (12 x 200= 2400 வார்த்தைகள்) |
| அலகு III | B | 3 | 2 | 2x 15= 30 | |
| அலகு IV | C | 3 | 2 | 2x 15= 30 | |
| அலகு V | D | 3 | 2 | 2x 15= 30 | |
| அலகு VI | E | 3 | 2 | 2x 15= 30 | |
| அலகு VII | F | 3 | 2 | 2x 15= 30 | |
| | மொத்தம் | 18 | 12 | 180 மதிப்பெண்கள் | 2400 வார்த்தைகள் |

## ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் (முதன்மை) தேர்வு – II (தொகுதி – IIA பணிகள்)

**குறியீடு: 583**

### பகுதி அ – பொது அறிவு (பட்டப் படிப்புத் தரம் – 150 கேள்விகள்)

### அலகு I: நவீன தமிழ்நாட்டின் வரலாறு, தமிழ்ச் சமூகம் – பண்பாடும் தொன்மையும் (30 கேள்விகள்)

ஐரோப்பியர்களின் வருகை – போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்ச்சுகாரர்கள் – ஆங்கிலேய-பிரெஞ்சு ஆதிக்கப் போட்டி – ஆங்கிலேய–மைசூர் போர் – ஆங்கிலேய–மராத்தியப் போர் – பாளையக்காரர்களின் கிளர்ச்சி – வேலூர்க் கலகம்; 18-ஆம் மற்றும் 19-ஆம் நூற்றாண்டின் சமூக-சமய சீர்திருத்தங்கள்: கிருத்துவ சமய இயக்கங்கள் – பிரம்ம சமாஜம் – ஆரிய சமாஜம் – பிரம்ம ஞானசபை – இராமகிருஷ்ணா மிஷன்; தமிழ்நாட்டில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் சீர்திருத்தங்கள்; தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டத்தின் எழுச்சி – சென்னைவாசிகள் சங்கம் – மெட்ராஸ் மகாஜன சபை – இந்திய தேசிய இயக்கம் – சுதேசி இயக்கம் – தமிழ்நாட்டின் மிதவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் – தன்னாட்சி இயக்கம் – ஒத்துழையாமை இயக்கம் – சட்ட மறுப்பு இயக்கம் – வெள்ளையனே வெளியேறு இயக்கம்; பண்டையத் தமிழ்ச் சமூகம் – தொல்லியல் அகழ்வாராய்ச்சி ஆதாரம் – அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், கீழடி – சங்க இலக்கியம் – சங்க காலம்; திருக்குறள் – மனிதநேயத்திற்கும் வாழ்க்கைமுறைக்கும் திருக்குறளில் உள்ள தத்துவச் சிந்தனைகள் – மானுட மேன்மைக்கான திருக்குறளின் கருத்துகள் – திருக்குறள் காட்டும் வாழ்க்கை நெறி – சமூக நெறி – மேலாண்மைச் சிந்தனைகள் உள்ளிட்ட பொதுக் கோட்பாடுகள்; விடுதலைப் போராட்டத்தில் தமிழர்களின் பங்கு: இலக்கியவாதிகள் – ஊடகவியலாளர்கள் – பெண்ணுரிமைச் செயல்பாட்டாளர்கள் –போராட்டங்களின் வகைகள் – புரட்சிப் பாடல்கள்; பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் சமூக-அரசியல் இயக்கங்கள்: நீதிக் கட்சி, பகுத்தறிவின் வளர்ச்சி – சுயமரியாதை இயக்கம் – திராவிட இயக்கம் – தனித் தமிழ் இயக்கம்; தமிழ்ச் சமூக சீர்த்திருத்த ஆளுமைகள்: தந்தை பெரியார், அறிஞர் அண்ணா உள்ளிட்ட அறிஞர்கள்.

### அலகு II: தமிழ்நாடு குறித்த பார்வையுடன் மாநில நிர்வாகம் (45 கேள்விகள்)

இந்திய அரசியலமைப்பு: முன்னுரை மற்றும் தத்துவ அம்சங்கள் – முக்கிய அம்சங்கள் மற்றும் ஆதாரங்கள் – ஒன்றியம், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள்; குடியுரிமை – அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், அரசின் வழிகாட்டி நெறிமுறை கோட்பாடுகள்; நடுவண் அரசு: குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் அமைச்சரவை குழு – நாடாளுமன்றம் (மக்களவை மற்றும் மாநிலங்களவை); மாநில அரசாங்கம்: முதலமைச்சர் மற்றும் அமைச்சரவைக் குழு – தமிழ்நாடு சட்ட மன்றம்: கட்டமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்; உள்ளாட்சி அமைப்புகள்: மூன்று அடுக்கு அமைப்பு – 73-வது மற்றும் 74-வது அரசியலமைப்புத் திருத்தங்கள் – தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1994 – கிராமசபை; தமிழ்நாடு நிர்வாகம்: இயல்பு, பரிணாம வளர்ச்சி, நிறுவன அமைப்பு மற்றும் செயல்பாடுகள் – தமிழ்நாடு நிர்வாகத்தின் முக்கிய அம்சங்கள் – தலைமைச் செயலகம், தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர்; மாவட்ட நிர்வாகம்: மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரின் பங்கு மற்றும் பணிகள்; தமிழ்நாடு அரசின் மின் ஆளுகை கொள்கை – தமிழக அரசின் மின்ஆளுகை மற்றும் அலைபேசி ஆளுகை துவக்கங்கள் – தமிழ்நாடு அரசின் சிறப்பு நிறுவனங்கள் மற்றும் முகமைகள்; தமிழ்நாடு அரசு வழங்கும் நலத்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் (1990 முதல்) – நோக்கங்கள், செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் – நலத் திட்டங்கள் மற்றும் மக்களின் சமூக–பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளின் தாக்கம்; நடப்பு நிகழ்வுகள்.

### அலகு III: வளர்ச்சியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் (20 கேள்விகள்)

அணுவும் அணுக்கரு இயற்பியலும் – அணு ஆற்றலின் பயன்பாடுகள் – மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் – ரோபோட்டிக்ஸ் மற்றும் அதன் பயன்பாடுகள்; மீநுண் தொழில் நுட்பம் (nanotechnology) மற்றும் அதன் பயன்பாடுகள்; மின்வேதிக் கலங்கள் – மின்கலங்கள் – வாயு எரிப்பொருட்கள் – LPG – பலபடிச் சேர்மங்கள் – கார்போஹைட்ரேட்டுகள் – வைட்டமின்கள் – எதிர் உயிரிகள்; GIS (ஜி.ஐ.எஸ்) ன் பயன்பாடுகள்; உயிர் தொழில் நுட்பம்: உயிர் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகள் – கோட்பாடுகள் – உபயோகப்படுத்தப்படும் கருவிகள் – தாவர மரபு பொறியியல் – கோட்பாடுகள் – மரபணு மாற்றுத் தாவரங்கள், உண்ணக்கூடிய தடுப்பூசிகள் (edible vaccines), பி.டி.பருத்தி (BT cotton), தங்க அரிசி (Golden rice) – மரபணு மாற்று தாவரங்களால் சமூகத்திலும் சூழலியலிலும் ஏற்படும் தாக்கம் – பயிர் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் உயிர் தொழில் நுட்ப முறைகள் – வனவியல், தோட்டக்கலையில் தாவர திசு வளர்ப்பின் பயன்பாடு – டி.என்.ஏ கைரேகை உத்தி (fingerprinting) – பாலிமரேஸ் சங்கிலி தொடர் வினை (PCR) – என்சைம் இணைக்கப்பட்ட இம்யுனோசார்பன்ட் (ELISA)

சோதனையை பயன்படுத்தி நோய்களைக் கண்டறிதல்: மேம்படுத்தப்பட்ட இனப்பெருக்க நுட்பங்கள்: செயற்கை சோதனை முறை கருவுறுதல் (IVF) – செயற்கை கருவூட்டல் – சோதனைக் குழாய் குழந்தை; தடுப்பூசிகள்: வகைகள் – மனிதர்களுக்கான தடுப்பூசி அட்டவணை; தமிழ்நாட்டு அறிவியலாளர்களின் பங்களிப்பு. எண்மக் கணினி அடிப்படைகள்: வன்பொருள் கூறுகள் – உள்ளீடு / வெளியீடு கருவிகள்; நினைவகங்களின் வகைகள்: RAM, ROM, PROM, EPROM, EEPROM; இரண்டாம் நிலை சேமிப்பு சாதனங்கள்: HDD, SDD, குறுவட்டு வகை – மையச் செயலகம் (CPU): கட்டுப்பாடு அலகு – கணக்கீடு மற்றும் தர்க்க அலகு – மென்பொருள் வகைகள்: முறைமை மென்பொருள்: செயல் முறைமை – விண்டோஸ் மற்றும் லினக்ஸ் முறைமை கட்டளைகள் – பயன்பாட்டு மென்பொருள்கள்: தரவு தள மேலாண்மை முறைமை (DBMS) – தரவு தள உருவாக்கம், வினவல்கள் – சொல் தொகுப்பி, விரிதாள், வழங்கல் மென்பொருள் – தகவல் தொடர்பு மென்பொருள்: உலாவி, மின்னஞ்சல்: அனுப்புதலும் பெறுதலும் ஆவணப்பகிர்வு மற்றும் கோப்புறை மேலாண்மை – கணினிவலையமைப்பு: வலைகளின் வகைப்பாடு –கட்டமைப்பியல் – பல் ஊடகம் மற்றும் பயன்பாடுகள்: படம், ஒலி, காணொளி கோப்பு வகைகள் – வலையமைப்புப் பாதுகாப்பு: பயனர் அங்கீகாரம்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு IV: தமிழ்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரச்சனைகள் (30 கேள்விகள்)**

தமிழ்நாட்டுப் பொருளாதாரம் – தன்மைகள் – மாநில நிதிநிலை அறிக்கை: முக்கிய வருவாய் இனங்களும் செலவினங்களும் – மாநில வருவாய் வகைகள் – மாநில பொருளாதார வளர்ச்சி: வேளாண்மை – தொழிற்துறை – சேவைத்துறை; வேளாண்மை: முக்கியப் பயிர்கள் – உணவு தானியங்கள் – பணப்பயிர்கள் – வேளாண்மையின் வகைகள் – இயற்கை வேளாண்மை – பிற வேளாண் முறைகள் – ஒப்பந்த வேளாண்மை – விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பு (FPO) – வேளாண் சந்தையிடுதல் – சந்தையிடுதலில் உள்ள பிரச்சனைகள் – இணையதள சந்தையிடுதல் – தமிழ்நாட்டின் வேளாண் வரவு செலவுத் திட்டமிடல் – தன்மைகள்; கல்வி: கல்வி அறிவின்மை – பள்ளி கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை விகிதம் (GER) – நடவடிக்கைகள் மற்றும் அண்மைப் புள்ளி விவரம் – மாணவர் நலத் திட்டங்கள் – கல்விக்கான அண்மைக்கால திட்டங்கள் – கல்வி மற்றும் சமூக வளர்ச்சிக்கிடையேயான தொடர்பு; வறுமையும் வேலை வாய்ப்பின்மையும்: தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பின்மை பிரச்சனைகள் – மாநில அரசின் வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்பு பெருக்க திட்டங்கள்; தொழிலாளர் இடப்பெயர்வு; மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் – பாலின விகிதம் – மக்கள் தொகை அடர்த்தி – மக்கள் தொகைப் பெருக்கத்திற்கான காரணங்கள் – மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்கள் – குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களும் அவற்றின் சாதனைகளும்; குழந்தை தொழிலாளர் பிரச்சனைகள்; நலவாழ்வு: முக்கியப் புள்ளி விவரங்கள் – அண்மைக்கால நலவாழ்வுத் திட்டங்கள். மகளிருக்கு அதிகாரமளித்தல்: குடும்ப வன்முறை – வரதட்சனை பிரச்சனைகள் – பாலியல் தாக்குதல் – சட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் – மகளிர் நலத்திட்டங்கள் – சுய உதவிக் குழுக்கள்; விளிம்பு நிலைக் குழுக்கள்: பிரச்சனைகள் – தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் – முதியோர்கள் – மாற்றுத் திறனாளிகள் – திருநங்கைகள் – மத சிறுபான்மையினர் – விளிம்பு நிலைக் குழுக்கள் மேம்பாட்டிற்கான மாநில அரசின் நலத் திட்டங்கள்; நடப்பு நிகழ்வுகள்.

**அலகு V: தமிழ் நாட்டுப் புவியியல், சுற்றுச்சூழல், பல்லுயிர் மற்றும் பேரிடர் மேலாண்மை (25 கேள்விகள்)**

புவியியல்: அமைவிடம் – நிர்வாகப் பிரிவுகள் – நிலப்பரப்பின் அம்சங்கள் – முதன்மை ஆறுகள்; காலநிலை: வெப்பநிலை, மழைப் பொழிவு மற்றும் பருவமழை; மண்: வகைகள் மற்றும் பரவல்; காடுகள்: வகைப்பாடு, பரவல், வன விலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் மற்றும் வனப் பொருட்கள்; கால்நடைகள்: கால்நடைகள் மற்றும் பால்வளம்; மீன் பிடித்தல்: நன்னீர் மற்றும் உவர்ப்பு நீர் மீன் பிடித்தல்; நீர்ப் பாசனம்: கால்வாய், குளம் மற்றும் கிணற்று நீர்ப்பாசனம், நீர்நிலை மற்றும் சிறு நீர் பாசன திட்டங்கள்; கனிமங்கள்: பரவல் மற்றும் உற்பத்தி – இரும்புத்தாது மற்றும் பாக்ஸைட்; ஆற்றல் வளங்கள்: நிலக்கரி மற்றும் பெட்ரோலியம்; தொழிற்சாலைகள்: இரும்பு மற்றும் எஃகு, நூற்பாலைகள், சிமெண்ட், தானியங்கி வாகனம், கரும்பு மற்றும் பருத்தி தொழிற் சாலைகள்; போக்குவரத்து: சாலை, இருப்புப்பாதை, வான்வழி மற்றும் கடல் போக்குவரத்து; சுற்றுச்சூழல்: தமிழ்நாட்டில் உள்ள சுற்றுச்சூழல் சிக்கல்கள் – மாசு – காற்று, நீர், மண், வெப்ப, கதிரியக்க, சத்தம்; இயற்கை வள வகைகள் – புதுப்பிக்கத்தக்க மற்றும் புதுப்பிக்க முடியாத ஆற்றல் வளங்கள்; பல்லுயிர் மற்றும் பாதுகாப்பு: வரையறை, வகைகள் – மரபியல், இனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பன்முகத்தன்மை – மதிப்பு – பல்லுயிர்க்கு அச்சுறுத்தல்கள் – இயல் வாழிடங்கள் அழிக்கப்படுதல், ஆக்கிரமிப்பு இனங்கள் மற்றும் மானுடவியல் நடவடிக்கைகள் – காலநிலை மாற்றம் மற்றும் காட்டுத் தீ. இனங்கள் அழிவின் காரணங்கள் மற்றும் விளைவுகள்; பல்லுயிர் பாதுகாப்பு: இருப்பிடம் சார்ந்த மற்றும் இருப்பிடம் சாராத – பல்லுயிர் பாதுகாப்பு உத்திகள் – மாநில பல்லுயிர் செயல் திட்டம் – தமிழ்நாட்டின் பல்லுயிர் முக்கியத்துவம் செறிந்த பகுதிகள்; நிலையான வளர்ச்சி – நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் மற்றும் குறிகள்; பசுமை ஆற்றல் – பாரிஸ் ஒப்பந்தம் மற்றும் COP28; பேரிடர் மேலாண்மை: பேரழிவு நிகழ்வுகளின் போக்குகளின் மேலோட்டப் பார்வை – வரையறைகள் மற்றும் வகைகள். தமிழ்நாட்டில் ஏற்படக்கூடிய இயற்கை பேரழிவுகள்; மானுடவியல் பேரழிவு – தமிழ்நாட்டின்

புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த சிக்கல்கள் – காலநிலை மாற்ற நிர்வாகம் – தணிப்பு மற்றும் தழுவல்கள் – மாநில காலநிலை மாற்றத்திற்கான செயல் திட்டம் – தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் – தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம் – தமிழ்நாட்டில் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பில் அரசு சாரா அமைப்புகள் மற்றும் குடிமை சமூக அமைப்புகளின் பங்கு; நடப்பு நிகழ்வுகள்.

**பகுதி ஆ – பொது நுண்ணறிவு மற்றும் பகுத்தறிவு**

**(பத்தாம் வகுப்பு தரம் – 50 கேள்விகள்)**

1. ஒத்த தன்மை
2. வகைப்படுத்துதல்
3. குறியீடுகளும் மறுகுறியீடுகளும்
4. உறவு சம்மந்தமான கணக்குகள்
5. புதிர்கள்
6. பகடை
7. திசை மற்றும் தூரம்
8. தர்க்க வெண் வரைபடங்கள்
9. தர்க்க ரீதியான எண் எழுத்து
10. எண் கணித பகுத்தறிவு
11. கூற்றின் உண்மைதன்மை சரிபார்த்தல்
12. ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்
13. நாட்காட்டி
14. வரிசை மாற்றங்கள் மற்றும் சேர்க்கைகள்
15. விடுபட்ட ஒன்றைத் தேர்வு செய்தல்
16. தர்க்கரீதியான பகுத்தறிவு
17. உருவ வரிசை
18. எண் செயல்பாடுகள்
19. குறியீட்டு செயல்பாடுகள்
20. வார்த்தை கட்டுமானம்
21. கூற்று மற்றும் முடிவு
22. முகவரியினைப் பொருத்துதல்
23. பிரதிபிம்பங்கள்
24. உட்பொதிந்த படங்கள்
25. காட்சிப் பகுத்தறிவு
26. உருவ வகைப்பாடு
27. சதுர நிறைவு

## பிற்சேர்க்கை IV

## தேர்வர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்

### 1. எழுத்துத் தேர்வு

#### 1.1. தேர்வு மையத்திற்கு வருகை புரியும் நேரம்

1.1.1. தேர்வு எழுத வரும் தேர்வர்களின் மெய்த்தன்மையை உறுதி செய்யவும், இதர தேர்வு விதிமுறைகளை தேர்வர்களுக்கு விளக்கும் விதமாகவும், தேர்வர்கள், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பாகவே தேர்வு மையத்திற்கு வருகை புரிதல் வேண்டும்.

1.1.2. தேர்வுமையத்தின் அனைத்து நுழைவாயில்களும் தேர்வு தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே மூடப்படும். அதன் பின்னர், வரும் எந்த ஒரு தேர்வரும் தேர்வுமையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.1.3. காலை மற்றும் பிற்பகல் ஆகிய இருவேளைகளில் நடைபெறும் தேர்வுகளில், பிற்பகல் தேர்விற்கு, தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே தேர்வர்கள் தேர்வுக்கூடத்துக்குள் வந்துவிட வேண்டும். அதன் பின்னர் வருகைபுரியும் எவரும் தேர்வுக்கூடத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

#### 1.2. தேர்வு மையத்திற்குள் அனுமதித்தல்

1.2.1. தேர்வர்கள், தேர்வாணைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதிச் சீட்டுடன் தேர்வு மையத்திற்கு வர வேண்டும். தவறும் பட்சத்தில், தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேர்வர்கள், தங்களது ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) / வாக்காளர் அடையாள அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை தேர்வுமையத்திற்கு கொண்டு வர வேண்டும்.

1.2.2. தேர்வர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் (அனுமதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ளபடி) மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். தேர்வு மையத்தை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. உரிய முன் அனுமதி இல்லாமல், தேர்வர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வுமையத்திற்குப் பதிலாக வேறொரு தேர்வு மையத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1.2.3. தேவைப்பட்டால், தேர்வு மையத்தில் காவல்துறையிலுள்ள ஆண் / பெண் காவலர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட நபர்கள் மூலமாக தேர்வர்கள், முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

1.2.4. தேர்வர்களுடன் வரும் பெற்றோர்கள் மற்றும் பிற நபர்கள், தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

#### 1.3. தேர்வுக் கூட அனுமதிச் சீட்டு

1.3.1. தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில், தேர்வரின் புகைப்படம் அச்சிடப்படவில்லை அல்லது தெளிவாக இல்லை அல்லது தேர்வரின் தோற்றத்துடன் பொருந்தவில்லை என்றாலோ, தேர்வர்கள் தன்னுடைய கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் ஒன்றினை ஒரு வெள்ளை காகிதத்தில் ஒட்டி, அதில் தனது பெயர், முகவரி, பதிவு எண் ஆகியவற்றை குறிப்பிட்டு, முறையாகக் கையொப்பமிட்டு, தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின் ஒளிநகல் மற்றும் ஆதார் அட்டை / கடவுச்சீட்டு (Passport) / ஓட்டுநர் உரிமம் / நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN Card) / வாக்காளர் அடையாள அட்டை, இவற்றில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகலை இணைத்து, அதனை தலைமைக் கண்காணிப்பாளரிடம் மேலொப்பமிடும் பொருட்டு சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தேர்வர்கள் தன்னுடைய அசல் அடையாள அட்டையை, சரிபார்ப்பு நோக்கத்திற்காக அறைக்கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அறைக் கண்காணிப்பாளர் தேர்வரின் மெய்த்தன்மையை உறுதி செய்த பிறகு, தேர்வர்களின் மெய்த்தன்மையை குறித்தும், தேர்வர்களால் அளிக்கப்பட்ட தகவல்கள் பின்னாளில் தவறானவை என கண்டறியப்படும் பட்சத்தில், தேர்வாணையம் எடுக்கும் எந்தவொரு குற்றவியல் அல்லது மற்ற நடவடிக்கைக்கும் பொறுப்பேற்பார் என்பது குறித்தும் ஓர் உறுதிமொழியினை தேர்வர்களிடமிருந்து பெற்று தலைமைக் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

1.3.2. தேர்வர்கள் தேர்வுக்கூடத்தில் அறைக்கண்காணிப்பாளர் / தலைமைக் கண்காணிப்பாளர் / ஆய்வு அலுவலர்கள் / அதிகாரம் அளிக்கப்பட்ட நபர்கள் எவரும் அனுமதிச்சீட்டினை ஆய்வுக்காக கேட்கும்பொழுது அவர்களிடம் காண்பிக்க வேண்டும்.

1.3.3. தேர்வர்கள் அனுமதிச்சீட்டினை தங்களது பாதுகாப்பில் நிரந்தரமாக வைத்துக் கொள்ளவேண்டும். தேர்வர்கள், தங்களது அனுமதிச்சீட்டினை தேர்வாணையத்தால் கோரப்படுகின்ற நேர்வுகளில், சமர்ப்பிக்க வேண்டும். தேர்வர்கள், அனுமதிச்சீட்டினை தேர்வுக்குப் பின்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஒளிநகல் எடுத்து தங்கள் வசம் வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வு அனுமதிச்சீட்டின் பிரதி வழங்கப்படமாட்டாது.

**1.4. தேர்வு அறை**

1.4.1. தேர்வர்கள் தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு அரைமணிநேரம் முன்பாகவே தேர்வு அறைக்குள் தங்களது இருக்கையில் அமர்ந்து விடவேண்டும்.

1.4.2. தேர்வறையின் இருக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு எண், பெயர், புகைப்படம் ஆகியவற்றை சரிபார்த்த பின்னரே, தேர்வர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர வேண்டும்.

1.4.3. தேர்வு அறைக்கு உள்ளே குடிநீர், தேநீர், காபி, சிற்றுண்டி, குளிர்பானங்கள் போன்றவை அனுமதிக்கப்பட மாட்டாது.

1.4.4. தேர்வு அறையில் மட்டுமின்றி, தேர்வு மைய வளாகத்திலும் தேர்வர்கள் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் தேர்வர்கள், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் தேர்வர்கள், வாக்குவாதத்தில் ஈடுபடும் தேர்வர்கள் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர், ஆய்வுக்குழுவினர் அல்லது தேர்வு எழுதவரும் மற்ற தேர்வர்களுடன் தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ, தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும்பொழுதோ, தவறாக நடக்கும் தேர்வர்களின் விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன், தேர்வாணையம் தக்கதெனக் கருதும்காலம் வரை தகுதிநீக்கம் செய்யப்படுவார். மேலும், அத்தேர்வர்கள் மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

1.4.5. உடல்நலக் குறைவுடன் தேர்வு எழுதவரும் தேர்வர்கள், தலைமைக் கண்காணிப்பாளரின் அனுமதி பெற்று அவர்களுக்குத் தேவையான மருந்து மற்றும் மருந்து உபகரணங்களைக் கொண்டு வந்து, அறைக் கண்காணிப்பாளரின் மேஜையில் வைத்து தேவைப்படும்பொழுது பயன்படுத்திக் கொள்ளலாம்.

1.4.6. எதிர்பாராத நிகழ்வுகளில், தொற்றுநோய் போன்ற காலங்களில் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள்/ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அதாவது தொற்று நீக்கி பயன்படுத்துவது, முகக்கவசம் அணிவது மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் போன்றவைகளை கடைப்பிடிக்கவேண்டும்.

**1.5. எச்சரிக்கை மணி**

தேர்வர்கள் நேரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு, கீழ்க்கண்ட ஒவ்வொரு நடவடிக்கைகளின் போதும் ஒரு எச்சரிக்கை மணி ஒலிக்கப்படும். தேர்வு அறைக்கண்காணிப்பாளர்களால் அவ்வப்பொழுது உரிய அறிவிப்புகள் வழங்கப்படும்.

| நிகழ்வு | கால வரிசை | மணி ஒலிக்கும் கால அளவு |
|---|---|---|
| **தேர்வு தொடங்குவதற்கு முன்** | | |
| **கொள்குறி வகை தேர்வு**<br>OMR விடைத்தாள்களை வழங்குதல் | 30 நிமிடங்களுக்கு முன்பாக | சிறு மணியோசை (2 நொடிகள்) |
| **விரிந்துரைக்கும் வகை தேர்வு**<br>வினாத்தாளுடன் கூடிய விடைப் புத்தகம் வழங்குதல் | 15 நிமிடங்களுக்கு முன்பாக | சிறு மணியோசை (2 நொடிகள்) |
| **தேர்வு தொடங்கும் பொழுது மற்றும் நடைபெறும்பொழுது** | | |
| தேர்வு எழுதத் தொடங்குதல் | நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் | நீண்ட மணியோசை (5 நொடிகள்) |
| தேர்வு நடைபெறும் பொழுது | ஒவ்வொரு ஒரு மணி நேரத்திற்கும் | சிறுமணியோசை (2 நொடிகள்) |
| தேர்வு முடிவடைவதற்கு முன் | தேர்வு முடிவடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக | சிறு மணியோசை (2 நொடிகள்) |
| **தேர்வு முடிவுறும் போது** | | |
| தேர்வு முடிவடைதல் | நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் | நீண்ட மணியோசை (5 நொடிகள்) |

**1.6. கொள்குறி வகைத் தேர்விற்கான அறிவுரைகள்**

1.6.1. தேர்வர்கள் தேர்வு அறைக்கு கருமை நிற மையுடைய பந்து முனை பேனா, குறிப்பிடப்பட்டுள்ள அடையாளச் சான்றாவணங்களில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகல் மற்றும் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு (Hall Ticket) ஆகியவற்றை மட்டுமே எடுத்து வர அனுமதிக்கப்படுவர். பிற பொருட்களுக்கு அனுமதி இல்லை.

**1.6.2. ஒளிக்குறி உணரி (OMR) விடைத்தாள்**


1.6.2.1. தேர்வுக்கூட அனுமதிச் சீட்டில் (Hall Ticket) குறிப்பிடப்பட்டுள்ளபடி, புகைப்படம், பெயர், பதிவு எண், பாடம், தேர்வு மையம் மற்றும் இடம், தேதி மற்றும் அமர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய அச்சிடப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட OMR விடைத்தாள், கொள்குறி வகை தேர்வு தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட நேரத்திற்கு முப்பது நிமிடங்களுக்கு முன்பாக விநியோகிக்கப்படும்.

1.6.2.2. OMR விடைத்தாளை பயன்படுத்துவதற்கு முன்பு, புகைப்படம் மற்றும் அதில் அச்சிடப்பட்ட விவரங்கள் தேர்வர்களால் சரிபார்க்கப்பட வேண்டும். தேர்வர்கள் OMR விடைத்தாளில் உள்ள விவரங்கள் அத்தேர்வரின் விவரங்கள் தான் என உறுதி செய்ய வேண்டும். ஏதேனும் விவரங்கள் தவறாகவோ அல்லது குறைபாடுடையதாகவோ கண்டறியப்பட்டால், அதை உடனடியாக அறை கண்காணிப்பாளரிடம் மாற்றுவதற்காக தெரிவிக்க வேண்டும். OMR விடைத்தாளினை பயன்படுத்திய பின்னர் மாற்றித் தரப்படமாட்டாது.

1.6.2.3. தேர்வர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சரியான முறையின்படி, OMR விடைத்தாளில் உள்ள வினாத்தாள் எண் மற்றும் பதில்களை கருமையாக்க வேண்டும்:




1.6.2.4. OMR விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள வட்டங்களில் தேர்வர்கள் பயன்படுத்தும் சரியான வினாத்தாள் எண்ணை அவர்களால் எழுதி கருமையாக்கப்பட வேண்டும். தேர்வரால் கருமையாக்கப்பட்ட வினாத்தாள் எண்ணே இறுதியானது. வட்டங்களில் தேர்வர்களால் கருமையிடப்பட்டிருக்கும் வினாத்தாள் எண்ணின் படியே அவர்களது OMR விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும். வினாத்தாள் எண்ணை கருமையிடுவதற்கான சரியான முறை கீழே விளக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, வினாத்தாள் எண் 1234 எனில்.




1.6.2.5. தேர்வர்கள், ஒவ்வொரு வினாவிற்கும் OMR விடைத்தாளில் ஒரு வட்டத்தை மட்டும் கண்டிப்பாக கருமையாக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்கள் கருமையாக்கப்பட்டிருந்தால், அவ்வினாவிற்கான விடை மதிப்பீடு செய்யப்படமாட்டாது.

1.6.2.6. தேர்வர்கள் விடைத்தாளில் 200 வினாக்களுக்கும் அது தொடர்பான விடைக்குரிய வட்டங்களை கண்டிப்பாக கருமையாக்க வேண்டும். தேர்வருக்கு ஏதாவது ஒரு வினாவிற்கு விடை தெரியவில்லை எனில், [E] என்ற வட்டத்தை கருமையாக்க வேண்டும். தேர்வர்கள் விடைத்தாளில் 200 வினாக்களுக்கும் அது


தொடர்பான விடைக்குரிய வட்டங்களை கருமையாக்கியிருந்தால் "ஆம்" என்ற வட்டத்தை கருமையாக்க வேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வினாக்களுக்கான விடைக்குரிய வட்டத்தை கருமையாக்காமல் காலியாக விடப்பட்டிருந்தால் "இல்லை" என்ற வட்டத்தை கருமையாக்குவதுடன் கருமையாக்கப்படாத வினாக்களின் மொத்த எண்ணிக்கையை கீழே குறிப்பிட்டுள்ள கட்டத்தில் எழுத வேண்டும்.


(IV) 200 வினாக்களுக்கும் அது தொடர்பான விடைக்குரிய வட்டத்தை கருமையாக்கி விட்டீர்களா ?
Have you darkened the respective answer bubble for all 200 questions?

| ஆம் / Yes | இல்லை / No |
|---|---|
| ○ | ○ |

'இல்லை' எனில், கருமையாக்கப்படாத வினாக்களின் மொத்த எண்ணிக்கையை எழுதவும்.
If 'No', write the total Number of Questions not darkened

1.6.2.7. தேர்வர்கள் OMR விடைத்தாளில் தங்கள் கையொப்பத்தை அதற்கென உள்ள இடத்தில் இட வேண்டும்.


(II) தேர்வரின் உறுதிமொழி / Declaration of the Candidate:

OMR விடைத்தாளின் பக்கம் -2ல் உள்ள அறிவுரைகளை படித்து அறிந்து கொண்டேன். மேலும், OMR விடைத்தாளில் உள்ள அனைத்து விவரங்களும் (கருமையாக்கப்பட்ட வினாத்தாள் தொகுப்பு எண் உட்பட) என்னால் சரிபார்க்கப்பட்டது.


I have read and understood the Instructions at Page-2 of this OMR answer sheet. Further, all the contents in this OMR answer sheet (including Question Booklet Number darkened) are verified by me.

தேர்வரின் கையொப்பம்
SIGNATURE OF THE CANDIDATE
(தேர்வர் கையொப்பமிடவில்லையெனில், விடைத்தாள் செல்லாததாக்கப்படும்)
(Answer sheet will be invalidated, if Not Signed by the Candidate)

1.6.2.8. தேர்வர்கள் தங்கள் இடது கை பெருவிரல் ரேகையை OMR விடைத்தாளில் அதற்கென உள்ள இடத்தில் பதிய வேண்டும்.


இடது கை பெருவிரல் ரேகை பதியவில்லையெனில் தேர்வர் பெறும் மொத்த மதிப்பெண்களிலிருந்து 0.5 மதிப்பெண் குறைக்கப்படும்.
0.5 mark will be deducted from total marks obtained by the candidate for not affixing Left Hand Thumb Impression.
(V) தேர்வரின் இடதுகை பெருவிரல் ரேகை மட்டும்.
Candidate's Left Hand Thumb Impression only.

1.6.2.9. அறை கண்காணிப்பாளர் வரிசை IA இல் உள்ள வட்டத்தை கருமை நிறமுடைய பந்து முனைப் பேனாவால் பின்வரும் விவரங்களுக்காக கருமையாக்க வேண்டும்:-



| ( I A ) TO BE DARKENED BY THE INVIGILATOR (with Black ink Ballpoint pen) | | |
|---|---|---|
| (a) Candidate's signature available in the space provided | YES ○ | NO ○ |
| (b) Candidate's Left Hand Thumb Impression available in the space provided | YES ○ | NO ○ |

**1.6.3. வினாத்தாள்**

1.6.3.1. வினாத்தாள், தேர்வு தொடங்குவதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர் வழங்கப்படும்.

1.6.3.2. OMR விடைத்தாளில் வினாத்தாள் எண்ணை எழுதி கருமையாக்குவதற்கு முன், அனைத்து வினாக்களும் எவ்வித விடுதல்களும் இன்றி அச்சிடப்பட்டுள்ளதா என்பதை தேர்வர் முதலில் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டால் அதனை உடனடியாக அறை

கண்காணிப்பாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, முழுமையான மாற்று வினாத்தாளை பெற்றுக்கொள்ளலாம். தேர்வு தொடங்கிய பின்னர் வினாத்தாளில் ஏதேனும் குறைபாடு கண்டறியப்பட்டு முறையிட்டால், வினாத்தாள் மாற்றித் தரப்பட மாட்டாது.

1.6.3.3. தேர்வர்கள் வினாத்தாளில் உள்ள விடைகள் குறித்து குறியீடு செய்யவோ அல்லது குறிக்கவோ கூடாது. இந்த அறிவுறுத்தலைப் பின்பற்றத் தவறினால், தேர்வரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

**1.6.4. வருகைப் பதிவேடு**: OMR விடைத்தாள் மற்றும் வினாத்தாளில் ஏதேனும் முரண்பாடுகள் உள்ளதா என சரிபார்த்த பிறகு, தேர்வர்கள் வருகைப் பதிவேட்டில் தங்கள் பெயர் மற்றும் பதிவு எண்ணைச் சரிபார்த்து, வினாத்தாள் எண்ணை முறையாகக் குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும்.

1.6.5. கொள்குறி வகைத் தேர்வுகள் எழுதும் தேர்வர்களுக்கான விதிமுறைகள் தொடர்பான அறிவுரைகள் அடங்கிய காணொளி https://tnpsc.gov.in/English/omr-guidelines.html இல் உள்ளது.

**1.7. கணினிவழித் தேர்வு (Computer Based Test)**

1.7.1. தேர்விற்கான பதிவு செய்தல், தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்னதாகத் தொடங்கும்.

1.7.2. தேர்வெழுதும் ஒவ்வொரு தேர்வருக்கும் ஒரு கணினி ஒதுக்கப்படும்.

1.7.3. கணினிவழித் தேர்விற்கு, சுட்டியினை எவ்வாறு பயன்படுத்துவது என்று தெரிந்தாலே போதுமானது. கணினியறிவு அவசியமில்லை.

1.7.4. தேர்வர்களுக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியன வழங்கப்படும். அவற்றைப் பயன்படுத்தி கணினியில் புகுபதிகை (login) செய்ய வேண்டும்.

1.7.5. பதிவு எண், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஆகியவற்றுக்கு மட்டும் விசைப் பலகையைப் பயன்படுத்தவும்.

1.7.6. தேவையான அறிவுரைகள் திரையில் தோன்றும். அனைத்து அறிவுரைகளையும் கவனமாகப் படித்து அவற்றை தவறாது பின்பற்றவும்.

1.7.7. கணினிவழித் தேர்வில், ஒவ்வொரு வினாவும் ஐந்து விடைகளுடன் திரையில் காட்டப்படும்.

1.7.8. ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

1.7.9. வினாக்களானது ஏறுமுக வரிசைப்படி ஒவ்வொன்றாக கணினித் திரையில் தோன்றும். அதற்கு ஒன்றன் பின் ஒன்றாக விடையளிக்கவும்.

1.7.10. தேர்வர்கள் சுட்டியைப் பயன்படுத்தி சரியான விடையினைத் தேர்ந்தெடுக்கலாம் மற்றும் வினாக்களுக்கு பதிலளிப்பதைத் தொடரலாம்.

1.7.11. ஒரு வினாவிற்கான விடையைத் தேர்வு செய்ய அதற்கென அளிக்கப்பட்டுள்ள விடைத் தெரிவுகளில் ஒன்றின் மீது சொடுக்கவும்.

1.7.12. ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்த பின் உங்கள் விடையை சேமிக்க Save and Next பட்டன் மீது கிளிக் செய்யவும். அவ்வாறு செய்யாவிட்டால், உங்கள் விடைகள் சேமிக்கப்பட மாட்டாது.

1.7.13. நீங்கள் தேர்ந்தெடுத்த விடைத்தெரிவை நீக்க வேண்டுமெனில், தேர்ந்தெடுத்துள்ள விடைத்தெரிவின் மீதுள்ள பொத்தானை சொடுக்கவும் அல்லது Clear Response பொத்தான் மீது சொடுக்கவும்.

1.7.14. தேர்வர்கள் வினாவிற்கு உரிய மிகச் சரியான விடையினைச் சொடுக்க வேண்டும். தேர்வர்கள், 'next' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் அடுத்த கேள்விக்கு செல்லலாம் அல்லது 'previous' என்ற பொத்தானை சொடுக்குவதன் மூலம் முந்தைய கேள்விக்கு செல்லலாம்.

1.7.15. தேர்வர்கள் எந்த ஒரு வினாவினையும் பார்வையிடலாம், தேர்வு முடியும் நேரத்திற்கு முன் எப்போது வேண்டுமானாலும் விடையினை மாற்றலாம், அவர்கள் விரும்பினால், சில கேள்விகளுக்கு விடையளிக்காமல் அடுத்த கேள்விக்கும் செல்ல முடியும்.

1.7.16. தேர்வர்கள் தேர்வு நேரத்திற்குள் எப்பொழுது வேண்டுமானாலும் தங்களது விடைகளை சமர்ப்பிக்கலாம்.


1.7.17. விடைகளைச் சமர்ப்பித்த பின்னர், தேர்வர் மேலும் தேர்வினைத் தொடர வாய்ப்பில்லை.

1.7.18. தேர்வர்கள் தங்கள் விடையினைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், தேர்வு முடியும் நேரத்தில் தானாகவே விடைகள் சமர்ப்பிக்கப்பட்டு விடும்.

1.7.19. பார்வைக் குறைபாடுள்ளவர்கள், கேள்வி மற்றும் விடைகளின் எழுத்து வடிவங்களைத் தேவைக்கேற்ப பெரிதாக்கிக் கொள்ள முடியும்.

1.7.20. வினாவில் வழங்கப்பட்டுள்ள படத்தை பெரிதாக்கிப் பார்க்க, படத்தின் மீது சொடுக்க செய்து கணினிச்சுட்டியில் (Mouse) உள்ள சக்கரத்தை சுழற்றவும்.

1.7.21. கேள்வி எண் பெட்டி: திரையின் வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கேள்வி எண் பெட்டியானது பின்வரும் குறியீடுகளில் ஒன்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு கேள்வியின் நிலையையும் காண்பிக்கும்.




'Marked for Review' என்கிற நிலையில் உள்ள கேள்விகளை மீண்டும் ஒரு முறை நீங்கள் சரிபார்க்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றன.

கேள்வி எண் பெட்டியின் இடது பக்கத்தில் தோன்றும் ">" அம்புக்குறியைக் கிளிக் செய்வதன் மூலம் கேள்வி எண் பெட்டியின் அளவை நீங்கள் குறைக்கலாம். இதன் மூலம் திரையில் உங்கள் கேள்வியை பெரிதாக்கிப் பார்க்கலாம். கேள்வி எண் பெட்டியை மீண்டும் பார்க்க விரும்பினால், திரையின் வலதுபுறம் உள்ள " < " அம்புக்குறி மீது சொடுக்கவும்.

உங்கள் கேள்விப் பகுதியை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ சக்கரத்தை சுழற்றும் செய்யாமலேயே பார்க்க விரும்பினால் மற்றும் . ஆகிய குறிகளைப் பயன்படுத்தலாம்.

1.7.22. தேர்வு எழுதுவதற்கான கால அளவானது, திரையின் மேல் வலது மூலையில் உள்ள count down timer மூலம் காண்பிக்கப்படும். இது மீதமுள்ள நேரத்தை Time Left: என காண்பிக்கும். (உதாரணமாக தேர்விற்கான கால அளவானது 3 மணி நேரமாக இருப்பின், தேர்வின் தொடக்கத்தில், timer 180 நிமிடங்களைக் காண்பிக்கும் மற்றும் தேர்வில் உதவியாளருடன் / உதவியாளரின்றி வரும் தகுதியான மாற்றுத் திறனாளி தேர்வர்களுக்கு 240 நிமிடங்கள் என காண்பிக்கும். இக்கால அளவானது படிப்படியாகக் குறையும்). Timer பூஜ்ஜியத்தை அடையும்போது, தேர்வு தானாகவே முடிவடையும், அதன்பிறகு உங்கள் தேர்வானது கணினி அமைப்பால் தானாகவே சமர்ப்பிக்கப்படும்.

1.7.23. தேர்வர் ஒவ்வொருவருக்கும், வழிமுறைகளுக்காக பயன்படுத்தும் (Rough Work) பொருட்டு தனித்தாள் வழங்கப்படும். தேர்வு முடிவுற்ற பின் தனித்தாள் திரும்பப் பெறப்பட்டு விடும்.

1.7.24. தேர்வர்கள் தங்களது அடையாளத்தை உறுதி செய்ய, வருகைத் தாளில் கையொப்பமிட்டு பெருவிரல் ரேகையினைப் பதிவு செய்ய வேண்டும்.

1.7.25. தேர்வறை கண்காணிப்புக் கருவி மூலம் கண்காணிக்கப்படும்.

1.7.26. தேர்வர்கள் ஏதேனும் முறைகேட்டில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கை / தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

1.7.27. வினா விடைகளில் சந்தேகம் இருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினா விடைகளே இறுதியானது.

1.7.28. தேர்வாணைய இணையதளம் (www.tnpsc.gov.in) –ல் உள்ள மாதிரி தேர்வினை பழகுவதன் மூலம், கணினி வழித் தேர்வில், சுட்டியைக் கையாளும் முறையினை அறிந்து கொள்ளலாம். மாதிரி தேர்வு என்பது, தேர்வு நாளன்று நடைபெறும் கணினி வழியில் நடைபெறும் இணையத் தேர்வு போன்றது. மாதிரித் தேர்வில் படிப்படியான அனைத்து விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளது. தேர்வர்கள் மாதிரித் தேர்வினை எத்தனை முறை வேண்டுமானாலும் பழகிக் கொள்ளலாம்.

**1.8. விரிந்துரைக்கும் வகைத் தேர்விற்கான விதிமுறைகள்**

1.8.1. தேர்வர்கள், தேர்வு அறைக்கு கருப்புமை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா), அனுமதிச்சீட்டு மற்றும் குறிப்பிடப்பட்ட அடையாள சான்றாவணங்களில் ஏதேனும் ஒன்றின் ஒளிநகல் ஆகியவை மட்டுமே எடுத்துவர அனுமதிக்கப்படுவர். மற்ற பொருட்களுக்கு அனுமதி இல்லை.

1.8.2. தேர்வு தொடங்க திட்டமிடப்பட்ட நேரத்திற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வினாக்களுடன் கூடிய விடைத்தாள் தொகுப்பு மற்றும் அதனை நிரப்புவது தொடர்பான அறிவுரைகள் வழங்கப்படும்.

1.8.3. தேர்வர்கள் வினாத்தாளுடன் கூடிய விடைப்புத்தகத்தில் விடையளிக்க வேண்டும்.

1.8.4. தேர்வர் வருகைத்தாளில் தனது பெயர், பதிவெண் உள்ளதை உறுதி செய்து, தன்னுடைய வினாக்களுடன் கூடிய விடைத்தாள் தொகுப்பு எண்ணையும் குறிப்பிட்டு, கையொப்பத்தினை இடவேண்டும்.

1.8.5. வினா எண் மற்றும் அதில் எழுதப்பட்ட விடைகள் அல்லது வினா மற்றும் எழுதப்பட்ட விடை தொடர்பற்றதாக இருந்தாலும் அல்லது தேர்வர் வினா எண்ணில் ஏதேனும் திருத்தம் செய்து இருந்தாலும் அந்த விடை திருத்தப்பட மாட்டாது.

1.8.6. தேர்வரது ஒரு பாடத்தாளுக்கான விடைப்புத்தகம் மதிப்பீடு செய்ய தகுதியற்றது என கருதப்படுவதாக அறிவிக்கப்படுமாயின், தேர்வரது அத்தேர்விற்கான மீதமுள்ள பாடத்தாள்களின் விடைப்புத்தகங்களும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது.

1.8.7. வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1.8.8. தேர்வர்கள் சகதேர்வர்களிடமிருந்து எந்தப் பொருளையும் வாங்க தடை செய்யப்பட்டுள்ளது. தேர்வுக்கு குறிப்பாக அனுமதிக்கப்பட்ட பேனா மற்றும் பொருட்களைத் தாங்களே கொண்டு வந்து உபயோகிக்க வேண்டும்.

1.8.9. தேர்வர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் அதிகப்படியான நேரம் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

1.8.10. தேர்வரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு அவர்கள் எழுத்துத் தேர்விற்கான அனைத்து பாடத்தாள்களுக்கும் வருகை புரிந்திருக்க வேண்டும் மற்றும் தேர்வர் ஏதேனும் ஒரு தேர்வுத் தாளுக்கு வருகை புரியவில்லை என்றாலும் அவர்கள் கலந்து கொண்ட அத்தேர்விற்கான மற்ற பாடத்தாள்களின் விடைத்தாள்களும் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

**1.9. எழுத்துத் தேர்விற்கான பிற அறிவுரைகள்**

1.9.1. எந்த ஒரு தேர்வரும் தேர்வு முடிவடைவதற்குள் தேர்வுக் கூடத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்.

1.9.2. புகைப்படக்காரர் தேர்வரின் முகம் மற்றும் பதிவெண்ணினை மேசை மீதிலோ அல்லது நுழைவுச் சீட்டிலோ காணொளி படம் எடுக்க முற்படும்போது தேர்வர் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

1.9.3. ஒரு பதவிக்கான தெரிவுப் பணிகள் முற்றிலுமாக முடியும் முன்னர், தங்களது முதல்நிலைத் தேர்வு மதிப்பெண்கள், விடைத்தாள் நகல் அளிக்குமாறு கோரும் தேர்வர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

1.9.4. தேர்வு நடவடிக்கைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், தேர்வர்களின் விடைத்தாள் தேர்வாணைய இணையதளத்தில் கிடைக்கப் பெறும். உரிய கட்டணம் செலுத்தி தேர்வர்கள் அவர்களது விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### 1.10. பதிலி எழுத்தர்கள் (Scribes) மற்றும் கூடுதல் நேரம் பயன்படுத்துதல் தொடர்பான அறிவுரைகள்

#### 1.10.1. மாற்றுத்திறனாளி தேர்வர்கள்

1.10.1.1. இணையவழி விண்ணப்பத்தில் பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள கோரும் மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதிலி எழுத்தர்கள் அனுமதிக்கப்படுவர். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னரோ அல்லது தேர்வு நடைப்பெறும் நாளன்றோ பதிலி எழுத்தர் வேண்டும் என்று கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1.10.1.2. மாற்றுத் திறனாளிகள் என்று மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன் பிரிவு 2(s)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, வேகம் உட்பட எழுதுவதில் சிரமம் காரணமாக தேர்வு எழுதுவதற்கு பதிலி எழுத்தர் தேவை எனக் கோரும் மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பதிலி எழுத்தர் மற்றும் கூடுதல் நேரத்திற்காக பிற்சேர்க்கை V-ல் உள்ளவாறு மருத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட சான்றினைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகள் பிற்சேர்க்கை II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் பிற்சேர்க்கை V-ல் உள்ளவாறு மருத்துவ குழுவால் வழங்கப்பட்ட சான்றினை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

#### 1.10.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள்

1.10.2.1. இணையவழி விண்ணப்பத்தில் பதிலி எழுத்தரின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ள கோரும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பதிலி எழுத்தர்கள் அனுமதிக்கப்படுவர். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும் நாளன்றோ பதிலி எழுத்தர் வேண்டும் என்று கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

1.10.2.2. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் என்று மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016-ன் பிரிவு 2(r)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, பார்வைத்திறன் குறைபாடு, இயக்கக் குறைபாடு (இரண்டு கைகள் பாதிப்படைந்த) மற்றும் பெருமூளை வாதம் வகையினை சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் கோரினால் பதிலி எழுத்தருக்கான வசதி செய்து தரப்படும். அவர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் கூடுதலாக பதிலி எழுத்தரை பயன்படுத்தினாலும் / பயன்படுத்தாவிட்டாலும் வழங்கப்படும். மேற்கண்ட நிர்ணயிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பிற்சேர்க்கை II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.10.2.3. பிற வகையைச் சார்ந்த நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் வேகம் உட்பட எழுதுவதில் சிரமம் காரணமாக தேர்வு எழுதுவதற்கு பதிலி எழுத்தர் தேவை என்பதற்காக பிற்சேர்க்கை V-ல் உள்ளவாறு தலைமை மருத்துவ அலுவலர் / அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றினை சமர்ப்பித்தால் பதிலி எழுத்தர் வசதி செய்து தரப்படும். ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் என 3 மணி நேர தேர்விற்கு கூடுதலாக 1 மணி நேரம் பதிலி எழுத்தர் வசதியை பயன்படுத்தும் தேர்வருக்கு வழங்கப்படும். அத்தகைய தேர்வர்கள் பிற்சேர்க்கை II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் பிற்சேர்க்கை V-ல் உள்ளவாறு தலைமை மருத்துவ அலுவலர் / அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.10.2.4. வேகம் உட்பட எழுதுவதில் சிரமம் உடைய குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள் பதிலி எழுத்தர் உதவியினை கோராத நிலையிலும் கூடுதல் நேரம் கோரி தலைமை மருத்துவ அலுவலர் / அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றினை சமர்ப்பித்தால் தேர்வு எழுதுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு 20 நிமிடங்கள் என 3 மணி நேரத் தேர்விற்கு கூடுதலாக 1 மணி நேரம் வழங்கப்படும். அத்தகைய தேர்வர்கள் பிற்சேர்க்கை II-ல் உள்ளவாறு மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் பிற்சேர்க்கை V-ல் உள்ளவாறு தலைமை மருத்துவ அலுவலர் / அறுவைசிகிச்சை நிபுணர் / அரசு சுகாதார நிறுவனத்தில் தலைமை கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழை இணையவழியில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1.10.3. பதிலி எழுத்தரை தேர்வாணையமே நியமிப்பதுடன் அவர்களுக்கான கட்டணம் தேர்வாணையத்தால் வழங்கப்படும். பதிலி எழுத்தரின் பணியினை பயன்படுத்திக் கொள்ளும் தேர்வர்கள் பதிலி எழுத்தருக்கென தனியே எந்தத் தொகையும் செலுத்தத் தேவையில்லை.

1.10.4. குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள், பதிலி எழுத்தருடன் தேர்வு எழுதுவதற்கென தேர்வுக்கூடத்தின் தரைத்தளத்தில் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டு அறைக்கு அருகில் உள்ள அறையில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

**1.11. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கான சிறப்பு அறிவுரைகள்**

1.11.1. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள், விடைத்தாளில் தங்களது கையொப்பம் மற்றும் இடதுகை பெருவிரல் ரேகை அடையாளம் ஆகியவற்றை அவற்றிற்கென கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் (முடியும் பட்சத்தில்) இடவேண்டும். பதிலி எழுத்தரைக் கொண்டு தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட பார்வை குறைபாடுடைய / இயக்க குறைபாடுடைய தேர்வர்கள், தங்களது கையொப்பமிட இயலாவிடில் இடது கைபெருவிரல் பதிவினை மட்டும் பதிவிடலாம். இடது கையைப் பயன்படுத்த இயலாத மாற்றுத்திறனாளி தேர்வர்கள், தங்களது வலது கையின் பெருவிரல் ரேகை பதிவினை வைக்க வேண்டும். இரண்டு கைகளையும் பயன்படுத்த இயலாத மாற்றுத்திறனாளி தேர்வர்கள், கையொப்பம் மற்றும் பெருவிரல் ரேகைப் பதிவினை வைக்க வேண்டிய இடங்களை காலியாக விட்டு விடலாம்.

1.11.2. மாடிப்படி ஏற இயலாத நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளி தேர்வர்கள், தேர்வுக்கூடத்தின் தரைத்தளத்தில் தலைமைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டு அறைக்கு அருகில் உள்ள அறையில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

**1.12. தேர்வாணைய அறிவுரைகளை மீறுதலுக்கான தண்டனை**

கீழ்க்கண்ட விதிமுறை மீறல்களுக்காக தேர்வர்களின் விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும் / மதிப்பெண் குறைக்கப்படும் / குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் / தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர்.

**1.12.1. கொள்குறி வகை விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல்**

1.12.1.1. கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனா தவிர மற்ற நிற மையுடைய பேனாவைப் பயன்படுத்துவது.

1.12.1.2. தேவையற்ற மற்றும் பொருத்தமற்ற குறிப்புகள்/குறியீடுகள் மேற்கொள்வது.

1.12.1.3. OMR விடைத்தாளின் பக்கம்-1ல் அதற்குரிய இடத்தில் தேர்வர் கையொப்பமிடவில்லை எனில்.

1.12.1.4. தேர்வருக்கு வழங்கப்பட்ட வினாத்தாளில் அச்சிடப்பட்டுள்ள வினாத்தாள் எண்ணினை OMR விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாத்தாள் எண்ணிற்கான வட்டங்களை சரியாக கருமையாக்காமல் இருந்தால் / ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களோ நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தால்.

**1.12.2. விரிந்துரைக்கும் வகை விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல்**

1.12.2.1. தேர்வர் கருமை நிற மை கொண்ட பேனாக்களைத் தவிர மற்ற பேனாக்களை உபயோகித்தல், தேர்வர் விடைப்புத்தகம் முழுவதும், அதாவது தேர்வு எண்ணை எழுதுதல், முதல் பக்கத்தில் கையொப்பமிடுதல், விடை எழுதுதல், படம் வரைதல், அடிக்கோடிடுதல், மேற்கோள் காட்டுதல், விடைப்புத்தகத்தில் பயன்படுத்தாத இடங்களை / தேவையான எண்ணிக்கைக்கு அதிகமான விடைகளை அடித்தல் (Strike-off), போன்றவற்றுக்கு ஒரேவகையான கருப்புநிற மை பேனாவை (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா), மட்டுமே உபயோகிக்க வேண்டும். தேர்வர்கள் மேற்கூறிய தேவைகளுக்கு, ஒரேவகை கொண்ட கருப்புநிற மை பேனாக்களை போதுமான எண்ணிக்கையில் வைத்திருக்க வேண்டும்.

1.12.2.2. தேர்வர் தேர்வு எழுதும்போது whitener, sketch pens, பென்சில், வண்ணப் பென்சில்கள், வண்ண மைப்பேனா, crayons போன்றவைகளை உபயோகப்படுத்துதல்.

1.12.2.3. வினாத்தொகுப்பு / விடைப்புத்தகத்தில் குறிப்பாக அறிவுறுத்தப்பட்ட இடங்களை தவிர பெயர் மற்றும் விவரங்களை மற்ற இடங்களில் எழுதுதல், மதக் குறியீட்டினை எழுதுதல், தேர்வரின் பெயர் எழுதுதல், கையொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் (Cell Phone No.), வேறு ஏதேனும் பெயர்களை எழுதுதல், சுருக்கொப்பம் அல்லது முகவரி ஆகியவற்றை எழுதுதல்.

1.12.2.4. தேர்வர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைப்புத்தகத்தில் தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் எழுதுதல்.

1.12.2.5. தேர்வர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு சம்பந்தமில்லாத ஏதாவது கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுதல்.

1.12.2.6. குறிப்பிட்டு அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளைத் தவிர, தேர்வர்கள் ஒருபகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதுவது. தேர்வர்கள் தமிழில் விடை எழுதினால், அத்தேர்வில் எல்லா விடைகளையும் தமிழில் மட்டுமே எழுத வேண்டும் அல்லது ஆங்கிலத்தில் எழுதினால், எல்லா விடைகளையும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுத வேண்டும். எனினும், மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம், மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழி மாற்றி எழுதக் கூடாது. இவ்வறிவுரையை மீறும் தேர்வர்களின் விடைப்புத்தகம் செல்லாததாக்கப்படும்.

1.12.2.7. பிறதேர்வர்களின் இருக்கையில் தவறாக அமர்ந்து தேர்வு எழுதுதல் / பிற தேர்வர்களின் விடைப்புத்தகத்தைப் பயன்படுத்துவது.

1.12.2.8. வினாக்களுடன் கூடிய விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக்குறியீடு சேதப்படுத்தப்பட்டிருத்தல்.

1.12.2.9. வினாத்தாளுடன் கூடிய விடைத்தொகுப்பில் உரிய இடங்களில் தேர்வர் கையொப்பமிடாத நேர்வுகளில்.

**1.12.3. கொள்குறி வகைத் தேர்விற்கான மதிப்பெண் குறைத்தல்**

1.12.3.1. விடைத்தாளில் எந்தவொரு வினாவிற்கும் அது தொடர்பான எந்த ஒரு வட்டத்தையும் கருமையாக்காதிருத்தல் (அதாவது வட்டம் காலியாக விடப்பட்டால்) தேர்வர் பெறும் மொத்த மதிப்பெண்களிலிருந்து 0.5 மதிப்பெண் குறைக்கப்படும்.

1.12.3.2. OMR விடைத்தாளின் பக்கம் 1 இல் வழங்கப்பட்ட இடத்தில் இடது கை பெருவிரல் ரேகை பதிய வேண்டிய இடத்தில் பதியாதிருந்தால், தேர்வர் பெறும் மொத்த மதிப்பெண்களிலிருந்து 0.5 மதிப்பெண் குறைக்கப்படும்.

**1.12.4. குற்றவியல் நடவடிக்கை:**

கீழ்க்கண்ட விதிமீறல்களுக்காக தேர்வர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்

**1.12.4.1. தேர்வுக்கூடத்தில் தேர்வர்களின் தவறான நடத்தை மற்றும் ஒழுங்கீனச் செயல்:** தேர்வு அறையில் மட்டுமின்றி, தேர்வு மைய வளாகத்திலும் தேர்வர்கள் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைபிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் தேர்வர்கள், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் தேர்வர்கள், வாக்குவாதத்தில் ஈடுபடும் தேர்வர்கள் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர், ஆய்வுக்குழுவினர் அல்லது தேர்வு எழுதவரும் மற்ற தேர்வர்களுடன் தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ, தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும்பொழுதோ, தவறாக நடக்கும் தேர்வர்களின் விடைத்தாள் / வினாத்தாளுடன் கூடிய விடைத்தொகுப்பு மதிப்பீடு செய்யப்பட மாட்டாது மற்றும் தேர்வாணையம் தக்கதென கருதும்காலம் வரை தகுதிநீக்கம் செய்யப்படுவார். மேலும், அத்தேர்வர் மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

1.12.4.2. ஆள்மாறாட்டம் மற்றும் தேர்வுக்கூடத்திற்குள் அல்லது வெளியே விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவது உள்ளிட்ட எவ்வித முறைகேட்டிலும் ஈடுபடும் பட்சத்தில் குற்றவியல் நடவடிக்கை எடுப்பதுடன் தேர்வாணையத்தால் தக்கதெனக் கருதப்படும் காலம்வரையில் தேர்வு எழுதுவதிலிருந்து தேர்வர்கள் விலக்கி வைக்கப்படுவார்.

1.12.5. கீழ்க்காணும் நடவடிக்கைகள் உட்பட, தேர்வு மையத்திலோ அல்லது வெளியிலோ ஈடுபடும் விரும்பத்தகாத அல்லது ஒழுங்கீனச் செயல்களுக்கு அல்லது தீய நடவடிக்கைகளுக்கு விடைத்தாள் / வினாத்தாளுடன் கூடிய விடைத்தொகுப்பு செல்லாததாக்கப்படுவதுடன், தேர்வாணையம் தக்கதெனக் கருதும்காலம் வரை தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவார்.

(அ) தேர்வுக்கூடத்தில் மற்ற தேர்வர்களுடன் கலந்தாலோசித்தல் / மற்ற தேர்வர்களின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுவது.

(ஆ) தன்னுடைய வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள் / வினாத்தாளுடன் கூடிய விடைப்புத்தகத்தினை பார்த்து எழுத, மற்ற தேர்வர்களை அனுமதித்தல்.

(இ) புத்தகம் அல்லது அச்சிடப்பட்ட / தட்டச்சு செய்யப்பட்ட மற்றும் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் ஆகியவற்றைப் பார்த்து எழுதுதல்.

(ஈ) தேர்வுக்கூடத்தில் தேர்வர்கள் வினாக்களுக்கான விடைகள் தொடர்பாக, அறைக்கண்காணிப்பாளரையோ அல்லது வேறு அலுவலரின் உதவியையோ நாடுதல்.

(உ) தேர்வர்கள், தேர்வாளரை அணுகுதல் அல்லது அதற்கு முயற்சி செய்தல் அல்லது மற்றவர் மூலம் தேர்வாளரை அணுகுதல்.

(ஊ) அலைபேசி (செல்லுலார்போன்), நினைவூட்டுக் குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரங்கள் மற்றும் மோதிரங்கள் அல்லது வேறுவகை மின்னணு / மின்னணு சாராத சாதனங்களான P & G Design Data Book, புத்தகம், குறிப்புகள், கைப்பைகள் ஆகியவற்றை தேர்வர்கள் தேர்வு அறைக்குள் வைத்திருத்தல்.

(எ) தேர்வுக்கூடத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட / பயன்படுத்தப்படாத வினாத்தாள்/ வினாத்தாளுடன் கூடிய விடைப் புத்தகத்தினை முழுமையாகவோ / பகுதியாகவோ அறைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் செல்லுதல்.

(ஏ) OMR விடைத்தாள் / வினாத்தாளுடன் கூடிய விடைப்புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பட்டைக் குறியீடு சேதப்படுத்துதல்.

1.12.6. தேர்வாணைய விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள், அறிவிக்கை, தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டவற்றை மீறினால், தேர்வர் நிரந்தரமாகவோ அல்லது தேர்வாணையத்தால் தக்கதென கருதப்படும் காலம் வரையிலோ விலக்கி வைக்கப்படுவதுடன் அவர்தம் விண்ணப்பமும் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படலாம். மேலும், அவரது விடைத்தாள் செல்லாததாக்கப்படலாம் அல்லது தேர்வாணையத்தால் விதிக்கப்படும் வேறு ஏதேனும் அபராதத்திற்கும் உள்ளாவர்.

**1.12.7. தகுதி நீக்கம்:**

குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட தேர்வர்கள் தேர்வாணையத்தின் தேர்வுகள் / தெரிவுகளில் கலந்து கொள்வதிலிருந்து விலக்கி வைக்கப்படும் கால அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், தேர்வர்களின் விண்ணப்பங்கள் உரிய நடைமுறைகளுக்குப் பின்னர் நிராகரிக்கப்படும், விடைத்தாள் செல்லாததாக்கப்படும், குறிப்பிட்டுள்ளவாறு குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

| வ. எண் | குற்றத்தின் தன்மை | விலக்கி வைக்கப்படும் காலம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், பிறஅலுவலர்கள் அல்லது ஊழியர்களின் ஆதரவைப் பெற நேரடியாகவோ, கடிதத்தின் மூலமாகவோ, உறவினர், நண்பர், காப்பாளர், அலுவலர் அல்லது வேறொருவர் மூலமாகவோ செல்வாக்கை செலுத்த முயற்சித்தல் | மூன்று ஆண்டுகள் |
| 2. | சாதிச் சான்றிதழ் / ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்/ ஊனமுற்றோர் சான்றிதழ் / முன்னாள் இராணுவ வீரருக்கான சான்றிதழ் / திருநங்கைகளுக்கான சான்றிதழ் / தமிழ்வழியில் பயின்றோருக்கான சான்றிதழ் போன்ற சான்றிதழ்களை போலியாக சமர்ப்பித்தல், ஆவணங்கள் அல்லது சான்றிதழ்களில் ஏதேனும் திருத்தங்கள் அல்லது சேதங்களை ஏற்படுத்துதல். | நிரந்தரமாக மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும் |
| 3. | தெரிவு தொடர்பான பணிகளின் எந்தநிலையிலும் கீழ்க்கண்ட உண்மைகளை மறைத்தல்:<br>(i) முந்தைய தேர்வுகளில் கலந்து கொண்டது மற்றும் இலவச சலுகையினைப் பயன்படுத்தியது.<br>(ii) அரசு அல்லது மத்திய-மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத்துறைக் கழகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ / தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது/ பணிபுரிந்தது<br>(iii) குற்றவியல் நிகழ்வுகள், கைதானது, குற்றங்களுக்கான தண்டனை பெற்றது, ஒழுங்கு நடவடிக்கைகள் முதலியன<br>(iv) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் / மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் / இதர முகமைகளினால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டது. | ஓராண்டு |
| 4. | தேர்வறையின் உள்ளே மின்னணு சாதனங்களான செல்லிடப்பேசிகள், நினைவூட்டுக் குறிப்புகள் உள்ளடக்கிய கடிகாரம் மற்றும் மோதிரங்கள் | நிரந்தரமாக |

| | | |
|---|---|---|
| | (Watches and Rings with inbuilt memory), புளூடூத் உபகரணங்கள் (Bluetooth devices), தொடர்பு சிப்புகள் (Communications Chips), வேறு ஏதேனும் மின்னணு உபகரணங்கள் ஆகியவற்றை வைத்திருத்தல், அறைக் கண்காணிப்பாளர் / வேறு அலுவலர்கள் அல்லது வெளிநபரின் உதவியை நாடுதல் | |
| 5. | தேர்வறையின் உள்ளே மின்னணு சாதனங்கள்அல்லாத P & G Design Data புத்தகம், புத்தகங்கள், குறிப்புகள், வழிகாட்டிக் கையேடுகள், கைப்பைகள், மற்றும் இதர அனுமதிக்கப்படாத பொருட்களை வைத்திருத்தல் | மூன்று ஆண்டுகள் |
| 6. | சகதேர்வர்களுடன் கலந்தாலோசித்தல், சகதேர்வர்களைப் பார்த்து எழுதுதல் / மற்றவர்களை தன்னிடமிருந்து பார்த்து எழுத அனுமதித்தல், புத்தகங்கள் அல்லது அச்சிடப்பட்ட / தட்டச்சு செய்யப்பட்ட / கையினால் எழுதப்பட்ட குறிப்புகளைப் பார்த்து எழுதுதல் போன்றவை. | மூன்றுஆண்டுகள் |
| 7. | பட்டியலில் மேற்கூறப்பட்ட இனங்களைத் தவிர, தேர்வு அறையின் உள்ளேயோ அல்லது வெளியிலோ, ஏதேனும் ஒழுங்கீனம் அல்லது முறைகேடுகளில் ஈடுபடுதல். | மூன்றுஆண்டுகள் |
| 8. | விடைகளுக்கு தொடர்பில்லாத தேவையற்ற குறியீடுகள், தரக்குறைவான மற்றும் ஆபாசமான சொற்களை விடைத்தாள்களில் எழுதுதல். | மூன்று ஆண்டுகள் |
| 9. | விடைத்தாள்களை தாராளப்போக்குடன் திருத்துமாறு அல்லது அதிக மதிப்பெண்களை வழங்குமாறு அல்லது பரிவோடு திருத்தும்படியும் தேர்வாளரைக் கோருதல் | ஓராண்டு |
| 10. | தேர்வாளரை அணுகுதல் அல்லது தேர்வாளரை அணுக முயற்சித்தல் அல்லது அவர் சார்பாக மற்றவர்களைத் தேர்வாளரை அணுகக் கோருதல் | நிரந்தரமாக மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும். |
| 11. | தேர்வுக்கூடத்திலிருந்து, பயன்படுத்தப்பட்ட / பயன்படுத்தப்படாத வினாத்தாளுடன் கூடிய விடைப் புத்தகத்தினை, முழுமையாகவோ / பகுதியாகவோ அறைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் செல்லுதல் மற்றும் பட்டைக்குறியீட்டை சேதப்படுத்துதல். | மூன்று ஆண்டுகள் |
| 12. | மது அருந்திவிட்டு வரும் தேர்வர்கள், தேர்வுக்கூடத்தில் புகைப்பிடிக்கும் தேர்வர்கள், வாக்குவாதத்தில் ஈடுபடும் தேர்வர்கள் மற்றும் முதன்மைக் கண்காணிப்பாளரிடமோ / ஆய்வுக் குழுவினரிடமோ / தேர்வுக்கூடக் கண்காணிப்பாளரிடமோ / சக தேர்வெழுதுபவர்களுடனோ தேர்வு அறையிலோ அல்லது தேர்வுக்கூட வளாகத்திலோ தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும் பொழுதோ, முறைதவறி நடந்து கொள்ளுதல். | மூன்று ஆண்டுகள் |
| 13. | ஆள்மாறாட்டம், தேர்வு நடைபெறுவதை முறியடிக்கும் வகையில் நடந்து கொள்ளுதல் போன்ற கடுமையான ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடுதல் | நிரந்தரமாக மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கப்படும். |

**2. கொள்குறி வகைத் தேர்விற்கான விடைகள் தொடர்பாக முறையீடு**

2.1. கொள்குறி வகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வு நடைபெற்ற நாளிலிருந்து 6 வேலை நாட்களுக்குள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வாணையத்தால் வெளியிடப்படும் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தொடர்பாக முறையீடு செய்ய வேண்டுமானால் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள 'Answer Key Challenge' என்ற சாளரத்தைப் பயன்படுத்தி முறையீடு செய்யலாம் (Recruitment → Answer Keys). உத்தேச விடைகள் தொடர்பான முறையீடு ஏதுமிருப்பின், தேர்வர்கள் உத்தேச விடைகள் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட 7 நாட்களுக்குள், இணையவழி வாயிலாக மட்டுமே முறையீடு செய்ய வேண்டும். அஞ்சல் வழியாகவோ, மின்னஞ்சல் வழியாகவோ பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்பட மாட்டாது.

2.2. உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கான அறிவுரைகள், வழிமுறைகள் ஆகியவை தேர்வாணைய இணையதளத்திலேயே வழங்கப்பட்டுள்ளன. மேலும், முறையீடு செய்ய வழங்கப்பட்டுள்ள காலஅவகாசம் முடிவுற்ற நிலையில் (கணினிவழி மூலமாகவோ அல்லது வேறு வழியாகவோ) பெறப்படும் எவ்வித முறையீடுகளும் பரிசீலிக்கப்பட மாட்டாது.

2.3. கணினிவழியில் உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கு, உரியநேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளானது, ஒவ்வொரு பாடத்திற்கான வல்லுநர்களை கொண்ட குழுவிற்கு பரிந்துரைக்கப்படும். மேலும், வல்லுநர்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இறுதியான விடைகள் முடிவு செய்யப்பட்டு, அதன் பின்னர் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணியானது தொடங்கப்படும்.

2.4. தெரிவுப்பணிகள் முழுமையாக முடிவடையும் வரை, தேர்வு தொடர்பான இறுதி விடைகளை தேர்வாணையம் வெளியிடாது.

**3. கணினிவழித் திரை சான்றிதழ் சரிபார்ப்பு**

3.1.கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்களுக்கு இணையவழி விண்ணப்பத்தில் கோரியுள்ளவாறு சான்றிதழ் பதிவேற்றம் செய்ய 10 நாட்கள் வழங்கப்படும். தேர்வாணையத்தால் குறிப்பிடப்பட்ட நாட்களுக்குள் சான்றிதழை பதிவேற்ற தவறும் தேர்வர்கள் அடுத்தக்கட்ட தெரிவு நடைமுறைக்கு கருதப்படமாட்டார்கள்.

3.2. கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பின் அடிப்படையில் தேவையுள்ள / குறைபாடுடைய ஆவணங்களை பதிவேற்றம் செய்ய 10 நாட்கள் வழங்கப்படும். தேர்வாணையம் குறிப்பிட்ட நாட்களுக்குள் சான்றிதழை மீள் பதிவேற்றம் செய்யாத தேர்வர்களின் இணையவழி விண்ணப்பத்தில் உள்ள உரிமைகோரல்கள் நிராகரிக்கப்படும்.

**4. உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனை**

4.1. தேர்வர்கள், உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனை தேர்விற்கான குறிப்பாணையை தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov.in இலிருந்து பதிவிறக்கம் செய்து கொண்டு வர வேண்டும். தவறினால், அவர்கள் உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனை தேர்வில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். இடம் மாற்றத்திற்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாது.

4.2. தேர்வர்கள் தங்களுடன், ஆதார் அட்டை / கடவுச்சீட்டு / ஓட்டுநர் உரிமம் / நிரந்தர கணக்கு எண் / வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை அடையாளச் சான்றாகக் கொண்டு வர வேண்டும். தேர்வர்கள் இரண்டு கடவுச்சீட்டு அளவு புகைப்படங்களையும் கொண்டு வர வேண்டும்.

4.3. உடற்தகுதித் தேர்வில் தகுதி பெற்ற தேர்வர்கள் மட்டுமே நடைச்சோதனை தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

4.4. தேர்வர்கள் திட்டமிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனைத் தேர்வில் கலந்து கொள்ளவில்லை என்றால், தேர்வர்களுக்கு மேலும் வாய்ப்பு வழங்கப்படாது. உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனைத் தேர்வின் தேதி மற்றும் நேரத்தை மாற்றுவதற்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4.5. தேர்வர்கள் நடைச்சோதனை தேர்வுக்கு தங்களைத் தகுதியாக வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். நடைச்சோதனை தேர்வுக்கு தேர்வர்கள் நல்ல நடைபயிற்சி காலணிகள் மற்றும் உடைகளை கொண்டு வர அறிவுறுத்தப்படுகிறார்கள். நடைச்சோதனை தேர்வுக்கு தேர்வர்கள் தங்கள் அலைபேசி / திறன் கைக்கடிகாரம் கொண்டு வர அனுமதிக்கப்படுவர்.

4.6. உடற்தகுதித் தேர்வு மற்றும் நடைச்சோதனை தேர்வில் பங்கேற்பது அல்லது தேர்ச்சி பெறுவது மட்டுமே தேர்வரது அடுத்த கட்டத் தேர்வுக்கு முழுமையாக பரிசீலிக்கப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

**5. மூலச்சான்றிதழ் சரிபார்ப்பு**

5.1. மூலச்சான்றிதழ் சரிபார்ப்புக்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்கள் இணையவழி விண்ணப்பத்தில் சமர்ப்பித்த சான்றிதழ் சரிபார்ப்புக்காக பதிவேற்றம் செய்யப்பட்ட / மீள் பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து மூலச்சான்றிதழ்களையும் தவறாமல் கொண்டு வர வேண்டும்.

5.2. மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின், தகுதியுடைய தேர்வர்கள் மட்டும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவர். குறிப்பிட்ட தகுதியினை பூர்த்தி செய்யாத தேர்வர்களின் இணையவழி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் அவர்களின் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டது ரத்து செய்யப்படுவதுடன் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

5.3. குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மூலச்சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வர தவறிய தேர்வர்களுக்கு மறு வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது மற்றும் அவர்கள் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**6. கலந்தாய்வு:**

6.1. தேர்வர்கள் தரவரிசையின் அடிப்படையில் கலந்தாய்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். தேர்வர் அறிவிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் கலந்தாய்விற்கு வருகை புரியவில்லை எனில் அதற்கு மேல் அவருக்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படாது.

6.2. கலந்தாய்வின் போது தேர்வர் தெரிவு செய்த பதவியினை வேறு எந்த சூழலிலும் மாற்றித் தரப்பட மாட்டாது.

**பிற்சேர்க்கை V**

## 1. Form for Certificate of Physical Standards

Name of the Candidate :

Father's Name :

Height : ________cm

<u>Chest Measurement</u>

i. On Full Inspiration : ________cm

ii. On Full Expiration : ________cm

iii. Difference (Expansion) : ________cm

Signature of the Medical Officer

Name :

Designation :

Date:

Seal :

Note: The certificate should be obtained from a Medical Officer above the rank of an Assistant Surgeon appointed by the Government to a Government Medical Institution.

**2. Form for Eye Fitness Certificate**

| | | |
|---|---|---|
| 1. Name | | |
| 2. Father's Name | | |
| 3. Visual standard without glasses | Right Eye | Left Eye |
| a. Distant Vision (without glasses) | | |
| b. Near Vision (without glasses) | | |
| 4. Field Vision | | |
| 5. Color Vision | | |
| 6. Fundus appearance | | |
| 7. Whether suffering from Colour blindness? (Yes / No) | | |
| 8. Whether suffering from Night blindness? (Yes / No) | | |
| 9. Standard Vision | | |

| | |
|---|---|
| Date : | Signature of the Specialist in Ophthalmology :<br>Name :<br>Designation :<br>Seal : |

### 3. Form for Certificate for Allocation of Scribe / Compensatory Time

This is to certify that I have examined Mr/Ms/Mrs.________________________ (Name of the candidate with disability) a person with __________________________________(Nature and percentage of disability as mentioned in the certificate of disability), S/o/D/o ______________________________________ a resident of _________________________ (Village / District / State and to state that He / She has physical limitation which hampers his / her writing capabilities owning to his / her disability.

<u>Due to the above mentioned disability following concession may be given</u>:- *

1. Allocation of a scribe.
2. Compensatory time for writing the examination.

*strike out the non applicable.

Signature
(Chief Medical Officer / Civil Surgeon / Medical Superintendent / notified Medical Authority of a Government Health Care Institution / Medical Board)

Name & Designation

Name of Government Hospital / Health Care Centre / The notified Medical Authority / Medical Board

(Photo of the Differently Abled Person and Stamp to be fixed here)

Place:
Date:

Signature / Thumb impression of the Differently Abled Person

Note:
Certificate should be given by a specialist of the relevant stream / disability
(e.g. Visual Impairment – Ophthalmologist, Locomotor disability – Orthopedic Specialist / PMR etc.,)

## 4. Certificate from the Head of Institution/ University

This is to certify that Thiru/Tmt/Selvi.___________________ son / daughter of Thiru/Tmt._________________ bearing Register no. _______________, completed the ______________ course during the academic year _____________ to ____________ in our Institution/University. He/ she has successfully completed all the requirements of the course/program and results for all subjects were declared on _______________

| Photograph of the candidate with the signature of the authorised signatory |
|---|

Office Seal:
Date:

Signature (with Seal) of the Authorised Signatory of the Institution/ University
(Controller of Examinations/ Principal/ Dean/ Registrar)

பிற்சேர்க்கை VI

## LIST OF STATE SPORTS ASSOCIATIONS RECOGNIZED BY SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL NADU

| S. No | Name of the Association |
|---|---|
| 1. | Tamil Nadu Athletic Association |
| 2. | Tamil Nadu State Aquatic Association |
| 3. | Tamil Nadu Gymnastics Association |
| 4. | Tamil Nadu Ball Badminton Association |
| 5. | Tamil Nadu Basketball Association |
| 6. | The Tamil Nadu Billiards & Snooker Association |
| 7. | Tamil Nadu Amateur Body Building Association |
| 8. | The Tamil Nadu Bridge Association |
| 9. | Tamil Nadu Association of Canoeing & Kayaking |
| 10. | Tamil Nadu State Chess Association |
| 11. | Hockey Unit of Tamil Nadu |
| 12. | Tamil Nadu Sports Council of the Deaf |
| 13. | Tamil Nadu Paralympic Sports Association |
| 14. | Tamil Nadu Judo Association |
| 15. | Tamil Nadu State Amateur Kabaddi Association |
| 16. | Tamil Nadu Soft Tennis Association |
| 17. | Tamil Nadu Squash Racket Association |
| 18. | Tamil Nadu Tennikoit Association |
| 19. | Tamil Nadu Tennis Association |
| 20. | Tamil Nadu Triathlon Association |
| 21. | Tamil Nadu Amateur Wrestling Association |
| 22. | Tamil Nadu Wushu Association |
| 23. | Tamil Nadu Amateur Rowing Association |
| 24. | Tamil Nadu Rugby Football Union |
| 25. | Tamil Nadu Roller Skating Association |
| 26. | Tamil Nadu State Amateur Kickboxing Association |
| 27. | Tamil Nadu Sailing Association |
| 28. | Tamil Nadu Surfing Association |
| 29. | Cerebral Palsy Sports Association Tamil Nadu |
| 30. | Tamil Nadu Taekwondo Association |
| 31. | Amateur Tamil Nadu Shooting Ball Association |
| 32. | Tamil Nadu Atya Patya Association |
| 33. | Sports Tamil Nadu Roll Ball Association |
| 34. | Tamil Nadu Table Tennis Association |
| 35. | Tamil Nadu Shooting Association |
| 36. | Tamil Nadu Handball Association |
| 37. | Tamil Nadu Cycling Association |
| 38. | Tamil Nadu State Volleyball Association |